# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 271 ஆவணி 08ஆம் நாள் வெள்ளிக்கிழமை 24 ஓகஸ்ட் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## நேரடியாக இந்தியா சென்றால் ஆபத்தாம்!

கொழும்பு, ஓக. 24
பலாலியிலிருந்து நேரடியாகத் தமிழ்நாட்டுக்கு வானூர்திச் சேவைகளை ஆரம்பிப்பது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று புலனாய்வுப் பிரிவினரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று சிங்கள மொழி ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.
பலாலி வானூர்தி நிலையத்திலிருந்து தமிழகத்துக்கு நேரடி வானூர்திச் சேவைகளை முன்னெடுப்பதனால் பாதுகாப்பு பிரச்சினைகள் உருவாகும் என்று புலனாய்வுப் பிரிவினர் எச்சரிக்கை செய்துள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.
பலாலி வானூர்தித் தளத்திலிருந்து » 25

### அபிவிருத்திச் செயலணியில் பங்கேற்கக் கூடாது எனும்

# விக்கியின் கோரிக்கையை நிராகரித்தது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 24
வடகிழக்கு அபிவிருத்திக்கான அரச தலைவர் சிறப்புச் செயலணிக் கூட்டத்தில் பங்கேற்பது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளார்கள். இந்தக் கூட்டத்தில் பங்கேற்க வேண்டாம் என்ற வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் கோரிக்கையைக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாக நிராகரித்துள்ளனர். » 25

## உந்துருளி விபத்தில் இருவர் உயிரிழப்பு

வவுனியா, ஓக. 24
வெள்ளாங்குளம் சந்திக்கு அண்மையில் நேற்று மாலை நடந்த விபத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்தனர். உந்துருளியும், கன்ரர் ரக வாகனமும் விபத்துக்குள்ளானதில் உந்துருளி » 25

## சம்பந்தனை சந்திக்க விக்னேஸ்வரன் அவா

யாழ்ப்பாணம், ஓக. 24
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைச் சந்திப்பதற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார் என்று கூட்டமைப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் » 25

## எல்லை வரம்பு அறிக்கையை கூட்டமைப்பு எதிர்த்து பேசும்

*பழைய முறையில் தேர்தலை நடத்தவும் வலியுறுத்து*

யாழ்ப்பாணம், ஓக. 24
மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை வரம்பு அறிக்கையை எதிர்த்துப் பேசுவதற்கு கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது. வாக்கெடுப்பு நடத்தப்பட்டால், அதை எதிர்த்து வாக்களிக்கவும் தீர்மானித்துள்ளது.
கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்திலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
மாகாணசபைத் தேர்தல் உடன்டியாக நடத்தப்படவேண்டும். புதிய முறையில் நடத்துவதற்கு » 21

## பொருளாதார நன்மையும் முக்கியம் மிக்க விடயமே

*தமிழ்க் கூட்டமைப்பு தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஓக. 24
அரசியல் தீர்வு முதன்மையானது. அதற்கான முயற்சிகள் ஒரு தளத்தில் நடந்து கொண்டிருக்கின்றன. அதேவேளை மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு பொருளாதார நன்மையும் முக்கியமானது. ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் உரிய பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும். அதற்காகவே வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கான அரச தலைவர் செயலணியில் பங்கேற்க » 25

## வாக்கெடுப்பா? இல்லையா? இன்றைய கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 24
மாகாண சபைகளுக்கு புதிய முறைமையின் கீழ் அதாவது கலப்பு முறையில் தேர்தல் நடத்தும் நோக்கில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள » 25

## திணைக்களங்கள் ஊடாக தமிழரின் நிலங்கள் பறிப்பு

*அரச தலைவர் மைத்திரியிடம் சுட்டிகாட்டினார் சாள்ஸ் எம்.பி.*

யாழ்ப்பாணம், ஓக.24
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவம் நிலங்களைக் கையகப்படுத்துவது நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால் திணைக்களம் ஊடாக நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன என்று அரச தலைவர் மைத்திரிபாலவிடம் சுட்டிக்காட்டினேன் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை நேற்று நாடாளுமன்றில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே இந்த விடயம் பேசப்பட்டது என்று நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.
இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்ததாவது: » 25

## பாதுகாப்பைக் காரணம் காட்டி நிலங்களைப் பறிக்கக்கூடாது

*வலியுறுத்துகின்றது ஜே.வி.பி.*

கொழும்பு, ஓக. 24
தேசிய பாதுகாப்பை முன்னிறுத்தி போர் முடிவடைந்த பின்னரும் தமிழ் மக்களின் காணிகளை இராணுவத்தினர் ஆக்கிரமித்துவைத்திருப்பது வடக்கு மக்களை பிரித்தாளுவதாகவே இருக்கின்றது. அரசு வடக்கில் காணிகளை விடுவிக்கின்றது என்று கூறுகின்றது. அது பன்னாட்டுச் சமூகத்தை » 21

## பறித்துச் சென்ற உந்துருளி எரிப்பு

யாழ்ப்பாணம், ஓக.:24
கொக்குவிலில் வாள்வெட்டுக் குழுவால் நேற்றுமுன்தினம் பறித்துச் செல்லப்பட்ட உந்துருளி தீயிட்டு எரிக்கப்பட்ட நிலையில் நேற்றுக் காலை பிரம்படி வீதியில் மீட்கப்பட்டது.
யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் நேற்றுமுன்தினம் மாலை வாள்வெட்டுக் குழுக்கள் அட்டகாசத்தில் ஈடு » 21

## தொடருகின்றது கடலட்டைத் தொழில்

*வடமராட்சி மீனவர் சமாசம் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், ஓக. 24
வடமராட்சி கிழக்கில் வெளிமாவட்ட மீனவர்கள் கடலட்டை பிடிப்பது நிறுத்தப்படும் என்று யாழ்ப்பாணத்துக்கு வந்த மீன்பிடி அமைச்சர் வாக்குறுதியளித்திருந்தார். அமைச்சரின் » 25

## வடக்கு மக்களை கையாள தமிழ் பொலிஸார் இல்லை

*இணைய முன்வர வேண்டுமென்று சட்டம், ஒழுங்கு அமைச்சர் அழைப்பு*

கொழும்பு, ஓக.24
வடக்கில் தமிழ் மக்களைக் கையாளத் தமிழ் தெரிந்த பொலிஸார் இல்லை. தமிழ் மொழி மூலத் தேர்ச்சி பெற்ற பொலிஸார் இல்லாதது பிரச்சினையாகவுள்ளது. 15 வீதமான பொலிஸாரே தமிழ் பேசுகின்றனர். தமிழ் மக்கள் பொலிஸில் இணையவேண்டும். தமிழர்களை இணைத்துக் கொண்டு வடக்கில் சிவில் பாதுகாப்பை » 25

உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள newuthayan.com

## இளைஞர் கைது


யாழ்ப்பாணம், ஓக. 24
கொக்குவிலில் வீடுகளுக்குள் சென்று வன்முறையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் யாழ்ப்பாணப் பொலிஸாரால் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
நேற்றுமுன்தினம் மாலை » 25


## ஓ.எம்.பிக்குக் கடும் சவால்

*அதன் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 24
காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்ற உண்மையைக் கண்டறிவதற்காக காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகம் செயற்படுவதில் தடைகளை விட சவால் » 21





வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத் தேர்த் திருவிழா நேற்றுக் காலை இடம்பெற்றது. நேற்று அதிகாலை 4.30 மணிக்கு உசக்காலை பூசை நடை பெற்று, காலை 6 மணிக்கு தம்ப பூசை, காலை 6.30 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று 9 மணிக்கு அம்மன் தேரில் எழுந்தருளினார். காலை 9.30 மணிக்கு தேர் இருப்பிடத்திலிருந்து புறப்பட்டது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர். தமது நேர்த்திக் கடன்களையும் நிறைவேற்றினர். (5,7,114)

# மாணவியை கடத்தி வன்கொடுமை முதன்மை சந்தேகநபருக்கு மறியல்

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவி ஒருவர் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டார் என்று கூறப்படும் சம்பவத்தின் முதன்மைச் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 20.ஆம் திகதி உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு வீடு திரும்பிய 19 வயது மாணவி வாகனத்தில் கடத்தப்பட்டுப் பளைப் பகுதிக்குக் கொண்டுவரப்பட்டு வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டார் என்று கூறப்படுகின்றது. மறுநாள் காலை மாணவியை உடையார்கட்டுப் பகுதியில் இறக்கிவிட்டுக் கடத்தியவர்கள் தப்பிச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸாரிடம் பாதிக்கப்பட்ட மாணவியின் தாய் முறைப்பாடு செய்திருந்தார்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் இந்தக் கடத்தலுக்கு ஒத்தாசையாக இருந்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரை மறுநாள் மாலை கைது செய்திருந்தனர். அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அன்றைய தினம் இரவே முதன்மைச் சந்தேகநபரான 22 வயது இளைஞரும் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்டவரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகநபரை நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தினர். சந்தேகநபரை எதிர்வரும் 4ஆம் திகதி விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ற-ரி3)

# மாடுகள் கொல்லப்படுவதை தடைசெய்த மத்துகம சபையினருக்கு மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 24

இலங்கையில் முதன்முறையாக மாட்டிறைச்சிக்காக மாடுகளைக் கொலை செய்யவும் விற்பனை செய்வதையும் தடை செய்த மத்துகம பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்து அமைப்புகள் ஒன்றிணைந்து மதிப்பளிக்கவுள்ளன.

இன்று மாலை 6.00 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பசுவதைகளை நிறுத்தக் கோரி மாவட்ட இந்து அமைப்புகள் போராட்டங்கள் நடாத்தி வரும் நிலையில் மாடுகளை வெட்டப்படுவதை முழுமையாகத் தடை செய்து தமது கோரிக்கைக்கு செவிசாய்த்த களுத்துறை மாவட்டத்தின் மத்துகம பிரதேச சபையினருக்கே இன்று மதிப்பளிக்கப்படவுள்ளது. (5.9)

# சந்நிதி தேருக்காக வர்த்தகர்களுக்கு விடுமுறை

யாழ்ப்பாணம், ஓக. 24

வரலாற்றுப் புகழ்மிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய தேர்த் திருவிழா நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. இதற்காக, நெல்லியடி வர்த்தக சங்கத்துக்கு உட்பட்ட வர்த்தக நிலையங்கள் அனைத்துக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக நெல்லியடி வர்த்தக சங்கச் செயலர் தெரிவித்தார். (5.422)

# பெண்ணின் வயிற்றிலிருந்து 1.5 கிலோ முடி அகற்றப்பட்டது

## கல்முனை மருத்துவமனையில் சம்பவம்

அம்பாறை, ஓக. 24

பெண் ஒருவரின் உணவுக் கால்வாய்த் தொகுதியை அடைத்திருந்த சுமார் 1.5 கிலோ நிறையுடைய முடி சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ளது. கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனையின் பொதுச் சத்திர சிகிச்சை நிபுணர் இந்தச் சத்திர சிகிச்சையை வெற்றிகரமாக செய்து முடித்துள்ளார்.

இது தொடர்பில் மருத்துவர் தெரிவித்துள்ளதாவது,

25 வயதுடைய பெண் நோயாளி ஒருவர் வித்தியாசமாக வாந்தி எடுத்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மேல் வயிற்றில் கட்டி போல் தென்பட்டது. இரைப்பை முழுவதும் முடி அடைத்து காணப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டது. பின்பு சத்திர சிகிச்சை செய்யப்பட்டு சுமார் 1.5 கிலோ கிராம் எடையுள்ள முடி மீட்கப்பட்டது.

முடியானது இரைப்பை, முன் சிறுகுடல், சிறு குடல் வடிவில் வடிவமைக்கப்பட்டு காணப்பட்டிருந்தது. இவர் பல நாள்களாக முடியை உட்கொண்டிருக்க வேண்டும். பொதுவாக மிருகங்களுக்கே இவ்வாறான முடி அடைப்பு நிகழ்வுகள் நடக்கின்றன. மனிதர்களில் இவ்வாறு முடியை உட்கொண்டு வருவது மிகவும் அரிது.

முடியானது சமிபாடடையாது. அது வயிற்றினுள் அடைபட்டுக் காணப்படும் போது இரைப்பையில் அமில அரிப்புகள் காயங்கள், துவாரங்கள், சதையில் அழற்சி தொடர்ச்சியான வாந்தி, வயிற்று வலி என்பன ஏற்பட வாய்ப்பும் உள்ளது. கண்டுபிடிக்கத் தவறினால் உயிராபத்தும் ஏற்படலாம் என்றார். (5)



# மயிலிட்டி தொண்டமனாறு பாதை இரவு 11 மணிவரை திறக்கப்படும்

செல்வசந்நிதி உற்சவத்தை முன்னிட்டு, மயிலிட்டி ஊடாக தொண்டமனாறு செல்லும் கரையோர வீதி இரவு 11 மணி வரை திறக்கப்படும் என்று இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

மயிலிட்டி ஊடாக தொண்டமனாறு செல்லும் கரையோர வீதியில் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் உள்ள வீதி இரவு 7 மணியுடன் மூடப்படும். வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், சந்நிதி உற்சவத்துக்காக வீதியைத் திறந்து விடுமாறு இராணுவத்தினரிடம் கோரிக்கை விடுத்திருந்தார். இராணுவத்தினர் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமைவரை, இரவு 11 மணிவரையில் பாதையைத் திறந்து விடுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். (5.26)



# தற்கொலைக்கு எதிராக விழிப்புணர்வு போராட்டம்

அதிகரித்துச் செல்லும் தற்கொலையைத் தடுத்து நிறுத்துவதற்கு, மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகள் வவுனியா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வவுனியா பிராந்திய சமுதாயப் பொலிஸ் பிரிவினர், வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தினர், இறம்பைக்குளம் ஈ.சி.சுவிசேகசபையினர் ஆகிய தரப்பினர் இணைந்து தற்கொலைக்கு எதிரான செயற்திட்டத்தை முன்னெடுத்தனர்.

வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் நேற்று மாலை 4.30 மணியளவில், வவுனியா பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எம்.தென்னக்கோன், தற்கொலைக்கு எதிரான ஸ்ரிக்கர் ஒட்டும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

'மனிதனை நம்பாதே தற்கொலை செய்யாதே' என்ற வாசகங்கள் அடங்கிய ஸ்ரிக்கர்களே ஒட்டப்பட்டது.

வவுனியாவில் கடந்த ஆறு மாதங்களில் 30 பேருக்கு மேற்பட்டவர்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். இன்னும் பலர் முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர். இதனைத் தடுத்து நிறுத்துவதற்கே இந்த முயற்சிகளை ஆரம்பித்துள்ளதாக, வவுனியா பதில் தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்.எம்.எஸ்.குமாரசிங்கே தெரிவித்துள்ளார். (5.110)

# ராணுவத்துக்கு புலனாய்வுத் தகவல் வழங்க விக்கி போன்ற அரசியல்வாதிகளே போதும்

## முதலமைச்சரைக் கடுமையாகச் சாடுகிறது ஜனநாயகப் போராளிகள் கட்சி

நாட்டில் போர் நடைபெறுகின்றபோது புலனாய்வுத் தகவல் தேவையும், போர் முடிந்ததன் பின்னரான புலனாய்வுத் தகவல் தேவைக்கும் நிறையவே வேறுபாடுகள் உள்ளன. அந்த தேவைகளைப் போராளிகள் மேற்கொள்ள வேண்டிய தேவையில்லை. அதற்குஎப்போதும் போராளிகள் தயாராகுவதுமில்லை. உங்களைப் போன்ற அரசியல்வாதிகளின் தயவு அவர்களுக்குப் போதுமானது. இவ்வாறு ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசி தெரிவித்தார்.

'முன்னாள் போராளிகளை முகாம்களில் வைத்திருந்தபோது அவர்களில் சிலரை இராணுவத்தினர் தம்வசமாக்கியுள்ளனர். தமக்குத் தேவையான தகவல்களைப் பெற முன்னாள் போராளிகளை இராணுவம் பயன்படுத்துகின்றது' என்று வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தாயகவிடுதலைக்காகத் தமது உன்னத உயிர் [illegible] உடைமை அனைத்தையும் ஈய்ந்து போராடியவர்கள். முள்ளிவாய்க்கால் போர் ஓய்வின் பின்னர் ஏதுமற்றவர்களாக வாழ்துவரும் இடர்பாடு மிக்க துர்பாக்கிய சூழ்நிலையில தாயக அரசியல் பரப்பில் எம்மை ஓரங்கட்டும் நிகழ்ச்சி நிரலில் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் எம்மை பெரிதும் விசனத்துக்குள்ளாக்கி இருக்கின்றது.

எமது அமைப்பில் போராடி உயிர்நீத்தவர்கள் போக இறுதியில் கைதாகிய 12 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இலங்கை சிறைகளிலும் பின்னரான தடுப்பு முகாம்களிலும் சொல்லண்ணா வலிகளையும் துயரங்களையும் சந்தித்திருக்கின்றோம். அதனையும் எமது போராளிகள் விடுதலைக்கு செலுத்திய விலையாகவே கருதுகிறோம்.

போராளிகள் தொடர்பான முதலமைச்சரின் கருத்துக்கள் தொடர்பில் அது தொடர்பான ஆதாரத்தை முதல்வர் பகிரங்கப்படுத்த வேண்டும் [illegible] பின் பதிலளிக்கவேண்டும். போராளிகள் ஒரு இனத்தின் சாதியக் குறியீடுகள் அல்ல. அவர்கள் இனத்தின் விடுதலைக்குறியீடுகள் என்பதனை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் என்றுள்ளது. (5.110)

# மீண்டும் முதலமைச்சராக விக்கி போட்டியிட வேண்டிய தேவை என்ன?

## கேள்வி எழுப்பும் மாகாணசபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம்



தற்போதைய வடக்கு மாகாண சபையில் எந்தவித முன்னேற்றமும் காணவில்லை ஆனால் அடுத்த மாகாண சபைத் தேர்தலில் தான் கண்டிப்பாகப் போட்டியிடவேண்டும் என முதலமைச்சர் விடாப்பிடியாக நிற்பதன்நோக்கம்என்னவெனவடக்குமாகாணசபைஉறுப்பினர்ப.சத்தியலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

வவுனியாவில் உள்ள அவரது தாயகம் அலுவலகத்தில் நேற்று மாலை விளையாட்டுக்கழகங்களுக்கானஉதவித்திட்டத்தைவழங்கி வைத்த பின் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

கூட்டமைப்பில் இருந்து கொண்டே. கூட்டமைப்புக்குஎதிராகவும்அல்லதுகூட்டமைப்புடன்ஒத்துஇயங்குகின்றதன்மையில்இருந்து கடந்தமூன்றுவருடங்களுக்குமுதலேமுதலமைச்சர் வெளியேறிவிட்டார். கூட்டமைப்பினுடையமாகாணசபை அறுதிப்பெரும்பான்மையுடன் செயற்படுகின்ற இந்த சபையிலே தாங்கள் கூட்டமைப்பு இல்லை என்று சொல்லிக்கொண்டுஅல்லதுதாங்கள்கூட்டமைப்புக்கு வெளியேஇருந்துசெயற்படுவதாகசொல்லிக் கொண்டிருப்பவர்கள் அந்த பதவியில் இருப்பதற்கு தகுதியற்றவர்கள். அவர்கள் கூட்டமைப்புஇல்லைஎன்றுசொன்னால்அவர்கள் கூட்டமைப்பினுடைய சபையிலே இருப்பது என்பதும். பதவி வகிப்பது என்பதும் அநாகரிகமானது.

கட்சிஇல்லாத மாகாண சபைஉறுப்பினர்கள் முதலமைச்சர் மாத்திரமல்ல. மாகாண சபை உறுப்பினர்களான பொ . ஐங்கரநேசன், அனந்திசசிதரன்போன்றோர்தாங்கள்எந்தக் கட்சியும்இல்லை என்று சொல்கிறார்கள்.

ஆனால் தேர்தலில் எந்தக் கட்சியும் இல்லாமல் அவர்கள் வாக்குக் கேட்டு மாகாண சபைக்கு வரவில்லை. இவர்கள் அனைவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு வந்தவர்கள். அதற்கு ஒரு படி மேலே சென்றுபொ.ஐக்கரநேசன்சொன்னதாகஒரு பத்திரிகைச்செய்தியை பார்த்தேன்.

கூட்டமைப்பு என்பது ஒரு கூழ் முட்டை

கூட்டமைப்பு என்பது ஒரு கூழ் முட்டை என்றும்அதற்குஅடைகாக்கமுடியாது. அடைகாப்பதுபிரயோசனமற்றது என்றும்தெரிவித்துள்ளதாக பார்த்தேன்.

அப்படியென்றால்அவரும்கூழ்முட்டைதான். கூழ்முட்டைக்குள்தான்அவரும்இருக்கிறார். கூட்டமைப்பினுடைய அங்கத்தவராக தான் இன்றும்பதவியில்இருக்கிறார். நான் இன்று சொல்வதைக் கேட்டு சிலவேளை மாகாண சபை பதவியை அவர் தூக்கியெறியலாம். ஏனென்றால் மாகாணசபைநிறைவுபெறுவதற்கு இன்னும் குறிப்பிட்ட சில நாட்கள் தான் இருக்கிறது.

ஆகவே. வாக்குப்போட்டமக்களுக்குவிசுவாசமாக எல்லா இடத்திலும் சரி பிழை வரும். அந்தசரிபிழைகளைதிருத்திக்கொண்டுஇந்த மாகாணசபைதிறம்படநடத்திமக்களுக்குரிய சேவையை வழங்கியிருக்க வேண்டும்.

சில அமைச்சுக்கள், சில திணைக்களங்கள் மக்களுக்குசிறந்தசேவையைவழங்கியிருக்கிறது. ஆனால் இந்த மாகாண சபை திறம்பட செயற்படாமைக்குஅந்தமாகாணசபையினுடையவழிகாட்டியாகஇருக்கின்றமுதலமைச்சரே முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

### முதலமைச்சரின் புதிய கூட்டு

ஆகவே அந்தபுதியகூட்டு என்பதுதமிழ்தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான அல்லது தமிழரசுக்கட்சிக்குஎதிரானஒருகுழுவாகஇயங்குவதற்கு அவர்கள் முயற்சிகள் எடுப்பதாக நாங்கள் அறிகிறோம். அப்படியானதொரு புதிய அணியின் ஊடாக முதலமைச்சர் அவர்கள் வந்தாலும் மக்கள் அதற்குரிய தீர்ப்பை வழங்குவார்கள் என நான் நம்புகின்றேன்.

நாங்கள்எல்லோரும்இந்தஅரசியலுக்குவந்தமைக்குரிய காரணம், 30 வருட போரில் சின்னாபின்னமாக இருக்கின்ற எங்களது தேசத்தை மீளகட்டியெழுப்ப வேண்டும் என்பதற்காகவே. அந்தஎண்ணத்தைஎவ்வளவு தூரம் மனதில் வைத்துக் கொண்டு எமது அரசியல்வாதிகள்செயற்படுகின்றார்கள்என்பது கவலைக்குரிய விடயம்.

மாகாணசபையிலேயே செய்யப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைகள், ஏனைய வேலைகள், அரசியல்வேலைகள் என்பவற்றில் என்ன என்ன வேலைகளை நீங்கள் செய்தீர்கள்.

என்ன வேலை முடித்திருக்கிறீர்கள். என்னத்தை செய்வதற்கு முதலமைச்சருக்குரிய ஒரு 5 வருடம் தேவையாக இருக்கிறது…? என்பதை முதலமைச்சர் வெளிப்படுத்துவாராகஇருந்தால்அவைஏற்றுக்கொள்ளத்தக்க வேலைத்திட்டங்களாகஇருந்தால்அவருக்கு பின்னால் நிற்பதற்கு நாங்களும் தயாராக இருக்கிறோம்.

ஆனால் அதற்கு மாறாக கடந்த 5 வருடங்களிலே எந்தவிதமான முன்னேற்றங்களும் இல்லாத பல விடயங்களை குழப்பியடித்த நிலை இருக்கும் போது திருப்பவும் முதலமைச்சராகஇருக்க 5 வருடம்கேட்பதுஎன்ன நியாயத்தில், என்ன அடிப்படையில் என்பது புரியவில்லை.

நாங்கள் தொடர்ந்தும் மக்களை ஏமாற்ற முடியாது. நாங்கள் பதவிக்கு வந்தால் 30 வருட போரால் துன்பப்பட்ட மக்களது துன்பத்தை போக்குவதற்கானவேலைத்திட்டத்தைமுன்னெடுக்க வேண்டும். அப்படி எம்மால் முன்னெடுக்கப்படாவிட்டால், அந்ததிறன்எம்மிடம் இல்லை என்றால் அல்லது திறன் இருந்தும் பலர் எம்மை தடுக்கிறார்கள் என்றால் நாம் இதிலிருந்து ஒதுங்கிபோவதுதான்நல்லவிடயம். செய்யக் கூடியவர்கள் வந்து செய்வார்கள். அதை விடுத்து வெறும் பதவிக்காகவும், காழ்புணர்ச்சிக்காகவும், அரசியல் போட்டிக்காகவும் மீண்டும் மீண்டும் வந்து இன்னுமொரு 5 வருடத்தை வீணாக்கி இந்த மக்களுக்களின் வாயில் மண் அள்ளிப் போடுவதாகதான் அமையும் எனத் தெரிவித்தார். (110)



## பௌத்த சமயமே நல்லிணக்கத்துக்கு தலைமைத்துவம் வழங்குகிறது

கொழும்பு.ஓக 24

பௌத்தம் பலவந்தமாக எவரையும் மதத்தில் இணைந்து கொள்ளுமாறு வற்புறுத்தும் சமயம் அல்ல எனவும். சகவாழ்வு மற்றும்நல்லிணக்கத்துக்குபௌத்த சமயமே தலைமைத்துவம் வழங்குகிறதாகவும்வடமாகாண ஆளுநர்றெஜினோல்ட்குரேதெரிவித்துள்ளார்.

பிரதேச சபையின் அனுமதியில்லாமல் தையிட்டில் விகாரைக்கு நேற்று முன்தினம் அடிக்கல் நடப்பட்டது. இந்தநிகழ்வில்பங்கேற்று உரையாற்றுகையிலேயேமேற்கண்டவாறு கூறினார்.

30ஆண்டுகாலபோரில்கடுமையாக சேதமடைந்த யாழ்ப்பாணம், காங்கேசன்துறை திஸ்ஸ விகாரையை அமைப்பதற்கான அடிக்கல்லை நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர்றெஜினோல்ட் குரேநாட்டிவைத்தார்.

அங்குதொடர்ந்தும்கருத்துவெளியிடுகையில்.

பௌத்த சமயத்தைத் தவிர உலகில்வேறுஎந்தவழிபாட்டுதலங்களிலும்தெய்வங்களின்படங்கள் அல்லது வேறு மத தலைவர்களின் படங்கள் வைக்கப்படுவதில்லை என்பதுடன் வழிபட வாய்ப்பில்லை.

எனினும் பௌத்த சமயத்துக்கு அப்படியான வரையறைகள் கிடையாது. பௌத்தம் பலவந்தமாக எவரையும் மதத்தில் இணைந்துக் கொள்ளுமாறு வற்புறுத்தாது. இதனடிப்படையில் நோக்கினால், சகவாழ்வுமற்றும் நல்லிணக்கத்துக்கு பௌத்த சமயமேதலைமைத்துவம்வழங்குகிறது என்பது தெளிவானது.

விகாரை என்பது வேறு மதங்களையும், வேறு இனங்களையும் சவாலுக்கு உட்படுத்தும் இடமாக இருக்கக் கூடாது எனவும் ஆளுநர் றெஜினோல்ட் குரே குறிப்பிட்டுள்ளார்.

## வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள கலாசார விழா

மடுப் பிரதேச கலாசார விழா நேற்று மடுப் பிரதேச செயலகத்தின் கேட்போர்கூடத்தில் மடுப்பிரதேசசெயலர்பீ.ஜெயகரன்தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மன்னார் மாவட்டச்செயலர் கி. அ. மோகன்ராஸ்பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

மடுப் பிரதேச செயலகம் கலாசாரப் பேரவையுடன் இணைந்து இதனை ஏற்பாடுசெய்தது.

வடமாகாண பண்பாட்டலுவல்கள்திணைக்களம்மற்றும்கலாசார திணைக்களம் என்பன கலாசார விழாவுக்கு அனுசரணை வழங்கினர்.

தமிழ் பண்பாட்டு பேரணி இடம்பெற்று விருந்தினர்கள் விழா மண்டபத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

பல்வேறு அம்சங்கள்பொருந்தியகலைநிகழ்வுகளும்இடம்பெற்றன. கலை கலாசார மேம்பாட்டுக்காக சேவையாற்றிய கலைஞர்கள் மாவட்டச் செயலரினால்பொன்னாடைபோர்த்தி, விருதுகள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்

## தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு இரண்டு நாள் கருத்தரங்கு

கொழும்பு.ஓக 24

உலக நாடுகளின் 50 நாடுகளின் தேர்தல்கள் ஆணையாளர்கள் பங்குகொள்ளும் இரு நாள் கருத்தரங்கு இம்மாத இறுதியில் இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார். குறித்தஇருநாள்கருத்தமர்வுதொடர்பில்நேற்று முன்தினம் தினம் தேர்தல்கள் செயலகத்தில் அதன் தலைவர் மற்றும்உறுப்பினர் இ.கூல்ஆகியோர்தலைமையில்இடம்பெற்ற செய்தியாளர்சந்திப்பிலேயேமேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கே குறித்த விடயம் தொடர்பில் தலைவர் மேலும் தெரிவிக்கையில்,

50நாடுகளின்தேர்தல்ஆணையாளர்களுக்கானசிறப்பு கலந்துரையாடல் 27 , 28 ஆகியதினங்களில்கொழும்பு தாஜ் சமுத்திரா விடுதியில் இடம்பெறவுள்ளது. குறித்த கலந்துரையாடலின் ஆரம்ப நிகழ்வை அரச தலைவர் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

கலந்துரையாடல்களில் சிறந்த தேர்தல் நடைமுறைகளைக்கொண்டநாடுகளான இங்கிலாந்து, கனடா, சுவிஸ் உள்ளிட்ட 50 நாடுகளின் ஆணையாளர்கள் கலந்து கொண்டு தங்கள் நாடுகளின் அனுபவங்களையும் அதற்கு மேற்கொள்ளக் கூடியதான சீர்திருத்தங்கள் தொடர்பிலும் விளக்கமளிப்பார்கள் எனத் தெரிவித்தார். (105)



## சப்பறத் திருவிழா

ஆனைக்கோட்டை, ஓக.24

ஆனைக்கோட்டை சிறி வரத விக்ன விநாயகர் ஆலய பெருந்திருவிழாவின் சப்பறத் திருவிழா இன்று இரவு 8 மணிக்கு இடம் பெறும்.

தொடர்ந்து நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என்று ஆலய நிர்வாகசபையினர் அறிவித்துள்ளனர்.

## பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், ஓக 24

புதிய சோனக தெரு ஜே/88 கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை புதிய குடியிருப்பு இளையநிலா சனசமூக நிலையத்தில் மாலை 4 மணிக்கு சங்கத் தலைவர் சி.க தம்பிராசா தலைமையில் நடைபெறும்.

# நெடுந்தீவு மருத்துவமனையில் நிரந்தர மருத்துவரின்றி அவலம்

## மருத்துவர் எவரும் வருகிறார்களில்லை என்கிறார் மாகாண அமைச்சின் செயலர்

யாழ்ப்பாணம்,ஓக. 24

நெடுந்தீவு பிரதேச மருத்துவமனைக்கு நீண்ட காலமாக நிரந்தர மருத்துவர் இன்றிச் சிரமங்களை எதிர்கொள்வதாகப் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது ஏனோதானே என்றுதான் மருத்துவசேவை நடைபெற்று வருகிறது. முதலமைச்சர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்தும் எந்தவிதமான நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை. பல ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்கள் கூட்டப்பட்டனவே தவிர எந்தவிதமான பலனும் இல்லை என்றும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்தாவது:

கடந்த 14ஆம் திகதியிலிருந்து நிரந்தர மருத்துவர்கள் இல்லாமல் பெரும் துன்பங்களைச் சந்தித்து வருகின்றோம். இரவு நேரங்களில் மருத்துவர் இல்லாது போனால் என்ன நிலைமை உருவாகும் என்பதை ஒரு கணம் உரிய தரப்பினர் சிந்திக்க வேண்டும். தற்காலிகமாக மருத்துவர் வேண்டாம். நிரந்தர மருத்துவரை நியமிக்க வேண்டும் . எமக்கான மருத்துவரை நியமிக்காத பட்சத்தில் போராட்டத்தில் ஈடுபடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.திருவாகரனிடம் கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:

நெடுந்தீவு மருத்துவமனையில் நிரந்தர மருத்துவர் இல்லை என்பது தொடர்பில் கொழும்பு சுகாதார அமைச்சுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களும் வருடம்தோறும் எந்தப் பிரதேசத்தில் மருத்துவர்கள் இல்லை என்பதை விளம்பரப்படுத்துவார்கள். நெடுந்தீவில் பணியாற்ற மருத்துவர்கள் எவரும் முன்வருவதில்லை. ஓய்வுபெற்ற மருத்துவர் ஒருவர் தற்போது மீள் நிரப்பல் சேவைக்காக நியமிக்கப்பட்டுள்ளார். சேவையை எந்தநாளும் வழங்குங்கள் என்று அவருக்கும் நாம் அழுத்தம் கொடுக்க முடியாது. இந்த நிலையில் பல்வேறு மருத்துவ மனைகள் உள்ளன என்று தெரிவித்தார். (4.7.137)

## தண்ணீர், மென்பானப் போத்தல்களை வெயிலில் வைக்காதீர் என அறிவுறுத்து

யாழ்ப்பாணம்.ஓக. 24

நல்லூர் ஆலயச் சுற்றாடலில் உள்ள வர்த்தக நிலையங்களில் சோடாப் போத்தல்கள், தண்ணீர்ப் போத்தல்களை வெயிலில் வைத்துக் காட்சிப்படுத்துவதை, விற்பனை செய்வதைத் தவிர்க்குமாறு யாழ்ப்பாண மாநகர சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

தண்ணீர்ப்போத்தல்கள், குளிர்பானப் போத்தல்கள் வெயில்படும் இடத்தில் வைக்கப்படுவதால் அவை பழுதடையலாம். இவற்றை நுகர்வோர் பாவிப்பதால் நோய்கள் ஏற்படலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சுகாதாரப் பிரிவினர் இது சம்பந்தமான அறிவுறுத்தல்களை வர்த்தக நிலையங்களுக்குத் தெரிவித்து வருகின்றனர். (4.17)

## வரலக்சுமி விரதம்

யாழ்ப்பாணம் வண்ணை சிறிவேங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் வரலக்சுமிவிரதம் இன்றுவெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு சிறிமகாலக்சுமி அம்பாளுக்கு நவகலச அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமாகும். மதியம் 1.30மணிக்கு சிறப்புத்பாராதனை, அர்ச்சனை வழிபாடுகள் நடைபெற்று அம்பாள் பதமாசனத்தில் திரு வீதியுலா வருதலுடன் நோன்பு நூல் வழங்கப்படும். நோன்பு நூல் பெறவிரும்பும் அடியார்கள் தங்கள் விவரங்களை ஆலய பணியகத்தில் பதிவு செய்து பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆதீன மகா சபை தெரிவித்துள்ளது.




கொடிகாமம் ஐயனார் கோவில் வீதியில் அமைந்திருக்கும் வன்னியர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெற்றது. தொடர்ந்து சிறப்புப் பூசைகளும் வளந்துப் பொங்கலும் வழிவெட்டுப் பூசையும் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து கிராமத்தில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு ஆலய நிர்வாகத்தினர் கற்றல் உபகரணங்களை வழங்கினர் என்ற தெரிவிக்கப்பட்டது. (159)

## வேளாங்கன்னி ஆலய பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்.ஓக.24

யாழ்ப்பாணம் கிழக்கு அரியாலை அன்னை வேளாங்கன்னி யாத்திரைத்தல வருடாந்தப் பெருந்திருவிழா நாளை நடைபெறவுள்ளது. காலை 7 மணிக்கு திருசொருப மாலையும் தொடர்ந்து திருவிழாத் திருப்பலி இடம்பெற்றுத் திருச்சொருபப் பவனியும் நடைபெறவுள்ளதாகப் பங்குத்தந்தை செபஸ்ரியன் அடிகள் தெரிவித்துள்ளார். (135)



# நல்லூரில் இன்று

நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் இன்று இசைக்கச்சேரிகள் இரண்டு இடம்பெறவுள்ளன.

இசைக்கச்சேரி ஒன்றில் பாட்டு புன்னியா செல்வமுருகானந்தன்.

வயலின்ஜெயராமன்.மிருதங்கம் சதா.வேல்மாறன், கெஞ்சிரா க.நந்தகுமாரும் இசைக்கச்சேரி இரண்டில் பாட்டு தர்ஷனி அருளானந்தம்.வயலின் எஸ்.திவாகரன். மிருதங்கம் வை.வேணிபாலன்.கடம் மு.சுலக்சன், கெஞ்சிரா கி.ஆனந்தகோபன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

நிகழ்வு மாலை 6.45 தொடக்கம் 7.45 வரை இடம்பெறும்.

***

நல்லூர் மனோன்மணி அம்மன் ஆலயத்தில் "சந்தத் தமிழ்" என்ற தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும். சைவசின்மயர் நித்தியானந்தா சொற்பொழிவாற்றுவார். நிகழ்வு மாலை 6.45 தொடக்கம் 7.45 வரை இடம்பெறும்

***

இந்துசமய. கலாசார அலுவல்கள் திணைக்கள ஏற்பாட்டில், நல்லூர் சிறிலசிறி ஆறுமுகநாவலர் மணிமண்டபத்திலும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்திலும் சிறப்புற பக்தி நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

நல்லை ஆதீன மண்டபத்தில் இன்று "நீதியால் உலகு அளிப்பதே அரசர்தம் நெறி" எனும் தலைப்பில் சைவப்புலவர் பொன்.சக்திவேல் சொற்பொழிவாற்றுவார்.

நல்லைத் திருஞானசம்பந்த ஆதீனக் கலாமண்டபத்தில் நல்லைத் திருஞானசம்பந்த ஆதீனக் குரு முதல்வர் சிறிலசிறி சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகள் முன்னிலையில் இந்து சமய கலாசாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி கு. கேமலோஜினி தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறும்.

***

யாழ்ப்பாணம்,ஓக. 24

நல்லூர் செல்லப்பா சுவாமிகளின் நிலையத்தில் இன்று வயலின் இசையரங்கு இடம்பெறும்.

வயலின் இலண்டன் இ.அகிலன். மிருதங்கம் தி.அரசராஜ். கடம் ச.பிரணவன். பாட்டு கே.எஸ்.சிவஞானராஜா.

## செல்வச் சந்நிதியில்

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழாவின் சப்பறத் திருவிழா இன்று மாலை இடம்பெறும்.

ஆலய முன்றலில் இடம்பெறும் நிகழ்வுகளாக பேச்சு செல்வச்சந்நிதி அறநெறி மாணவி தரணிகா சிறிலிங்கம் "பிற உயிர்களைப் பேணுவோம்" என்ற தலைப்பிலும், வில்லுப் பாட்டு- "மயிர் நீர்ப்பின் வாழாக் கவரிமான்" யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள்- (அகில இலங்கை தமிழ் தினப்போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடம்). பிரசங்கம்- "நடமாடும் தெய்வம்" அருளியல் வாரிதி துரை கணேசமூர்த்தி யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர். வீணைக் கச்சேரி- திருமதி சுபாசினி பிரணவன் கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர், தேஜஸ்வராலயா கலைக் கல்லூரி இயக்குனர் அவர் தம் மாணவர்களும். சத்சங்- "முருகதத்துவம்" சிதாகாசானந்த சரஸ்வதி யாழ்.சின்மயாமிஷன் வதிவிடத ஆச்சாரியார் நிகழ்த்துவார்.



யாழ்ப்பாணம் சங்கானை பட்டின அபிவிருத்திச்சபை உறுப்பினர்களும், வலி.மேற்கு பிரதேச சபையும் இணைந்து பிரான்பற்று வீதியில் நேற்றுத் துரப்புரவில் ஈடுபட்டனர். வீதிகளின் இருபக்கமும் பற்றைகள், குப்பைகளாகக் காணப்பட்டன. மழைக்காலம் ஆரம்பிப்பதற்கு முன்பாகத் துப்புரவு செய்ய வேண்டும் என்ற நோக்கில் இந்த பணி மேற்கொள்ளப்பட்டது. இதில் சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். (7)

## தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம்.ஓக.24

அனலைதீவு தெற்குப் புளியந்தீவு நாகேஸ்வரன் (சிவன்) கோயில் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு நடைபெறும். அன்றையதினம் சுவாமி தேரில் ஆரோகணித்த வேளை ஆலய மண்டபத்தில் கலாபூஷணம் க.லோகேஸ்வரனின் திருமறையரங்கு பக்கவாத்திய சகிதம் இடம்பெறும். (29)

# கிராமிய வங்கிகள், சங்கங்களில் குறைந்தவட்டியில்கடன்பெறுங்கள்

## கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஓக. 24

மக்கள் கிராமிய வங்கிகள் மற்றும் சிக்கனக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக வழங்கப்படும் குறைந்த வட்டியிலான கடன்திட்டங்களில் இணைவதன் ஊடாகப் பல்வேறு நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

பன்னாட்டுக்கூட்டுறவாளர்தினநிகழ்வு சிக்கனக் கடன் வழங்கும் சமாசத்தின் தலைவர்வி.கே.அருந்தவநாதன்தலைமையில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில்கடந்தசெவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

அதில்முதன்மைவிருந்தினராகக்கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர்மேலும்தெரிவித்ததாவது:

நுண்நிதிக்கடன்திட்டங்களுக்குமாற்றீடாக இது சிறந்ததாக அமையும். நுண்நிதிக்கடன்களைப் பெற்ற வங்கிகளால் அதிகளவிலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நுண்நிதிக்கடன்திட்டங்களுக்கு மாறாகக் கிராமிய வங்கிகள் ஊடாகக் கடன் திட்டங்கள்ஆரம்பித்துவைக்கப்படவுள்ளன. இந்தக்கடன்திட்டங்களில்சங்கங்கள்கூட்டுறவாளர்கள்மிகவும்சிறப்பான முறையில்செயற்படும்பட்சத்தில்இரண்டாம் கட்டத் திட்டங்களுக்கான கொடுப்பனவுகளும்விரைவாகவழங்கப்படும். இந்தக் கடன் திட்டங்களைப் பெறுவதற்கு விண்ணப்பித்துக் கொள்ள முதலில்சங்கங்களில்ஓர்அங்கத்தவர்களாகவும்இணைந்துகொள்ளவேண்டும். கடன் விதிகளைப் பெற்றுக்கொள்வதற்குப் பலர் அங்கத்துவத்தைப் பெற்றுவருகின்றனர்.

கூட்டுறவு அமைப்பினர்தமது கிராமிய வங்கிகள் சிக்கனக் கடன் வழங்கும் சங்கங்கள்ஊடாகக்கடன்திட்டங்களை அறிவிக்கவேண்டும். நுண்நிதிக்கடன் திட்டங்களில் தற்போது பலர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மேலும் தெரிவித்தார். (4.17)



## வறுமைப்பட்ட இரு குடும்பங்களுக்கு வீடு கட்ட நிதி வழங்கினார் தனி நபர்!

### இராணுவத்தினர் கட்டி ஒப்படைத்தனர்

யாழ்ப்பாணம், ஓக. 24

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை அல்லைப்பிட்டிவெப்பு நகர் பிரதேசத்தில், வருமானம்குறைந்த இரண்டுகுடும்பங்களுக்கு இராணுவத்தினர் வீடுகள்கட்டிக் கொடுத்துள்ளனர். அவற்றைக்குடும்பங்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

யாழ்ப்பாண பாதுகாப்புக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன கெட்டியாராச்சியின் எண்ணக்கருவுக்கு அமைய தகம் பகண என்ற அமைப்பைச்சேர்ந்த சாள்ஸ் தோமஸ்ஸின் அனுசரணையுடன் வீடுகள் அமைக்கப்பட்டன. கடந்த ஜூன் மாதம் வீடுகளுக்கு அடிக்கல் நடப்பட்டு இராணுவத்தினர்வீடுகளைக் கட்டி முடித்துள்ளனர் என்று இராணுவத்தினரின் செய்தி அறிக்கையில்தெரிவிக்கப்பட்டது. (4)

## ‘தேசிய கடன்களும் பெரும் அபிவிருத்தித் திட்டங்களும்‘

யாழ்ப்பாணம். ஓக. 24

தேசிய கடன்களும் பெரும் அபிவிருத்தித் திட்டங்களும் என்ற தொனிப்பொருளில் சமூக விஞ்ஞானப் படிப்பு வட்ட கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை பிற்பகல்4மணியளவில்இடம்பெறவுள்ளது.

இலக்கம் 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில்சந்திஎன்ற முகவரியில் அமைந்துள்ள தேசியகலைஇலக்கியப்பேரவையின் கவிஞர் முருகையன்கேட்போர்கூடத்தில்இது இடம்பெறவுள்ளது.

ஓய்வுநிலைப்பிரதிக்கல்விப் பணிப்பாளரும், சமூக விஞ்ஞான ஆய்வாளருமான பி. முத்துலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் கருத்துரையை அரசியல்பொருளாதார ஆய்வாளரும், சமூகச்செயற்பாட்டாளருமானஅகிலன்கதிர்காமர் ஆகியோர் ஆற்றவுள்ளனர். இந்தக் கருத்துரைகளைத்தொடர்ந்துகலந்துரையாடல் இடம்பெறும். அரசியல், பொருளாதார, சமூக, விஞ்ஞான, கலை, இலக்கிய. ஆர்வலர்கள் அனைவரையும் அழைக்கப்படுகின்கின்றனர். (4)

## முஸ்லிம் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஓக. 24

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் முஸ்லிம் ஒன்றுகூடல் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் 3 நாள்களுக்குஇடம்பெறவுள்ளது. யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக்கல்லூரி வளாகத்தில் இதுஇன்றுமாலை4மணிக்கு இடம்பெறும்.

இன்றைய நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கலந்துகொள்வார்.

நாளைய கௌரவிப்பு அமர்வில்பிரதிஅமைச்சர்களான காதர் மஸ்தான், இ.அங்கயன் ஆகியோர் கலந்து கொள்வர். இது பிற்பகல் 3.30க்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நாளை மறுதினம் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதி ராசாவும்சிறப்புவிருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ. சரவணபவன், டக்ளஸ் தேவானந்தா, விஜயகலா மகேஸ்வரன் மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய தூதரக கொன்சியூலர்.எஸ்.பாலச்சந்திரன் உள்ளிட்ட பலர்கலந்துகொள்வர். (4)

## 46ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஓக. 24

கொழும்புத்துறைமேற்குசனசமூக நிலையத்தின் 46ஆவது ஆண்டுநிகழ்வுஎதிர்வரும்26ஆம்திகதிநிலையத்தலைவர் இ.தனஞ்செயன் தலைமையில் நடைபெறும்.

நிலையத்தின்கலையரங்கில்மாலை6மணிக்குநிகழ்வுகள் ஆரம்பமாகும். யாழ்ப்பாண மாநகர பிரதி முதல்வர் து.ஈசன் முதன்மை விருந்தினராகவும், யாழ்ப்பாண் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.பாலித பெர்னாண்டோ சிறப்பு விருந்தினராகவும்கலந்துகொள்வார். (4,17)

## நாராயணருக்கு நாளை கொடி

யாழ்ப்பாணம், ஓக. 24

அழவெட்டிமேற்குநாகேஸ்வரம் சிறிநாகவரத நாராயணர் கோவில் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது.

12 நாள்கள் இடம்பெறும் திருவிழாவில், எதிர்வரும் 2ஆம்திகதிதேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (16ர)

## போதனா மருத்துவமனை வாய்க்கால்களுக்கு பாதுகாப்புநெற்வேலிஅமைக்கஅனுமதியுங்கள்

யாழ்ப்பாணம், ஓக. 24

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இருமருங்கிலும்உள்ளவெள்ள வாய்க்கால்களிற்கு பாதுகாப்பு நெற்வேலி அமைப்பதற்குமாநகரசபைஅனுமதியளிக்க வேண்டும் என்று மருத்துவமனைப்பணிப்பாளர் எழுத்து மூலம் விண்ணப்பித்துள்ளார்:

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையைச்சுத்தமாகவும் அழகாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்கும் வகையில் மேற்கொள்ளும்திட்டத்தின்கீழ்மருத்துவமனை அருகே கானப்படும். வெள்ள வாய்க்கால் தொடர்பில்கவணம்செலுத்தப்பட்டது.

குறித்தவாய்க்கால்கள்மாநகர சபையினால் பராமரிக்கப்படுகின்ற போதும் காற்றின்காரணமாககுப்பைகள் வாய்க்கால்களில் வந்து சேர்கின்றன.

இவற்றைத்தடுக்கும்வகையில் வெள்ள வாய்க்கால் காலத்திற்கு காலம் சீர் செய்ய ஓர் பாதுகாப்பு நெற்வேலியைஅமைக்கதிட்டமிடுகின்றோம். எனவே அவ்வாறுதிட்டமிடப்படும்மாதிரியைப் பரிசீலித்து அதனை அமைப்பதற்கு அனுமதியளிக்குமாறு கோரிக்கைவிடப்பட்டுள்ளதது. (105)

## தெருநாய் கடித்தால் தடுப்பூசி ஏற்றப்பட்டதா என்பதை உறுதிப்படுத்தவும்

யாழ்ப்பாணம், ஓக. 24

நாய் கடித்து மருத்துவமனைக்குச் சிகிச்சை பெற வந்தால் அந்தப் பகுதிக்குரிய கால்நடை மருத்துவர் மூலமாகநாய்க்குவிலங்குவிசர்நோய்த்தடுப்புமருந்து ஏற்றப்பட்டதா என்பதை உறுதிப்படுத்துங்கள். உங்களுக்குக் கடித்த நாய்க்கு நோய்த்தடுப்பு மருந்து ஏற்றியிருந்தால் மருத்துவமனைப் பணியாளர்கள் மற்றும் நோயாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்கமுடியும்என்றுஅறிவுறுத்தப்படுகிறது.

நாய்களால்கடிபடுவோருக்குச் சிகிச்சை வழங்கல் தொடர்பான கருத்தரங்கு பருத்தித்துறைஆதாரமருத்துவமனையில் நேற்று நடைபெற்றது. அதன்போது மருத்துவமனைப் பொறுப்பதிகாரி இவ்வாறு தெரிவித்தார்.

நாயால் கடிபடும் ஒருவர் தமது பகுதி மருத்துவமனையில் சிகிச்சை பெறச் செல்லும் வேளையில் கடித்த நாய்க்கு விலங்குவிசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்பட்டதா என்பது தெரியாததால் நோயாளர்களுக்கு பெறுமதிமிக்க மருந்துகளை வழங்கவேண்டியுள்ளன.

கால்நடை மருத்துவரின் பரிசோதனையில் அந்த நாய்க்கு ஏற்கனவே விலங்குவிசர்நோய்த்தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டிருப்பது கால்நடை மருத்துவரால் உறுதிப்படுத்தப்பட்டால் நாயால் கடியுண்டவருக்குச்சாதாரண சிகிச்சை வழங்கினாலே போதுமானது.

நாயால் கடியுண்ட ஒருவர் மருத்துவமனைக்கு வந்தால் நாயைப் பற்றிய விவரங்களைமருத்துவமனையில்வழங்குங்கள். மருத்துவமனைத் தரப்பினர் நாய் தொடர்பான விவரங்களைப் பிரதேச கால்நடை மருத்துவருக்கு அறிவிக்க வேண்டும். அவர்சம்பந்தப்பட்ட இடத்துக்குச் சென்று பார்வையிட்டு நாய்க்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டிருந்தால் நோயாளருக்குச் சிகிச்சைகளை மட்டுப்படுத்துமாறு மருத்துவமனைக்கு அறிவிக்கலாம்.

தடுப்பூசி ஏற்றப்படாதிருந்தால் அன்றைய தினமே நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றலாம். வளர்ப்பு நாய்கள்மட்டுமல்லகட்டாக்காலி நாய்களுக்கும் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

கடித்ததுவிசர்நாயாஎன்பது தெரியாத நிலையில் சிகிச்சை வழங்குவது மனித உயிருடன் விளையாடும் செயல். இதனால் நாயால் கடிபடும் பொதுமக்கள் நாய் தொடர்பான விவரங்களுடன் மருத்துவமனைகளுக்குச் சென்றால் சிகிச்சை வழங்குவதுடன் மேலதிக நடவடிக்கைகளும் மேற்கொள்ள வசதியாக இருக்கும் என்று தெரிவித்தார்.

அத்துடன்மருத்துவமனையினர் பிரதேச கால்நடை மருத்துவர் பணியகம் மற்றும்சுகாதாரமருத்துவஅதிகாரிப்பணியகம்ஆகியவற்றுடன் இணைந்து நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றும் புதிய திட்டமும் ஆரம்பித்து வைக்கப்பட்டதுஎனத்தெரிவிக்கப்பட்டது. (4.9)

## அமிர்தலிங்கத்தின் பிறந்ததின போட்டியில் வெற்றிபெற்றோர்

யாழ்ப்பாணம், ஓக. 24

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் அமிர்தலிங்கத்தின் 91 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டுவடக்குமாகாண பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பேச்சுப் போட்டிகள் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

அதில் தெரிவானவர்களுக்கான பரிசளிப்பு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி யாழ்ப்பாணம் பொது நூலகக்கேட்போர்கூடத்தில் நடைபெறும்என்றுஅறக்கட்டளைமன்றத்தினர்தெரிவித்துள்ளனர்.

இருபிரிவுகளாகஇடம்பெற்ற போட்டிகளில்பிரிவு இல்தரம் 10,11 மாணவர்களை கொண்டதாகவும்பிரிவுஇல் 12,13 மாணவர்களை உள்ளடக்கியதாகவும் நடைபெற்றது. பிரிவு இல் முதலாம் இடம் யாழ்ப்பாணம் தெல்லிப்பளையூனியன்கல்லூரி மாணவிவி.தாரணி.இரண்டாம் இடமிடம் யாழ்ப்பாணம்மருதனார்மடம்இராமநாதன் கல்லூரி மாணவன் த.வீவசிங், மூன்றாம் இடம் யாழ்ப்பாணம் மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன் ஜெ.கவினாஸ் ஆகியோர் தெரிவாகினர்.

பிரவு இல் முதலாம் இடம் யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவி ஆ.நவோமியா. இரண்டாம்இடத்தையாழ்ப்பாணம்கொக்குவில்இந்துக் கல்லூரி மாணவன் தி. திசான் .மூன்றாம் இடம் யாழ்ப்பாணம்இராமநாதன் கல்லூரி மாணவி ஜெ. லோகேஸ்வரி ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

இதில்முதலாம், இரண்டாம், மூன்றாம்இடங்களைப்பெற் மாணவர்களுக்குமுறையே தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

போட்டியில் பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும்சான்றிதழ்களும்வழங்கப்படும். (4,113)

## மாணவிக்கு உதவி வழங்கல்



விளையாட்டுத் துறையில் ஈடுபடுவதுடன் கல்வியிலும் ஆர்வம் மிக்க வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயத்தில் தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவி மேர்சி உதயசூரியன் என்ற மாணவிக்கு, கனடா வாழ் அரவிந்சபாபதி நேற்றுமுன்தினம் ஈருருளி ஒன்றை வழங்கி உதவினார்.
இந்த நிகழ்வில் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன்,விளையாட்டு ஆசிரியர் சுதாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (222)



### "புனித அமைதியின் அரசி" ஆலயத் திருவிழா

கிளிநொச்சி செல்வாநகரில் அமைக்கப்பட்ட "புனித அமைதியின் அரசி" ஆலயம் கடந்த 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. வருடாந்த திருவிழா 25ஆம் திகதி காலை 7 மணிக்கு விழா திருப்பலியுடன் நிறைவு பெறும். (222)


# மாகாண சபையால் அமைக்கப்பட்ட சுற்றுலா மையம் இளைஞர்களின் சமூக சீர்கேடு மையமாக மாற்றம்

## கவனத்தில் எடுக்குமாறு சமூக நலன் விரும்பிகள் கோரிக்கை

கிளிநொச்சி ,ஓக 24

வன்னேரிக்குளம் சுற்றுலா மையத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டடம் இளைஞர்களின் சமூக சீர்கேடு விடையங்களுக்கு வழிவகுகின்றதா என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.பற்றைக்காடுகள் நிறைந்து, மதுப்போத்தல்களுடன் கூடிய இடிந்த கட்டடமாக இது காட்சியளிக்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட குறித்த கிராமத்தில் வடமாகாண முதலமைச்சரின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக்கொடை நிதியாக 6 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட கரைச்சிப் பிரதேச சபையின், வன்னேரிக்குளம் சுற்றுலா மையம் அழகுபடுத்தல் வேலைத்திட்டம், கடந்த 2017 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.
அதனை தொடர்சியாகப் பராமரிக்காத நிலையில் இன்று பற்றைகளால் சூழப்பட்டு காணப்படுகின்றது .
இந்த இடம் மது அருந்துதல் உள்ளிட்ட சமூக சீர்கேடு விடையங்கள் ஏற்படுவதற்கு வாய்பாக காணப்படுகின்றது .
அங்கு கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் அறைகள் என்பன உடைக்கப்பட்ட நிலையில் காணப்படுவதோடு.கட்டடத்தின் ஒரு பகுதி உடைந்து கம்பிகளில் தொங்கிய நிலையில் காணப்படுகின்றது. குறித்த அறை ஒன்றில் பாய் தலையணை போன்றவையும் காணப்படுகின்றது.
அங்காங்கே பியர் ரின்களும் காணப்படுகின்றது.
பாதுகாப்பு உத்தியோகஸ்தர் நியமிக்கப்படாத காரணத்தால் யாரும் எந்த நேரத்திலும் அங்கு சென்று வருவதற்கான வாய்ப்பு உள்ளது.
இதனை பிரதேச சபை கவனத்தில் எடுத்து அங்கு பாதுகாப்புவேலி அமைத்து காவலாளி ஒருவரை நியமிப்பதன் மூலம் பல்வேறு பிரச்சனைகள் தோன்றுவதை தடுக்க முடியும் எனக் கூறப்படுகிறது.
கிளிநொச்சி நகரில் இருந்து ஏ 9 வீதியூடாக வன்னேரிக்குளத்துக்கு பிரிந்து செல்லும் வீதியிலேயே இந்த கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. வீதி சீரின்மையால் 10 நிமிடங்களுக்குள் செல்லும் இந்த இடத்துக்கு அரை மணி நேரம் பயணிக்க வேண்டியுள்ளது.
தற்போது ஐ றோட் திட்டத்துள் இந்த வீதி உள்வாங்கப்பட்டு, தெரிவுசெய்யப்பட்டுள்ளது . கிட்டத்தட்ட ஒரு கிலோமீற்றர் சுற்று வட்டாரத்துக்குள் மக்கள் எவரும் வசிக்காமையும் இந்த இடம் பாழடைந்து சமூக சீர்கேடு இடம்பெறுவதற்கு காரணமாக இருக்கலாம் என கூறப்படுகிறது.
இது தொடர்பாக கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாழிகிதனிடம் கேட்டபோது:
குற்றச்சாட்டுக்கள் உண்மையானவை ஆனால் அதனைப் பராமரிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. அங்கு வருமானம் பெறக்கூடிய நிலை தற்போது இல்லை காரணம் வீதி மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.
அதனால் அங்கு யாரும் செல்வதற்கு முன்வருவதில்லை வீதி சீராக்கப்படும் சந்தர்ப்பத்தில் அங்கு காவலாளி நியமிக்கப்பட்டு ,பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம் எனவும் ,வருமானம் இல்லாத இடத்தில் காவலாளிகளை நியமித்து மாதாந்தச் சம்பளத்தை சபை நிதியில் வழங்குவது சாத்தியமான விடையம் அல்ல எனவும், இருப்பினும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (6)



## இளைஞனின் சடலம் மீட்பு

வவுனியா.ஓக 24

வவுனியா செட்டிகுளம் மெனிக்பாம் பகுதியைசேர்ந்த 23 வயதுடைய கோபி என்ற இளைஞன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
நேற்று தனது வீட்டில் இருந்த சமயம் உயிரிழந்துள்ளார். பெற்றோர் இளைஞரை மீட்டு செட்டிகுளம் மருத்துவ மனையில் சேர்ப்பித்தனர். எனினும் இளைஞர் முன்னரே உயிரிழந்து விட்டதாக மருத்துவ மனையில் கூறப்பட்டுள்ளது.
உடல தற்போது பிரேத பரிசோதனைக்காகச் செட்டிகுளம் மருததுவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (110)



## மைதான பராமரிப்புக்கு இயந்திரங்கள் வழங்கல்

வவுனியா ,ஓக 24

வடக்குமாகாணசபை உறுப்பினரும் முனனாள சுகாதார அமைச்சருமாகிய மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கத்தின் 2018 ஆம ஆண்டுககான மாகாண குறித்தொதுக்கப்பட்ட கொடை நிதியில் கொளவனவு செயயப்பட்ட ,விளையாட்டுமைதான பராமரிப்புக்கான புல்வெட்டும் இயந்திரங்களும், சுயதொழில் முயற்சியாளாகளுக்கான தையல் இயந்திரங்களும் நேற்றுமுன்தினம் வவுனியாவில் வைதது வழங்கிவைக்கபபட்டன.
இலங்கைத தமிழ அரசுக்கட்சியின் மாவட்ட அலுவலகமான தாயகத்தில நடைபெற்ற நிகழ்வில, புரட்சி விளையாட்டுகக கழகம் புளியங்குளம், ஈஸ்வரன்விளையாட்டுக்கு கழகம் சாஸ்திரிகூழாங்குளம், யங்பைற் விளையாட்டுக்கு கழகம பறன்நாட்டினகல் மலைமகள்விளையாட்டுக்கு கழகம் சாம் பல்தோட்டம், யுரேனஸ விளையாட்டுக்கு கழகம் சமளங்களம், லயன்ஸ் விளையாட்டுக்கு கழகம் பூந்தோட்டம், சக்தி விளையாட்டுக்கு கழகம் சிதம்பரபுரம், யுனைற்றட் விளையாட்டுக்கு கழகம் கனகராயன்குளம், ஸ்கைபேட் விளையாட்டுக்கு கழகம் தரணிக்குளம், காத்தார்சின்னககுளம் அ.த.கபாடசாலை ஆகிய 10 நிறுவனங்களுக்கு மைதானபராமரிப்புக்காக புல்வெட்டும்இயந்திரங்களும், 3 குடும்பங்களுக்கு வாழவாதார உதவியாக தையல் இயந்திரங்களும் வழங்கிவைக்கபபட்டன.

## ஈருருளிகள் வழங்கல்

யாழ்ப்பாணம்,ஓக.24

நீண்டதூரம் பாடசாலைக்கு நடந்து செல்லும் மூன்று மாணவர்களுக்கு ஈருருளிகள் வழங்கப்பட்டுள்ளன.
இந்த ஈருருளிகளை வடமாகாணசபை உறுப்பினா் துரைராசா ரவிகரன் மற்றும்கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேசுவரன் ஆகியோர் மாணவர்களிடம் கையளித்தனர்.
கடந்த வாரம் முல்லைத்தீவு முள்ளியவளை பகுதியில் வைத்து குறித்த நிகழ்வு இடம்பெற்றது.
பாடசாலைக்கு நீண்டதூரம் சென்று கல்வி பயிலும்மூன்று மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு புலம்பெயர் உறவுகளால் இந்த ஈருருளிகள் வழங்கப்பட்டன. (113)

## அதிவேகமாக வாகனம் செலுத்துவதை உடனடியாகக் கட்டுப்படுத்த நடவடிக்கை

கிளிநொச்சி ,ஓக 24

கரைதுறைப்பற்று பிரதேசத்தில் உள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் மாவட்ட பொலிஸ் அதிகாரிக்கும், கரைதுறைப்பற்று பிரதேசபை உறுப்பினர் க.விஜிந்தன் நேற்று முன்தினம் கடிதம் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளார்.
அந்தக் கடிதத்தில்முல்லைத்தீவு கரைதுறைபபற்று பிரதேசத்துக்கு உட்பட்ட முள்ளியவளை, முல்லைத்தீவு, கொக்கிளாய் போன்ற பகுதிகளில்அண்மைக்காலமாக, அதிவேகமாகவும் விதிமுறைகளை மீறியும் வாகனங்கள் செலுத்துவதால் பல உயிர் இழப்புக்களையும், அங்க இழப்புக்களையும், விலைமதிப்பற்ற மனித இனம் எதிர்கொண்டு வருகின்றது.
சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரம் தங்கள் திணைக்களத்திடம் இருப்பதால் பொதுமக்கள்,மாணவர்கள் கூடுகின்ற பகுதிகளில் வாகனங்கள் அதிவேகமாக செலுத்துவதை உடனடியாக கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி 3)

## புதுக்குடியிருப்பு வள்ளிபுனத்தில் மக்களுக்கான நடமாடும் சேவை

யாழ்பபாணம்,ஓக.24

தேசிய ஒருமைப்பாடு ,நலலிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் ஏற்பாட்டில் எமது பிரதேச செயலகத்தால், குறைந்த வசதிகளையுடைய மக்களுக்குச் சட்ட ஆவணங்களைப் பெற்றுக்கொடுக்கும் நடமாடும் சேவை ஒன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை 26 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் கனிஸ்ட உயர்தரவித்தியாலயத்தில் நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இதில் கீழ்க்குறிப்பிடப்படும் சேவைகள் பொதுமக்களுக்காக வழங்கப்படும்.
தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளல்.
பிறப்பு, இறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ்கள் வழங்கல், பிறப்பு, இறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ்களின் மொழிபெயர்ப்பு வழங்கல், காலங்கடந்த பிறபபு, இறப்பு பதிதல், தெரிவு செய்யப்பட்ட 250 பாடசாலை மாணவாகளுக்குப் பாடசாலைச் சீருடைத்துணி மற்றும் புத்தகத் தொகுதி வழங்கல், முதியோர் அடையாள அட்டை வழங்கல் மற்றும் தொழில் திணைக்களம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு, காணிச் சீர்திருத்த ஆணைக்குழு, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, ஓய்வூதியத் திணைக்களம், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, ஊழியர் சேமலாப நிதியம், அரசகரும மொழிகள் ஆணைக்குழு போன்ற திணைக்களங்களால் வழங்கப்படும்சேவைகள்.
தேசிய அடையாள அட்டை மற்றும் முதியோர் அடையாள அட்டைக்கான புகைப்படம் மற்றும் முத்திரை என்பன இலவசமாக வழங்கப்படும் எனப் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

# உழவனூரில் கசிப்பு உற்பத்தி நிலையம் முழுமையாக அழிப்பு

கிளிநொச்சி ஒக 24
உழவனூர்பகுதியில் இயங்கிய கசிப்பு உற்பத்தி நிலையம்முழுமையாகஅழிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.
கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உழவனூர் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாகப் பொறுப்பதிகாரி சதுரங்கவுக்குக் கிடைத்த இரகசிய தகவலினைஅடுத்துநேற்றுமுன் தினம் சிறப்பு நடவடிக்கையை மேற்க்கொண்ட மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் நிலையத்தை சுற்றி வளைத்த போது இரு சந்தேக நபர்கள் தப்பி சென்றுள்ளதாகவும், கசிப்பு உற்பத்தி நிலையத்தில்இருந்து10பெரல்கோடாவும் கசிப்பு உற்பத்தி உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், நிலையம்முழுமையாகஅழிக்கப்பட்டுள்ளதுடன், தப்பிசென்ற நபர்கள்இருவரும்அடையாளம்காணப்பட்டுள்ளார்கள். இருவர் மீதும் கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குகள் காணப்படுகிறது . ஒருவர் தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை செய்கின்றார் .2 மணியுடன் வேலை முடிந்து வந்து கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்தமை தெரியவந்திருப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சான்றுப்பொருள்கள் மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காக தருமபுரம் பொலிஸ்நிலையத்தில்ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர். (6)






## மறையாசிரியர்களுக்கான ஒருவாரகாலதுரிதபயிற்சி

முல்லைத்தீவு.ஒக 24
கிளிநொச்சி, முல்லைதீவு மறைக்கோட்ட மறையாசிரியர்களுக்கானஒருவாரகாலதுரிதபயிற்சி 5ஆம்திகதியில் இருந்து 11ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் நடத்தப்பட்டது.
கிளிநொச்சி, முல்லைத்தீவு மறைக்கோட்டங்களைச்சோந்த பங்குகளிலிருந்து 25 மறையாசிரியர்கள் இதில் கலந்து கொண்டார்கள்.
இவாகளுக்குதிருவிவிலியம், திருவழிபாடு, திரு அவை, திருவருட்சாதனங்கள், கத்தோலிக்கதிருமறையின் அடிப்படைக் கொள்கைகள்பற்றியபகுதிகளில்துரிதபாடங்கள்நடாத்தப்பட்டன. அத்துடன் மறையாசிரியர்களுக்கான தியானம், வழிபாடு, கலைவழி மறைக்கல்வி, குழுமவாழ்வுபற்றியபயிற்சிகளும் வழங்கப்பட்டன.
யாழ்ப்பாணம்மறைமாவட்ட மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருட்பணி பெனற்றின் நெறிப்படுத்தலில், முல்லைதீவு, புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலய அதிபர் அருட்பணிஅ. றொபின்சன், பாடசாலைசமூகத்தினர், புதுக்குடியிருப்பு பங்குத்தந்தை, அருட்பணி சுதர்சன், பங்குமக்கள் ஆகியோரின்ஒத்துழைப்புடன்இந்தநிகழ்வுநடைபெற்றது. (222)



## பாலைமரக்குற்றிகள் பறிமுதல் சந்தேக நபர்கள் தப்பிஓட்டம்

கிளிநொச்சிஒக 24
கல்மடு காட்டுப்பகுதியில் இருந்து 5 பாலைமரக்குற்றிகள்கைப்பற்றப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.
கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மடு காட்டுப்பகுதியில்மரங்கள்தறிக்கப்படுவதாக பொலிஸாருக்க கிடைத்த தகவலுக்கு அமைய நேற்றுமுன்தினம்குறித்தஇடத்துக்கு சென்ற பொலிஸார் 5 பாலை மரக் குற்றிகளைகைப்பற்றியதாகவும், பொலிஸாரின்வருகைஅறிந்துசந்தேகநபர்கள் தப்பிசென்றுள்ளதாகவும்கூறப்படுகிறது. தப்பியோடியவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், சான்றுபொருள்தருமபுரம்பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணை மற்றும்நீதிமன்ற நடவடிக்கைக்காகஒப்படைக்கப்பட்டுள்ளதாக கிளி நொச்சி மாவட்ட போதைப்பொருள்தடுப்புப்பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார். (6)

## வெடுக்குநாறிமலைக்குச்சென்று நிலமையைக்கேட்டறிந்தஅனந்தி

வவுனியா வெடுக்குநாறி மாலையில் உள்ள ஆதி சிவன் ஆலயத்தினை வட மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன்நேற்றுசென்றுபார்வையிட்டதுடன்ஆலயத்தின்தற்போதையநிலைமைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.
வெடுக்குநாறி மலையில் உள்ள ஆதி சிவன் ஆலயத்தினை தொல்பொருள் திணைக்களத்தினர் தமது ஆளுகைக்குள் கொண்டுவர முற்பட்ட நிலையில், அப்பகுதி மக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்துவருகின்றனர்.
இந்த நிலையில் இன்று வட மாகாண மகளிர் விவகாரம் மற்றும் சமூக சேவைகள் அமைச்சர் அனந்தி சசிதரன் குறித்த மலைப்பகுதிக்கும் ஆசி சிவன்ஆலயத்திற்கும்சென்றிருந்தார். அங்கு வழிபாடுகளில் ஈடுபட்ட அவர் மக்கள் மற்றும் ஆலய நிர்வாகத்தினிடம்ஆலயத்தின்பூர்விகம்மற்றும்ஆலயத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக கேட்டறிந்துகொண்டார். பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதேஅவர்இவ்வாறுகூறினார்.
மூவாயிரம்வருடங்களுக்குமேற்பட்ட தமிழர்களுடையஆலயமாகவிளங்கி வந்திருக்கிறது. அந்நியபடைஎடுப்புகள் மற்றும்இராணுவநடவடிக்கைகள் காரணமாகவழிபாடுகளுக்குதடைஏற்பட்டதன் பின்னர் தற்போது இராணுவக் சூழல், மறைந்தநிலையில் எமது மக்கள்குறித்த ஆலயத்தை சீரமைக்கும் செயற்பாடுகளில், ஈடுபட்டுவருகின்ற போது தொல்லியல் திணைக்களம் தாங்கள் ஆக்கிரமிப்பதற்காக தடைகளைவிதித்திருக்கிறார்கள்.
ஆலயங்களை சீரமைக்கும் போது தொல்லியல்திணைக்களமும், பங்கள் தமது காணிகளில் மீழக்குடியமரும் போது வன இலாகபிரிவினரும், தடைகள் விதிப்பதும், நெற்செய்கையின் போது மகாவலிஅதிகார சபையினர் என்றரீதியில் எமது நிலங்களை அபகரிக்கும் செயற்பாடுகளயும் நாம் நீண்ட காலம்பார்த்துக்கொண்டேவருகிறோம். இதற்கானதடைகளைசெய்யமுடியாதவர்களாக நாம் இருக்கிறோம். கடந்த காலங்களில்கதிர்காமம்தமிழர்களின் இடமாக இருந்து ஆக்கிரமிக்கபட்டு பௌத்தர்களின்இடமாகமாறியுள்ளது. மற்றும் வன்னியில் குருந்தூர்மலை, ஒதியமலை போன்றபகுதிகள் இராணுத்தினாலும், சிங்கள பௌத்த பேரினவாதிகளாலும் ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில்வெடுக்குநாறி மலையையும் அபகரிக்கும்நோக்கில்பலவேலைதிட்டங்களைமேற்கொண்டுவருகின்றனர்.
இது தொடர்பாக ஒட்டுமொத்த வடக்கு மாகாணசபையும் தங்களின் விருப்புவெறுப்பிற்கப்பால் இந்த இடத்தை பாதுகாப்பதற்கும் எமது மக்கள் சுதந்திரமாக இங்கு வழிபாடு செய்வதற்கும் அரசியல்பேதமற்று ஒன்றிணையவேண்டும். இதுதொடர்பாக வடக்குமாகாணசபையில்பிரேரணை கொண்டு வரலாம் ஆனால் கடந்த பல கூட்டங்கள் கூச்சல் குளப்பமாகவிருந்தமை மட்டுமல்ல மக்களால் விமர்சிக்கப்படு கின்றவாறாகவே நடைபெற்று வருகின்றது. அவ்வாறு நாம் பிரேரணை கொண்டுவந்தாலும் நீங்கள் எதிர்பார்க்கும் அளவுக்குத் தீர்வை எட்டமுடியும் என்பதை என்னால் கூறுமுடியாதுள்ளது. இருப்பினும்பிரேரணை கொண்டுவரு வதற்கான முன்னேற் பாடுகளை நிச்சயமாக மேற்கொள் வேன்என்றுகூறினார். (117)




தந்தையை இழந்த , வறுமைகோட்டுக்குட்பட்ட 25 பிள்ளைகளுக்கு தமிழ்விருட்சம் அமைப்பினூடாக கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கபட்டது. (110)

## பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உதவி



கிளிநொச்சி, ஒக. 24
கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு பெண் தலைமைதத்துவ குடும்பங்களின்வாழ்வாதாரத்தைமேம்படுத்தும்நோக்கில் நேற்றைய தினம் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.
வடமாகாண தொழிற்றுறை திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்ட நான்குகுடும்பங்களுக்கு நேற்று மாகாண மகளிர் விவகார சமூக சேவைகள் அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு தையல் இயந்திரங்களை வழங்கினார். (5)

## வீதிகள் சீரமைப்பு வேலைகள் ஆரம்பம்

வவுனியா, ஒக 24
வவுனியாதெற்கு தமிழ்பிரதேச சபைக்குட்பட்ட கட்டையர்குளம் பிரதானவீதி, புதுக்குளம், மணியர்குளம், வீதிகள் சீராக்கும் வேலைகள் மூன்று வாரங்களுக்கு மேலாக நடைபெற்றுவருகின்றன.
வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையால் முன்னெடுக்கப்பட்டுவரும் இந்தவீதி சீரமைப்புப் பணிகளுக்காக வடக்குமாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும், வவுனியாமாவட்ட மாகாணசபை உறுப்பினருமாகிய மருத்துவர்ப.சத்தியலிங்கம் , மாகாண குறித்தொதுக்கப்பட்ட கொடைநிதியிலிருந்து ரூபா 3.3 மில்லியன் பெற்றுக்கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஏனைய காணிகளை விடுவித்த மைத்திரி எங்கள் காணிகளை விடுவிக்கிறாரில்லை

## கேப்பாப்பிலவு மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்

**யாழ்ப்பாணம், ஓக. 24**

**ஏனைய காணிகளை விடுவிக்க அனுமதி வழங்கிய அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன, எங்களுடைய கேப்பாப்பிலவுக் காணிகளை விடுவிப்பதற்குக் கவனம் செலுத்தவில்லை என்று கேப்பாபிலவு மக்கள் குற்றஞ்சாட்டி விசனம் தெரிவித்தனர். நாங்கள் போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கி 542 நாள்கள் 18 மாதங்கள் 3 நாள்கள் ஆகி விட்டன. எங்களைக் கவனிப்பார் எவருமில்லை என்றும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.**

எங்களுடைய பொது இடங்களானபாடசாலைகள், பொது மயானங்கள், பொது நோக்கு மண்டபங்கள் மற்றும் பொது இடங்கள் என்பன இராணுவத்தின் கட்டுப்பாட்டில்தான் உள்ளன.

இத்தகைய இடங்களை அவர் இன்னும் விடுவிக்க வில்லை. மயிலிட்டியில் காணிகளை விடுவிப்பதாகக் கூறிய அரசதலைவர் எங்களுடைய காணிகளை விடுவிப்பதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இராணுவத்தினரை, எங்களுடைய இடங்களை விட்டுச் செல்லுமாறுதான் நாங்கள் கோருகிறோமே தவிர நாட்டை விட்டுப் போகச் சொல்லவில்லையே! எங்களைக் கவனிப்பார் அற்றுவிட்டால் நாங்கள் போராட்டத்தை விட்டு விடுவோம் என்று ஒருபோதும் நினைக்காதீர்கள். எமது போராட்டத்துக்கு உரிய தீர்வு கிடைக்க வேண்டும்" என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (4,113)

# முதியோர்களைப் பிள்ளைகளே கட்டாயம் பராமரிக்க வேண்டும்

## என்ற தொனிப்பொருளில் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஓக. 24

'பிள்ளைகளே தமது பெற்றோர்களைப் பராமரிக்க வேண்டும்' என்பதை வலியுறுத்தும் வகையிலான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும் என்று கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் த. கிருபாகரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒக்ரோபர் முதல் வாரத்தில் நடைபெறவுள்ள பன்னாட்டு முதியோர் வாரத்தை முன்னிட்டு மூத்தோர்களை அவர்களது உறவுகள் தான் வீடுகளில் வைத்துப் பராமரிக்க வேண்டும். இது தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் யாவும் முதியோர் இல்லத்தில் முன்னெடுக்கப்படும். கிராம சமூக அமைப்பினர் மற்றும் பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள் மட்டத்தில் இது தொடர்பான கருத்தரங்குகள், விழிப்புணர்வு நடவடிக்கைகள் யாவும் முதியோர் இல்லத்தில் நடத்தி வைக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மூத்தோர்களை உறவுகள் கைவிடக்கூடாது. அவர்களை அநாதைகள் ஆக்கக்கூடாது. அவர்களை முதியோர் இல்லங்களில் சேர்ப்பதைத் தவிர்க்க வேண்டும்.

அவர்களுக்கான சேவைகள், உதவிகள் போன்றவற்றை ஏற்படுத்தி வீடுகளில், வாழ்விடங்களில் வைத்துப் பராமரிப்பதே சிறந்தது என்பன போன்ற கருத்துகளை வலியுறுத்தி இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (4,17)

# சமூக சேவையாளர்கள் மதிப்பளிக்கப்படவுள்ளனர்

யாழ்ப்பாணம், ஓக. 24

**கைதடி அரச முதியோர் இல்லம் பன்னாட்டு முதியோர் வாரத்தை முன்னிட்டு வடக்கு மாகாணத்தில் உள்ள சமூக சேவையாளர்களை மதிப்பளிக்கவுள்ளது.**

அதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

'குறிப்பாக முதியோர்களைப் பராமரிப்பதிலும் அவர்களுக்கான சமூக செயற்றிட்டங்களிலும் ஈடுபடும் சமூக சேவையாளர்கள் பாராட்டி மதிப்பளிக்கப்படவுள்ளனர்.

முதியோர்களைப் பராமரித்து, அவர்களுக்கான செயல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் முதியோர் இல்லத்தில் அதற்கான விண்ணப்பத்தைப்பெற்று அடுத்த செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பிக்க வேண்டும்.

பன்னாட்டு முதியோர் வாரம் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதி வரைக்கும் முதியோர் இல்லத்தில் கொண்டாடப்படும்.

முதியோர் வாரத்தில் இந்தச் சமூகப் பணிகளில் ஈடுபடுவோர் குறிப்பாக மூத்தோர்களைப் பராமரிப்பதல், அவர்களுக்கான சமூக நலன் உதவிகளில் ஈடுபடுபவர்கள் இவ்வாறு வருடாந்தம் மதிப்பளிக்கப்படவுள்ளனர் என்று முதியோர் இல்ல அத்தியட்சகர் த. கிருபாகரன் மேலும் தெரிவித்தார். (17)

# ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையின் அபிவிருத்திகள் 2019இல் ஆரம்பிக்கப்படும்

## மீள்குடியேற்ற, வடக்கு அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை

முல்லைத்தீவு, ஓக. 24

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதற்கான திட்டமிடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அடுத்த வருடம் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.



முல்லைத்தீவின் ஒட்டுசுட்டான் கூழாமுறிப்புப் பகுதியில் உள்ள ஓட்டுத் தொழிற்சாலை 1976 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அப்போது அங்கு 75க்கும் அதிகமானவர்கள் பணியாளர்களாக இருந்தனர். போர்க்காலத்தின்போதும் அந்தத் தொழிற்சாலையில் ஓடுகள் உற்பத்தி செய்யப்பட்டன. போரின் பின்னர் அந்தத் தொழிற்சாலை அநாதரவாக விடப்பட்டது. போர் முடிவடைந்து 9 ஆண்டுகளின் பின்னர் அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கான வேலைத் திட்டங்கள் இடம்பெறுகின்றன என்று அறியமுடிகிறது.

இது தொடர்பில் பிரதி அமைச்சர் காதர் மஸ்தானிடம் கேட்டபோது: தொழிற்சாலையின் அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலும் பேசப்பட்டுள்ளது. விரைவில் அது அபிவிருத்தி செய்யப்படும் - என்றார்.

"ஓட்டுத் தொழிற்சாலை அபிவிருத்தித் திட்டம் தொடர்பான முன்மொழிவுகள் வழங்கப்பட்டுள்ளன. தொழிற்சாலையில் தற்போதுள்ள இயந்திரங்கள் தொழிலுக்கு உகந்ததாக அமையவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. அது தொடர்பான தகவல்கள் கொழும்பு அரசின் மீள்குடியேற்ற, வடக்கு அபிவிருத்தி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. தொழிற்சாலையின் அபிவிருத்தி வேலைகளை இந்த வருடம் ஆரம்பிப்பதற்குச் சந்தர்ப்பங்கள் இல்லை. எனினும் 2019ஆம் ஆண்டு வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது" என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைக்குத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க முல்லைத்தீவுக்கு வந்தார். அவரிடம் ஓட்டுத் தொழிற்சாலையின் அபிவிருத்தி தொடர்பில் ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள் மனு ஒன்றைக் கையளித்தனர். தேர்தலில் வெற்றிபெற்றால் ஓட்டுத்தொழிற்சாலை விரைந்து சீர்செய்யப்படும் என்று அவர் கூட்டத்தின்போது மக்களுக்கு வாக்களித்திருந்தார். நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. இதுவரை ஓட்டுத்தொழிற்சாலையின் அபிவிருத்தி தொடர்பில் தலைமை அமைச்சர் எங்கும் பேசவில்லை. எமக்கான உறுதி காற்றில் பறந்துள்ளது என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை ஓட்டுத்தொழிற்சாலையைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா, ஒட்டுசுட்டான் பிரதேசசெயலாளராக இருந்த வை. அனுருத்தனன் மற்றும் தனியார் நிறுவனத்தைச் சேர்ந்தவர்களும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சென்று பார்வையிட்டுள்ளனர். மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் கலந்தாலோசித்தனர். அந்தத் தொழிற்சாலையை மீள ஆரம்பித்தால் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமானவர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (21)

# திறந்த போட்டி பரீட்சை 2ஆம் திகதி இடம்பெறும்

யாழ்ப்பாணம், ஓக. 24

வடக்கு மாகாண பொதுச்சேவையில் விவசாயப் போதனாசிரியர் சேவையின் தரம் III மற்றும் பயிற்சிச் சித்திரம் பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் 2 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

அதற்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 29 ஆம் திகதிக்குப் பின்னரும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் "செயலாளர் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல 393/48 கோவில் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் அல்லது 0212219939 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக கொள்ளப்படுகின்றீர்கள்.

அனுமதி அட்டைகள் இல்லாது பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அ. சிவபாலசுந்தரன் கேட்டுள்ளார். (4)



# கடற்கரையில் பிளாஸ்ரிக் கழிவுகளை யாழ்.பல்கலை மாணவன் அகற்றினார்

மன்னார், ஓக. 24

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கீரி கடற்கரையில் அதிகமாகக் கரை ஒதுங்கியுள்ள பிளாஸ்ரிக் பொருள்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவன் சேகரித்து ஓரிடத்தில் குவித்துள்ளார். இந்தச் சம்பவம் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

பல்கலையில் புவியியல் துறையின் 4ஆம் ஆண்டு மாணவனான ஆர். றொச்சன் என்பவரே இந்தக் கழிவகற்றும் நடவடிக்கையில் முன்மாதிரியாகச் செயற்பட்டு அதன் மூலமாக விழிப்புணர்வையும் ஏற்படுத்தியுள்ளார்.

குறித்த கடலில் பிளாஸ்ரிக் பொருள்களால் மீனவர்களும் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வந்தனர். அது மட்டுமன்றி சூழல் சீர்கேடாகவும் அது அமைந்திருந்தது. இந்த நிலையில் கீரி கடற்கரையில் கள ஆய்வு செய்யக் குறித்த மாணவன் நேற்று முந்தினம் மாலை சென்றிருந்தார். அதன்போதே அவற்றைச் சேகரித்து ஓரிடத்தில் குவித்துள்ளார். பின்னர் மன்னார் நகர சபையுடன் தொடர்பு கொண்டு தான் சேகரித்த கழிவுப் பொருள்களை அள்ளிச் செல்லுமாறு கோரிக்கை விடுத்துள்ளார். (4,56)

## கிணற்றடியில் ஆசிரியரின் சடலம் மீட்பு

சாவகச்சேரி, ஓக. 24

ஆசிரியர் ஒருவர் அவரது வீட்டுக் கிணற்றடியிலிருந்து நேற்றுமுன்தினம்சடலமாகமீட்கப்பட்டுள்ளார் என்றுபொலிஸார்தெரிவித்தனர். கச்சாய் தெற்கைச் சேர்ந்த நமசிவாயம் பாலசுப்பிரமணியம் ( வயது -49) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். அவர்சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் கற்பிக்கிறார்.

தனித்து வாழ்ந்த இவர் நேற்று முன்தினம் காலையில் வேலையாள்களுடன் இணைந்து வேலி அடைத்துவிட்டு குளிப்பதற்காக மதியம் கிணற்றடிக்குச்சென்றுள்ளார். திருமண நிகழ்வுக்குச் செல்வதாக அவர் அயலிலுள்ளவர்களுக்கு முன்னர் கூறியிருந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இரவு நீண்ட நேரமாகியும் அவர் இரவு உணவு உட்கொள்ள வரவில்லை.

அவரைத்தேடிஅவரதுவீட்டுக்குச் சென்றபோதே அவர் வீட்டுக் கிணற்றடியில்சடலமாகக்காணப்பட்டுள்ளார் என்று சகோதரி விசாரணையில் கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரிமருத்துவமனையில் விசாரணை நடத்தப்பட்டது. மாரடைப்பால் அவர் உயிரிழந்துள்ளார் என்று உடற்கூற்றுப்பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது. சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (4.9)

கிழக்கு தமிழர் ஒன்றியத்தினரின் ஏற்பாட்டில்

# தமிழர்களுக்கான கட்சிகள் அனைத்தையும் ஒரே குடையின்கீழ் கொண்டு வரச் சந்திப்பு

### சகல கட்சிகளும் பங்கேற்க, காங்கிரஸ் மட்டும் புறக்கணிப்பு

மட்டக்களப்பு, ஓக. 24

**கிழக்குத் தமிழர் ஒன்றியத்தினர் தமிழ்க் கட்சிகள் அனைத்தையும் தனித்தனியே சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். தமிழர்சார்ந்த அரசியல் நடவடிக்கைகளுக்கும் எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் தமிழ்க்கட்சிகள் அனைத்தும் ஒருமித்து ஒரு குடையின்கீழ் ஒரு பொதுச்சின்னத்தில் தேர்தலில் களமிறங்கி, தமிழ் மக்களின் அதிக வாக்குகளைப் பெற்று மாகாணசபையில் அதிகூடிய தமிழர் பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்காகவும் இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது என்று ஒன்றியம் தெரிவித்தது.**

இந்தக் கலந்துரையாடல் களுவாஞ்சிக்குடியில் அமைந்துள்ள இராசமாணிக்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் உட்பட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ரெலோ, புளொட், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ், ஈ.பி.டி.பி, தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி, தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி போன்ற 11 கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

சந்திப்பில் ஒன்றியத்தின் செயற்பாடு, அதன் குறிக்கோள், தீர்மானங்கள் என்பன கட்சிப் பிரதிநிதிகளுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது. ஒவ்வொரு கட்சிப் பிரதிநிதிகளினதும் கருத்துப் பரிமாறல்களும் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து பல்வேறு கருத்துப் பரிமாறல்களின் பின்னர் ஒருபுரிந்துணர்வு உடன்படிக்கை தயாரித்து அதன்படி கட்சிகளின் நிலைப்பாடுகளைஇனங்கண்டுஇறுதிமுடிவு எடுக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

இதன்போது கிழக்குத்தமிழர் ஒன்றியத்தின் நிறுவுநர்களில் ஒருவரும் இணைப்பாளருமான செங்கதிரோன் த. கோபாலகிருஸ்ணன் தெரிவித்ததாவது:

இந்தச் சந்திப்பு முரண்பாடுகளுக்குள்ளும் உடன்பாடு காணும் முயற்சியே. கொள்கைகள், கோட்பாடுகள், சித்தாந்தங்கள், கருத்தியல்கள், கட்சிகள், சின்னங்கள் எல்லாமே மக்களுக்காகத்தான் என்பதை மனம் கொண்டால் முரண்பாடுகளுக்குள்ளும் உடன்பாடு காணமுடியும். கட்சித்தலைவர்களுக்கு அத்தகைய மனப்பக்குவம் ஏற்பட வேண்டும்.

கிழக்குமாகாணத்தில்தற்போதுநிலவும்கள நிலையில், கிழக்குத் தமிழர்கள் தங்கள் அடையாளத்தையும் இருப்பையும் தக்க வைத்துப்பேணிப்பாதுகாத்துவளர்த்தெடுக்க வேண்டுமாயின் தனிநபர் முரண்பாடுகளுக்கு அப்பால், கருத்தியல் முரண்பாடுகளுக்கு அப்பால் அரசியல் ரீதியாக ஒரே குடையின் கீழ் ஒரே அணியாகத் திரள வேண்டும்.

எதிர்வரும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழர்கள் சார்பில் அதிஉச்சபட்ச ஆசனங்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் அனைத்துத்தமிழ்அரசியல்கட்சிகளும்ஒரு பொதுச்சின்னத்தின் கீழ் ஒரே அணியாகச் செயற்பட வேண்டும் என்பதே கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் தீர்மானமும் கோரிக்கையும். இதனைச் சாத்தியமாக்கும் வகையில் அனைத்துத்தமிழ்அரசியல்கட்சிகளுடனும் தனித்தனியே சந்தித்து அந்தக் கட்சிகளின் நிலைப்பாடுகளை அறிந்துள்ளோம்.

கிழக்குத்தமிழர்ஒன்றியம் இதுசம்பந்தமாக ஒரு முடிவுக்கு வரும் முன்னர் அனைத்துத் தமிழ்அரசியல்கட்சிகளையும்ஒரே இடத்தில் சந்தித்துப் பேசும் ஏற்பாடே இது. கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் கோரிக்கை குறித்து அனைத்துத் தமிழ் அரசியற்கட்சிகளும் ஓரிடத்தில் கூடி உடன்பாட்டு ரீதியாக கலந்துரையாடி மக்களுக்கு உகந்ததான ஒருமித்த முடிவொன்றை எடுப்பதற்கான முன்முயற்சியே இந்தச்சந்திப்பு. சந்திப்புக்கு 12 தமிழ் அரசியற்கட்சிகளுக்கு அழைப்புவிடுத்திருந்தோம்.

இதில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியினர் மட்டும் கலந்துகொள்ளவில்லை. ஏனைய அனைத்துக் கட்சிகளும் கலந்து கொண்டிருந்தன. பெரும்பான்மைக் கட்சிகளில் அங்கம் வகிக்கின்ற தமிழ் அங்கத்தவர்களும் கிழக்குத்தமிழர் ஒன்றியத்தில் உறுப்பினர்களாக இருக்கின்றனர். கட்சி அரசியலுக்கு அப்பால் இயங்குகின்ற ஒரு அமைப்பாக இது இருக்கின்றது. தற்போது கூடியுள்ள கட்சிப் பிரதிநிதிகளுக்கிடையிலான ஒரு உடன்பாடு எட்டப்பட்டு பொதுச் சின்னம் ஒன்று உருவாக்கப்படுமிடத்து அடுத்த கட்டமாக பெருந்தேசியக் கட்சிகளில் இருக்கும் தமிழர்களையும் ஒருங்கிணைத்து அடுத்த கட்டப் பேச்சுக்களை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம்.

எனவே கோரிக்கைக்கு இணங்கிச்செயற்படுமாறு அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளினதும்தலைமைப்பீடங்களுக்குபொதுமக்களும் தங்களால் முடிந்தளவில் அழுத்தங்களைக்கொடுக்கவேண்டும்-என்றார். (4.46)

## பதில் முதல்வராக ஈசன் செயற்படுவார்

யாழ்ப்பாணம், ஓக. 24

யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ. ஆனோல்ட் வெளிநாடுசெல்கிறார். அதனால் பிரதி முதல்வர் து.ஈசன் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும்17 ஆம்திகதிவரைபதில்முதல்வராகச்செயற்படுவார்என்றுதெரிவிக்கப்பட்டது. அவர் இன்று கடமைகளைப் பொறுப்பேற்பார்.

மாநகராட்சிசம்பந்தமானகருத்தரங்கு ஒன்றில் பங்குபற்ற ஆனோல்ட் இந்தோனேசியாவுக்குச் செல்கிறார். முன்னரும் அவர் வெளிநாடு சென்றிருந்தார்.

திரும்பிவரும்போது அவரை ஏற்றிவர வாகனம் அனுப்பப்படவில்லை என்ற சர்ச்சை சபையில் ஏற்பட்டிருந்தது. (4.17)



தென்னிந்திய திருச்சபையின் பேராயர் அதிவணக்கத்துக்குரிய கலாநிதி டானியல் எஸ். தியாகராயா யாழ்ப்பாண ஆதீனத்தின் பேராயராக திருநிலைப்படுத்திய 12 ஆவது ஆண்டுநிறைவுநன்றிசெலுத்தும்வழிபாடுநேற்று இடம்பெற்றது. யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் அமைந்துள்ளதலைமைப்பேராலயத்தில் இடம்பெற்ற சிறப்புவழிபாட்டுடன் பேராயரை வாழ்த்தும்நிகழ்வு இடம்பெற்றது. இந்தநிகழ்வில் இந்தியாவிலிருந்து பலரும் சிறப்புப்பிரதிநிதிகளாகப் பங்குகொண்டனர்.

## கொடுக்கிளாய் அபாய வெளியேற்றப் பாதை விரைவில் தார் வீதியாக மாற்றப்படவுள்ளது

### மருதங்கேணி பிரதேச செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 24

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் கொடுக்கிளாய் அபாய வெளியேற்றப்பாதை விரைவில் தார் வீதியாக மாற்றப்படும். கொழும்பு அரசு வீதி அபிவிருத்திக்கு என்று அனுப்பிய ஒன்றரைக் கோடி ரூபாவில் இந்த வீதியும்சீரமைக்கப்படும்என்றுமருதங்கேணிப் பிரதேச செயலர் கே. கனகேஸ்வரன் தெரிவித்தார்.



வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் 2004ஆண்டுசுனாமிஇடரின்பின்னர்மக்கள்இருப்பிடங்களைவிட்டுப் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு ஒருபாதை அவசியம் என்று பிரதேசமக்கள் அரசதரப்பினரிடம் கோரியிருந்தனர்.

வேண்டுகோள் பயனளிக்கவில்லை.

அதனால் பிரதேசத்தினதும் அயல் கிராமத்தினதும் மக்கள் புலம்பெயர்ந்த உறவுகளிடம் நிதி பெற்று கொடுக்குளாய் அபாய வெளியேற்றப் பாதையை அமைத்தனர்.

இதற்கு மக்கள் சுமார் ஐம்பது இலட்சம் ரூபாவைச் செலவிட்டிருந்தனர்.

இந்தப் பாதை ஆற்றை மறித்து அமைக்கப்பட்டது.

ஆனால் ஆற்றில் தேங்கி நிற்கும் தண்ணீர் அலை காரணமாக போடப்பட்ட பாதை அரிப்படையுமென்று மக்கள் கருதினர். அவ்வாறு அரிப்பு நிகழுமாயின் 50 லட்சமும் மனித உழைப்பும் வீணாகிவிடும்.

இந்தநிலைகுறித்துவடமராட்சிகிழக்குப்பிரதேச செயலகமும்யாழ்பாண மாவட்டசெயலகத்தின் சிறப்பு நிதிமூலமாக குறித்த பாதைக்கு இரு பக்கங்களும் கருங்கற்கள் அடுக்கப்பட்டன.

ஆனால் அது முழுமைப்படுத்தப்படவில்லை. தற்போது இந்தப்பாதை பயணஞ் செய்ய முடியாதஅளவுக்குப்பெரியளவில்குழிகள்தோன்றியுள்ளன். இனி மழைகாலம். அதற்கிடையில் இந்தப் பாதையைச் செப்பனிடத் தவறினால், பாதைமழைநீருடன்கரைந்துபோவதையாராலும்தடுக்க முடியாது. இது தொடர்பில் உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோருகின்றனர்.

இது தொடர்பில் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலரிடம் உதயன் தொடர்பு கொண்டபோது அவர் தெரிவித்ததாவது:

2015ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற நிதியின் அளவுக்கு ஏற்ப அந்தப் பாதையின் வேலைகள் நடைபெற்றன. தற்போது அந்தப் பாதையை முழுமையாகத் தார் வீதியாக மாற்றுவதற்குக் கொழும்பு அமைச்சு வடக்கு மாகாண சடைக்கு ஒன்றைரைக் கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. இந்த நிதியில் கொடுக்கிளாய் அபாய வெளியேற்றப் பாதை தார் வீதியாக மாற்றப்படவுள்ளது. மேலும் சில வீதிகளின் சீரமைப்பும் நடைபெறவுள்ளது -என்றார். (4.7.70)

# கூட்டமைப்பு அதிகாரப் பகிர்வு யோசனையை அரசமைப்பு திருத்தமாகக் கொண்டுவருமா?

மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தில் நிறைவேற்றலாம் என்கிறார் டிலான்

**கொழும்பு, ஓக. 24**
**அதிகாரப் பகிர்வு யோசனையை அரசியலமைப்பின் ஒரு திருத்தமாகக் கொண்டுவந்து மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் நிறைவேற்றிக் கொள்ளவேண்டும். இதற்கான முயற்சியைத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பே முன்னெடுக்கவேண்டும் என்று சுதந்திரக் கட்சியின் மாற்றுஅணி உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.**



புதிய அரசியலமைப்பு விவகாரம் மற்றும் அரசியல் தீர்வுத்திட்டம் என்பனவற்றின் நிலமை தொடர்பில் விபரிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டின் தற்போதைய அரசியல் சூழல் குறித்துத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு புரிந்துகொள்ளவேண்டும். இவ்வாறான நிலையில் அரசமைப்புத்திருத்தமாக அதிகாரப்பகிர்வுயோசனையைகொண்டுவராவிடின் அது பெரிய கவலைக்குரிய விடயமாக அமையும்.
ரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்தைமுழுமையாக அமுல்படுத்தும்வகையில் அதிகாரப்பகிர்வு யோசனையை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். மாறாக புதிய அரசியலமைப்பு ஒன்றுகொண்டுவரப்படுவதற்கான சாத்தியம் குறைவாகவே உள்ளது.
தற்போதைய அரசியல் சூழலில் ஒரு விடயத்தைச் சாதித்துக்கொள்ளும் சாத்தியம் காணப்படுகின்றது. அதாவது புதிய அரசியலமைப்பைக் கொண்டுவரும் முயற்சியை விட தமிழ் பேசும்மக்களுக்கான அரசியல்தீர்வுத்திட்டத்தை ஒரு அரசமைப்புத் திருத்தமாக கொண்டுவரலாம்.
அவ்வாறு அதிகாரப்பகிர்வுயோசனையை ஒரு அரசியலமைப்புத்திருத்தமாகக் கொண்டு வந்தால் அதனை மூன்றில் இரண்டுபெரும்பான்மைபலத்துடன்நிறைவேற்றிக்கொள்ள முடியும்.
எனவே அதிகாரப் பகிர்வு யோசனையை அரசியலமைப்பின்ஒருதிருத்தமாககொண்டுவந்துமூன்றில்இரண்டுபெரும்பான்மை பலத்துடன்நிறைவேற்றிக்கொள்ளவேண்டும். இதற்கானமுயற்சியைத்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பே முன்னெடுக்க வேண்டும்.
எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் சம்பந்தன் கூட்டு எதிரணியின்உரிமைகளுக்காகப் பேசவேண்டும்.
70உறுப்பினர்களைக்கொண்டுள்ளகூட்டு எதிரணிக்கு15வீதநேரமும், 6உறுப்பினர்களைக் கொண்டுள்ள ஜே.வி.பி. க்கும் 15 வீத நேர ஒதுக்கீடும்வழங்குவது எந்த வகையில் நியாயம்? இது தொடர்பில் சம்பந்தன் நாடாளுமன்றத்தில் பேசவேண்டும்.
காரணம் அவர் எதிர்க்கட்சித் தலைவர். யாருக்கு அநீதி ஏற்பட்டாலும் அவர் குரல் கொடுக்கவேண்டும். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் அவ்வாறு செயற்படாமல்இருக்கின்றார். அதற்காகத்தான் கூட்டு எதிரணிஎதிர்க்கட்சித்தலைவர்பதவியைக் கோருகின்றது - என்றார். (61)

# நரேந்திர மோடி மைத்திரிபால இடையில் அடுத்த வாரம் பேச்சு

கொழும்பு, ஓக 24
இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியுடன், அரசதலைவர்மைத்திரிபால சிறிசேனஅடுத்தவாரம்பேச்சுக்களைநடத்துவார்என்று எதிர்பார்க்கப்படுவதாக. இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
பிம்ஸ்ரெக் எனப்படும் வங்காள விரிகுடா விளிம்புநாடுகள்ஒத்துழைப்பு அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தலைவர்களின்உச்சிமாநாடுநேபாளத்தில்எதிர்வரும் 30.31ஆம் திகதிகளில்நடைபெறவுள்ளது.
காத்மண்டுவில்நடைபெறும்இந்தமாநாட்டில் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திரமோடி, இலங்கைஅரசஅதிபர்மைத்திரிபாலசிறிசேனஉள்ளிட்டநாடுகளின்தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர்.
இந்தமாநாட்டின்போதுஇந்தியத்தலைமை அமைச்சர்நரேந்திரமோடியும், அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவும் சந்தித்துப் பேச்சு நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
இலங்யையில்அதிகரித்துவரும்சீனத்தலையீடுகள், இருதரப்பு ஒத்துழைப்பைவலுப்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து இதன்போதுபேசப்படும்என்றும்எதிர்பார்க்கப்படுவதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## மலைப் பாம்புக்கு சத்திர சிகிச்சை

கொழும்பு, ஓக 24
இலங்கையில் பாரிய காயங்களுக்கு உள்ளான மலைப் பாம்பிற்கு சத்திர சிகிச்சைமேற்கொள்ளப்பட்டுள்ளது.
புல்லு வெட்டும் இயந்திரத்தில் சிக்கி வெட்டுக் காயங்களுக்குள்ளான பாம்பிற்கே சத்திரசிகிச்சைமேற்கொள்ளப்பட்டது. சத்திர சிகிச்சையின் பின்னர் ஹியாரேமிருகமருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், தற்போது குணமடைந்துவருவதாகக்காலிவன விலங்கு பாதுகாப்புச் சங்கம் தெரிவித்துள்ளது.
பட்டபொலபிரதேசத்தில் புல்லுவெட்டு இயந்திரத்தில் சிக்கிய பாம்புக்கு வயிற்றுப்பகுதியில்3காயங்கள் ஏற்பட்டது. காயமடைந்த பாம்புக்கு 45 நிமிடங்கள் வரை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வனவிலங்கு பாதுகாப்புச் சங்க அதிகாரி சிசிர ஜயசிங்க தெரிவித்துள்ளார்.



*ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர்*

## திருமலைத் துறைமுகத்தைப் பார்வையிட்டார்



கொழும்பு,ஓக 24
இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள ஜப்பானியபாதுகாப்பு அமைச்சர் இட்சுனோரி ஒனோடெரா நேற்றுத் திருகோணமலைத் துறைமுகத்துக்குச் சென்று பார்வை யிட்டுள்ளார். திருகோணமலைத் துறைமுகம் தொடர்பாக கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதியினால் ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சருக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.
திருகோணமலைத் துறை முத்தில் தரித்து நிற்கும் ஜப்பானிய கடற்படையின் நாசகாரிக் கப்பலான 'இகாசுச்சி'க்குச் சென்று ஜப்பானிய கடற்படை அதிகாரிகளுடனும், இட்சுனோரிஒனோடெரா கலந்துரையாடினார்.



## இலங்கை இராணுவமும், அனைத்துலக செஞ்சிலுவைக் குழுவும் இணக்கம்

கொழும்பு, ஓக24
இலங்கைஇராணுவத்தின்மனிதாபிமானஒத்துழைப்புசெயற்பாடுகளுக்கு, முழுமையானஒத்துழைப்பை வழங்குவதாக, அனைத்துலக செஞ்சிலுவைக் குழு தெரிவித்தது.
செஞ்சிலுவைக்குழுவின்இலங்கைக்கான புதிய தலைவர் லூக் காஸ் பெட்றிடிஸ் நேற்றுமுன்தினம் இலங்கை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போது இந்தஉறுதிமொழியைவழங்கினார்.
இலங்கைஇராணுவத்தினரால் முன்னெடுக்கப்படும், சுகாதார மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி உதவிகள், விவசாய உதவித்திட்டங்கள்குறித்துஅனைத்துலக செஞ்சிலுவைக் குழுவின் தலைவருக்கு விளக்க மளிக்கப்பட்டுள்ளது.
அனைத்துலக செஞ்சிலுவைக் குழுவின் எதிர்காலத் திட்டங்களுக்கு இலங்கை இராணுவம் ஆதரவு அளிக்கும்என்றும் இராணுவத் தளபதி உறுதி அளித்துள்ளார்.

## கலகத் தடுப்புப் பொலிஸாருக்கு 5,000 கண்ணீர் புகைக்குண்டுகள்

கொழும்பு,ஓக 24
நாட்டில் இடம்பெற்று வரும் போராட்டங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கலகத் தடுப்புப் பொலிஸாருக்கு பெருமளவு கண்ணீர் புகைக் குண்டுகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
தற்போதுஇருப்பில்உள்ளவற்றுக்கு மேலதிகமாகச் சுமார் 5 ஆயிரம் கண்ணீர் புகைக் குண்டுகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகஉயர்பொலிஸ் அதிகாரியொருவர் கொழும்பு பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.
கண்ணீர் புகைக் குண்டுகளுக்கு மேலதிகமாக முகத்தை மூடக் கூடிய நவீன ரக தலைக்கவசங்களும் சீனாவிலிருந்து இறக்கு மதி செய்யப்பட்டுள்ளன. இலங்கையில் பொலிஸார் பயன்படுத்தப்படும் மரத்திலான லத்திகளுக்குப் பதிலாக இறப்பர் லத்திகளும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

# அம்பாந்தோட்டைத் துறைமுகம் பற்றி ஜப்பான் அமைச்சர் கருத்து

கொழும்பு,ஓக24
அம்பாந்தோட்டைத்துறைமுகம் இராணுவச் செயற்பாடுகள் இல்லாத ஒன்றாக இருக்க வேண்டும் என்பதே ஜப்பானின் நிலைப்பாடு என்று ஜப்பானியப் பாதுகாப்பு அமைச்சர் இட்சுனோரி ஒனோடெரா தெரிவித்தார்.
இலங்கைக்கான பயணத்தைமேற்கொண்டு அரசஅதிபர், தலைமைச்செயலர் ஆகியோரைச் சந்தித்த பின்னர், ஜப்பானின் என்எச்கே தொலைக்காட்சிக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இந்தச் சந்திப்புகளின் போது, சீன விவகாரம் குறித்து இலங்கைத் தலைவர்களிடம் கேள்வி எழுப்பியதாகவும் ஜப்பானியப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் எப்படி விவாதம் நடந்தாலும்

# மாகாண சபைத் தேர்தலை ஜனவரியில் நடத்துவோம்!

## அமைச்சர் அகிலவிராஜ் கூறுகிறார்



கொழும்பு, ஓக. 24
"நாடாளுமன்றத்தில் இன்று இடம்பெறவுள்ள விவாதத்தில் எவ்வாறான பதில் கிடைத்தாலும் ஜனவரியில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்" என்று கல்வி அமைச்சரும் ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலருமான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.
மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் நாடாளுமன்றில் இடம்பெறவுள்ள விவாதம் தொடர்பில் தெளிவுப்படுத்துகையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தேர்தலை நடத்தும் முறைமை குறித்துக் கட்சிகளுக்கிடையில் இரு வேறான கருத்துகள் நிலவி வருகின்றன. ஆனாலும் ஆயுட்காலம் முடிவடைந்துள்ள மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் காலந்தாழ்த்தப்பட்டு வருகின்றன. புதிய தேர்தல் முறைமை தொடர்பான எல்லை நிர்ணய அறிக்கை மீதான விவாதத்தின் பிரகாரம் பழைய முறையிலோ அல்லது புதிய முறையிலோ மாகாண சபைத் தேர்தலை நடத்துவோம்.
"அரசியற் கட்சிகளுக்கிடையில் நிலவும் வேறுபட்ட கருத்துகளே மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதில் காலதாமதம் ஏற்படக் காரணமாகியுள்ளது. இன்று எல்லை நிர்ணய அறிக்கை மீதான நாடாளுமன்ற விவாதம் இடம்பெறவுள்ளது. இதில் எவ்வாறான தீர்மானம் கிடைக்கப்பெற்றாலும் கட்சிகளின் ஒத்துழைப்புடன் ஜனவரியில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை மும்முரமாக மேற்கொள்ளுவோம்.
முன்னர் இருந்ததுபோன்று பழைய விகிதாசாரத் தேர்தல் முறைமையிலோ அல்லது உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெற்றதைப் போன்று புதிய முறைமையிலோ மாகாண சபைகளுக்கான தேர்தல் இடம்பெறும்.
எல்லை நிர்ணய அறிக்கை மீதான நாடாளுமன்ற விவாதம் புதிய தேர்தல் முறைமைக்குச் சாதகமாக இருக்குமாயின் புதிய முறைமையில் தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளன. மாறாக விவாதத் தீர்மானங்கள் புதிய முறைமைக்குப் பாதகமாகவும் பழைய முறைமைக்குப் பலம் சேர்க்கும் வகையில் அமையுமாயின் பழைய முறையிலேயே தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றன. எது எவ்வாறாயினும், மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கான பணிகள் விரைவுபடுத்தப்படும்" - என்றார். (4)

# தனியார் மருத்துவமனைகளில் அறவிடும் சிகிச்சைகளுக்கு விலைக் கட்டுப்பாட்டு


## சுகாதார அமைச்சு தெரிவிப்பு



கொழும்பு, ஓக 24
தனியார் மருத்துவமனைகளில் அறவிடப்படும் சிகிச்சைகளுக்கு, அடுத்த வாரம் தொடக்கம் விலைக் கட்டுப்பாடு விதிக்கப்படவுள்ளதாகச் சுகாதார அமைச்சர் மருத்துவர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
அந்தவகையில், 53 மருத்துவ கட்டணங்களுக்கான கொடுப்பனவுகளுக்குக் கட்டுப்பாட்டு விலை விதிக்கப்படவுள்ளதாகச் சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.
அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
சிகிச்சைகளுக்கான கட்டுப்பாட்டு விலைப் பட்டியலை நிறைவுசெய்து விரைவில் அமைச்சுக்குச் சமர்ப்பிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், சிறப்பு மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்கவிற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அறிக்கை கிடைத்தவுடன், அதனை வர்த்தமானியில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும்.
அறுவைச்சிகிச்சை, ஆய்வுகூடக் கட்டணங்கள், பிரசவம் உள்ளிட்ட பல்வேறு மருத்துவத் தேவைகளுக்கு அறவிடப்படும் கட்டணங்களுக்கே இவ்வாறு கட்டுப்பாட்டு விலை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது.

# புலிகளின் தலைவர் பிரபாகரனின் இழப்பு மகிழ்ச்சியைத் தரவில்லை

## ராகுல் காந்தி தெரிவிப்பு



**கொழும்பு, ஓக 24**
**விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கொல்லப்பட்டபோது, நானோ அல்லது எனது சகோதரி பிரியங்கா காந்தியோ மகிழ்ச்சியடையவில்லை என்று இந்தியாவின் காங்கிரஸ் கட்சித் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்தார்.**

ஜேர்மனியில் ஹம்பேர்க் நகரில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"வன்முறையால் எனது குடும்பத்தில் இருவரை இழந்திருக்கிறேன். எனது பாட்டி (இந்திரா காந்தி) மற்றும் எனது தந்தை ( ராஜிவ் காந்தி) ஆகியோர் கொல்லப்பட்டனர். எனவே வன்முறைகளால் நான் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறேன்.
நான் உண்மையில் எனது அனுபவங்களில் இருந்து பேசுகிறேன். வன்முறைக்குப் பின்னர் நீங்கள் முன்னேறுவதற்கு உள்ள ஒரே வழி மன்னிப்புத்தான். வேறு வழி இல்லை. மன்னிப்பதற்கு நீங்கள் சரியாக என்ன நடந்தது, ஏன் நடந்தது என்று புரிந்து கொள்ள வேண்டும்.
எனது தந்தை 1991ஆம் ஆண்டில் கொல்லப்பட்டார். தந்தையைக் கொன்றவர், 2009ஆம் ஆண்டில் இலங்கையில் கொல்லப்பட்டுக் கிடந்ததைக் கண்டேன்.
நான் என்து சகோதரி பிரியங்காவை அலைபேசியில் அழைத்தேன். "இது மிகவும் விசித்திரமானது. ஆனால் நான் மகிழ்ச்சியடையவில்லை. இறந்து கிடந்தவர் எனது தந்தையைக் கொன்றவர் என்ற அடிப்படையில், நான் கொண்டாட வேண்டும். ஆனால் நான் மகிழ்ச்சியடையவில்லை. " - என்றார் அவர்.
அதற்கு நானும், "மிகவும் சரி, நானும் கூட மகிழ்ச்சியடையவில்லை" என்றேன். நான் மகிழ்ச்சியையடையாததற்குக் காரணம், அவரது குழந்தைகளின் நிலையில் இருந்து தான் நான் பார்த்தேன்.
அவர் விழுந்து கிடக்கும் போது, உண்மையில் என்னைப் போன்ற பிள்ளைகள் அழுது கொண்டிருப்பார்கள் என்றே நான் உணர்ந்தேன்" என்றும் அவர் தெரிவித்தார்.

# புதிய தேர்தல் முறையில் சிக்கல் பழைய முறையில் நடத்தலாம்

## டிலான் பெரேரா விளக்கம்



கொழும்பு, ஓக. 24
புதிய மாகாண சபைத் தேர்தல் முறைமையை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்வதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது. மாகாண சபைத் தேர்தல் முறைமையை நிறைவேற்ற வேண்டுமானால் இம்முறை மாகாண சபைத் தேர்தலை பழைய முறையில் நடத்துவதற்கான ஏற்பாட்டை நிறைவேற்றவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார். புதிய மாகாண சபை தேர்தல் முறைமை தொடர்பில் இன்று நடைபெறும் விவாதம் மற்றும் வாக்கெடுப்புக் குறித்து விவரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
புதிய மாகாண சபைத் தேர்தல் முறைமையை இன்றுநிறைவேற்றிக்கொள்வதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது.
புதியமாகாண சபைதேர்தல் முறையை சிறுபான்மை கட்சிகள் எதிர்க்கின்றன.
அவ்வாறு சிறுபான்மைக் கட்சிகள் எதிர்க்கும் பட்சத்தில் சட்டமூலத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்றமுடியாது. எனவே இதில் சிக்கல் நிலை தோன்றலாம்.
இந்தச் சிக்கல் நிலையைத் தீர்ப்பதற்கு ஒரு முறை உள்ளது. மாகாண சபைத் தேர்தல்முறைமையை நிறைவேற்ற வேண்டுமானால் இம்முறை மாகாண சபைத் தேர்தலை பழைய முறையிலும் அடுத்த மாகாண சபைத் தேர்தலை புதிய முறைமையிலும் நடத்துவதற்கான ஏற்பாட்டைச் சட்டமூலத்தில் உள்ளடக்கி மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் நிறைவேற்ற வேண்டும் - என்றார். (61)



# குருநாகல், மாத்தளை மாவட்டங்களுக்கு மகாவலி ஆறு இன்றிலிருந்து செல்லும்

## மைத்திரி, ரணில் ஆரம்பித்து வைக்கின்றனர்

கொழும்பு, ஓக 24
மகாவலி காங்கை ஆற்றின் நீரை வடமேல் மாகாணத்தில் இருந்து குருநாகல் மற்றும் மாத்தளை மாவட்டங்களுக்கு வழங்கும் ஆரம்ப நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு பொல்பிதிகம பொது விளையாட்டரங்கில் இடம்பெறும்.
அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இணைந்து இதனைத் திறந்து வைக்கவுள்ளனர்.
மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலர் அனுர திசாநாயக்கா இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.
இந்த நிகழ்வுக்கு யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் சிறப்பு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
இந்தத் திட்டத்தின் ஊடாக 2400 கிராமிய குளங்களை புதுப்பித்து இந்தப் புதிய கால்வாய்களின் ஊடாக விவசாய நிலங்களுக்கு நீர் வழங்கும் பெரும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (50)

# சம்பளப் பிரச்சினையைத் தீர்க்க ஆணைக்குழு அமைக்கப்பட்டது

கொழும்பு, ஓக. 24
சம்பள முரண்பாட்டு ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. சகல அரச ஊழியர்களினதும் சம்பளம் தொடர்பில் காணப்படும் பிரச்சினைகளைக் கண்டறிந்து தீர்வு காண்பது இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டதன் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது.
உறுப்பினர்களின் பெயர்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.
சம்பளப் பிரச்சினைகளைக் குறைத்தல், சம்பளக் கட்டமைப்பொன்றை உருவாக்குதல் போன்றனவற்றை இந்த ஆணைக்குழு நிறைவேற்றவுள்ளது. எஸ். ரனுக்கே என்பவரின் தலைமையில் இயங்கவுள்ள இந்த ஆணைக்குழுவுக்கு 15 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
இரண்டு மாதகாலத்துக்குள் ஆணைக்குழுவின் தீர்வு யோசனை முன்வைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. ரயில்வே ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பிலும் இவர்கள் ஈடுபட்டிருந்தனர்.
அவர்களது சம்பள முரண்பாட்டுக்கும் இரண்டு மாதங்களில் தீர்வு காணப்படும் என்று அரசு அறிவித்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (4)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரச தலைவருக்கு மக்கள் சொன்ன செய்தி

தமது எதிர்பார்ப்பு என்ன என்பதை மீண்டும் ஒருதடவை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு நேரடியாகவே தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறார்கள் தமிழ் மக்கள். வலிகாமம் வடக்கில் அமைந்துள்ள முக்கிய மீன்பிடித்துறையான மயிலிட்டியில் புதிய இறங்குதுறை ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் நடும் விழாவில் உரையாற்றிய தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராசாவின் உரையின் இடையிடையே பலத்த கரகோசத்தை எழுப்பியதன் மூலம் தமது எண்ணம், நோக்கம் என்ன என்பதை அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

மைத்திரிக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான உறவில் மயிலிட்டி துறை மிகவும் முக்கியமானது. அந்த வகையில் அரச தலைவரின் செயலையும் வாக்குறுதியைக் காக்கும் மாண்பையும் நிச்சயம் பாராட்டியாகவேண்டும். ஏனெனில் மயிலிட்டித் துறைமுகம் படையினரின் பிடியில் இருந்து விடுவிக்கப்படவே போவதில்லை என்று தமிழர்கள் நம்பிய காலம் ஒன்றிருந்தது. அதனை விடுவிப்பதற்கான தீவிர போராட்டங்களை நடத்தியபோதும் அதன் விடுவிப்பு மீது நிச்சயமற்ற தன்மை ஒன்றை தமிழர்கள் உறுதியாக உணர்ந்தார்கள். ஆட்சி மாற்றத்தால் அதனைச் சரிப்படுத்த முடியும் என்று நம்பித்தான் மைத்திரிபாலவுக்கு வாக்களித்தார்கள்.

அந்த நம்பிக்கையை சாகடிக்காமல் மைத்திரிபாலவும் 2015ஆம் ஆண்டு இறுதியில் யாழ்ப்பாணம் வந்திருந்த போது, மயிலிட்டித்துறைமுகம் 6 மாதங்களில் விடுவிக்கப்படும் என்று, இடைத்தங்கல் முகாமில் தங்கியிருந்த அந்தப் பகுதி மக்களுக்கு வாக்குறுதியளித்தார். அந்த வாக்குறுதி அவர் குறிப்பிட்ட காலப்பகுதியில் நிறைவேற்றப்படவில்லை. வருடங்கள் கடந்த பின்னர் என்றாலும் அது நிறைவேற்றப்பட்டமை மகிழ்ச்சிதான். அத்தோடு அந்தத் துறையை மீண்டும் 80களின் நிலமையை நோக்கி அபிவிருத்தி செய்வதற்கு எடுக்கப்பட்டிருக்கும் முயற்சிகளும் பாராட்டப்பட வேண்டியவையே!

இத்தகைய பின்னணியைக் கொண்ட மயிலிட்டியின் அபிவிருத்தி நிகழ்வில்தான் தமது எதிர்பார்க்கைகள் என்ன என்பதைத் தமிழ் மக்கள் ஆணித்தரமாக மீண்டும் மைத்திரிபாலவுக்கு எடுத்தியம்பியிருக்கிறார்கள். "புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப்பலம் கிடைக்கும், எனவே அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தைரியமாக முடிவு எடுத்து இந்த ஆண்டு இறுதிக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்" என்று நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் அரசுக் கட்சித் தலைவருமான மாவை சேனாதிராசா கூறியபோது பலத்த கரகோசத்தை எழுப்பி அதனை ஆமோதித்தது அங்கே திரண்டிருந்த சனக்கூட்டம், இந்தக் கூட்டம் மைத்திரியின் கட்சியின் ஏற்பாடு மற்றும் ஒழுங்கமைப்பின் கீழ் நிகழ்வுக்க அழைத்து வரப்பட்டிருந்தது என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். இருந்தபோதும் மாவையின் உரைக்கு அழுத்தமான ஆதரவை வழங்கியதன் மூலம் மைத்திரிக்கு தமது எண்ணக் கிடக்கையை வெளிப்படுத்த அவர்கள் தவறவில்லை.

அரசபடைகளின் ஆக்கிரமிப்பின் கீழ் உள்ள காணிகளையும் ஆண்டிறுதிக்குள் விடுவிக்கவேண்டும் என்று மாவை கூறியபோது அதற்கும் பலத்த ஆதரவு தெரிவித்து தமது எதிர்பார்ப்பை அவர்கள் வெளிப்படுத்தினர்.

மக்களின் அழுத்தமான இந்தச் செய்தியை மைத்திரிபால சிறிசேன புரிந்துகொண்டாரோ இல்லையோ தெரியாது. ஆனால் அவர் மிகமுக்கியமாகப் புரிந்துகொள்ளவேண்டிய விடயம் இது.

அபிவிருத்தி, உதவி எல்லாவற்றுக்கும் முதலில் அரசியல் தீர்வையே தாம் எதிர்பார்க்கிறார்கள் என்பதையும் அதைநோக்கித் துணிந்து அரச தலைவர் முன்னேற வேண்டும் என்பதையும் அதற்குத் தாம் ஆதரவாக இருப்பார்கள் என்பதையும் மக்கள் தமது செயல் மூலமாகத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

அவர்களின் செய்திக்கு பதில் சொல்லாமல் அரசதலைவர் நழுவிவிட்டார் என்கிறபோதும் மயிலிட்டி துறையை விடுவித்தது போன்று பலகாலம் தாழ்த்தி தீர்வைக் கொண்டுவர முடியாது. அதற்கிடையில் அவரது பதவி இந்தக் காரணத்திற்காகவே கூட பறிபோய்விடலாம் என்பதால் தீர்வை எட்டுவதற்கு துணிவோடு முன்வரவேண்டும் அரசதலைவர்.

# மூன்றாவது தடவையாக அரச தலைவர் பதவி மகிந்தவுக்குக் கிட்டுமா?

சேரலாதன்



அடுத்த அரசதலைவர் தேர்தலில் மகிந்த ராஜபக்ச போட்டியிட முடியாதென அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அதேவேளை, அவரது வெற்றியைத் தடுக்கவே அரசு, அவருக்கு எதிரான புலன்விசாரணைகளை மேற்கொள்வதாக கூட்டு எதிரணி விமர்சித்து வருகிறது.

தற்போது நடைமுறையிலுள்ள அரசமைப்பின் பிரகாரம், மகிந்த அரசதலைவர் தேர்தலில் மீண்டும் போட்டியிட முடியாதென வரையறை செய்யப்பட்டுள்ளது. அரசமைப்பின் 20ஆவது திருத்தம் இதை உறுதி செய்கின்றது. ஆனால் இந்த விடயத்தில் சமீப நாள்களாக மக்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் திரிவுபடுத்தப்பட்ட செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஆரம்பத்தில் சட்ட நிபுணர் குழுவொன்று, மகிந்த மீண்டும் தேர்தலில் போட்டியிடுவதற்கு எவ்வித தடையுமில்லையெனத் தெரிவித்ததாகச் செய்திகள் வெளிவந்தன. இதைத் தொடர்ந்து, இது தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் முடிவை நாடப்போவதாகவும் தெரிவிக்கப்பட்டது. மகிந்த, அரசமைப்புத் தொடர்பாக அறியாத ஒருவரல்ல. சுமார் 10ஆண்டுகள் அரசதலைவர் பதவியை வகித்த அவருக்கு அரசமைப்பில் உள்ள சட்ட ஏற்பாடுகள் தெரியாமல் இருக்க முடியாது.

### கூட்டு அரசின் பலவீனமான நிர்வாகமே, மகிந்த தரப்பினரது தற்போதைய எழுச்சிக்குக் காரணம்

கூட்டு அரசின் பலவீனமே மகிந்த தரப்பின் எழுச்சிக்குக் காரணமாக அமைந்துவிட்டது. மகிந்த



தரப்புக்கு அரசு அஞ்சி நடப்பதாகக் குற்றச்சாட்டுகளும் எழுந்துள்ளன. ஆனால் இதற்கான சரியான காரணத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை. தற்போதைய அரசதலைவரும், மகிந்தவும் நீண்ட காலமாக ஒரே கட்சியில் இருந்து பணியாற்றியவர்கள். மகிந்தவுக்குக் கீழ் ஓர் அமைச்சராக இருந்தவர்தான் மைத்திரிபால சிறிசேன. அரச தலைவராகப் பதவி வகித்தபோது மகிந்த தமக்கு வழங்கப்பட்ட நிறைவேற்று அதிகாரங்களை ஒன்றுகூடத் தவறவிடாது நன்கு பயன்படுத்தினார். சில வேளைகளில் அவற்றையும் மீறி அவர் செயற்பட்டதையும் அவதானிக்க முடிந்தது.

2005ஆம் ஆண்டு அரசதலைவர் தேர்தலில் மகிந்த முதன்முதலாகக் குதித்தார். தனது தந்தையாரது வழியில்தான், மகிந்தவும் அரசியலுக்குள் பிரவேசித்து நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், தலைமை அமைச்சர், அரசதலைவரென அனைத்துப் பதவிகளையும் வகித்தார். ஆரம்பத்தில் ஒரு மனித உரிமைகள் செயற்பாட்டாளராகவே இவர் தம்மை அடையாளம் காட்டி வந்தார்.

### 2005ஆம் ஆண்டின் அரச தலைவர் தேர்தலில் சுதந்திரக்கட்சி சார்பில் மகிந்தவே போட்டியிட்டார்

பண்டாரநாயக்கவின் கீழ் இவரது தந்தையார் பணியாற்றியதைப் போன்று சந்திரிகா அம்மையாரின் கீழ் இவரால் பணியாற்ற முடிந்தது. ஆனால் இறுதிக் காலத்தில் மகிந்தவின் நடவடிக்கைகளில் சந்திரிகா அதிருப்தி அடைந்து காணப்பட்டார். இதனால் வேறு வழியின்றியே தலைமை அமைச்சராகவும், 2005ஆம் ஆண்டு இடம்பெற்ற அரசதலைவர் தேர்தலில் அரச தலைவர்பதவிக்கான வேட்பாளராகவும் இவரை சந்திரிகா நியமித்தார்.

அந்தத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவுக்கே அதிக வெற்றி வாய்ப்புக் காணப்பட்டது. தொடர்த் தோல்விகளிலிருந்து மீண்டுவருவதற்கான ஒரு சந்தர்ப்பமும் அவருக்குக் கிடைத்தது. ஆனால் விடுதலைப் புலிகளின் அறிவிப்பு தேர்தல் முடிவை தலைகீழாக மாற்றிவிட்டது. மகிந்த தேர்தலில் வெற்றிபெற்று அரசதலைவரானார்.

அரசதலைவர் பதவியை ஏற்றுக்கொண்டதும், அவரது குண இயல்புகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. போரை முனைப்புடன் முன்னெடுத்துச் செல்வதற்கு அவர் விரும்பினார். தமிழர்களின் உரிமைகள் தொடர்பாக அவர் அக்கறை காட்டியதுமில்லை. அவ்வாறு அவர் நடந்து கொண்டிருந்தால் இறுதிப்போர் இடம்பெற்றிருக்காது. பல்லாயிரக் கணக்கான தமிழர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டிருக்காது.

### வன்னி இறுதிப்போர் ஈழத் தமிழர் வரலாற்றில் கறுப்பு அத்தியாயங்கள் கொண்டது

தமிழர் வரலாற்றில் இந்த நாட்டில் இடம்பெற்ற இறுதிப்போர் கறுப்பு அத்தியாயங்களைக் கொண்டது. துயர் நிறைந்த சோகமான வரிகளை உள்ளடக்கியது. ஆனால் பொதுமக்களில் ஒருவருக்காவது பாதிப்பு ஏற்படாமல் தாம் போரை நடத்தி வெற்றிகொண்டதாக மகிந்த அறிவித்தது மட்டுமல்லாது, ஒருபோர் வெற்றி வீரனாக பெரும்பான்மையின மக்கள் மத்தியில் காட்சியளித்தார்.

போர்முடிந்த பின்னரும் தமிழ் மக்களுக்கு விடிவு கிடைக்கவில்லை.

2010ஆம் ஆண்டு இடம்பெற்ற அரசதலைவர் தேர்தலில் இரண்டாவது தடவையாகப் போட்டியிட்ட மகிந்த தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட சரத்பொன்சேகாவைத் தோற்கடித்து அரசதலைவரானார். அவர் தொடர்ந்தும் அந்தப் பதவியில் இருப்பதற்கு விரும்பியதால், அரசமைப்பில் 19ஆவது திருத்தத்தை நாடாளுமன்றத்தின் மூலமாக நிறைவேற்றிக் கொண்டார். தமது பதவிக்காலம் முடிவதற்கு முன்பாகவே 2015ஆம் ஆண்டு அரசதலைவர் தேர்தலை அறிவித்து அதில் போட்டியிட்டார். ஆனால் எவருமே எதிர்பார்க்காத வகையில், தமக்குக் கீழ் பணியாற்றிய மைத்திரிபால சிறிசேனவிடம் தோற்றுப்போனார்.

ஆனாலும் மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்ளவே அவர் விரும்புகின்றார். அதனால்தான் 2020ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள அரசதலைவர் தேர்தலைக் குறிவைத்து அவர் செயற்படுகின்றார். ஆனால் அவரது விருப்பம் நிறைவேறுமா என்பது குறித்து தற்போது தீர்க்கமாக எதுவித கருத்தையும் வெளிப்படுத்த இயலவில்லை.





# கருணாநிதி கைதானார்

## தமிழ்த் தலைவன் மு.கருணாநிதி -16

தேவநாயகம் தேவானந்த்

1989ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25ஆம் திகதி, இந்திய அரசியலிலும், தமிழக அரசியலிலும் ஒருகறைப்படிந்தநாள். ஆம், அன்றுதான் சட்டமன்றத்தின் மாண்பைமீறிய சம்பவம் நடந்தேறியது. அன்று தமிழகத்தின் முதல்வராக இருந்த மு. கருணாநிதி சட்டமன்றத்தில் வரவுசெலவு அறிக்கையை வாசித்துக் கொண்டிருக்கிறார். அப்போது 'டோன்ட் ரீட்... யு கிரிமினல். டோன்ட் ரீட்' ( Dont read. you criminal. Dont read)என்று ஜெயலலிதா கத்தினார். இதனால் ஆளும் கட்சியான தி.மு.கவினருக்கும், எதிர்க்கட்சியான அ.தி.மு.கவினருக்கும் இடையில் சர்ச்சை ஆரம்பமாகி களேபரம் நடைபெற்றது. இதில் ஜெயலலிதா தாக்கப்பட்டார்.

### சட்டமன்றத்தில் வைத்து ஜெயலலிதாமீது தி.மு.கவினர் தாக்குதல் நடத்தினர்

தி.மு.கவினர் ஜெயலலிதாவின் சேலையைப் பிடித்து இழுத்தார்கள். அவரது சேலை கிழிந்தது. இதனால் அதிமுகவினர் ஜெயலலிதாவைச் சுற்றி அரண் காத்து பாதுகாப்பாகவெளியே அழைத்துச் சென்றனர். இந்தசண்டையின்போது ஜெயலலிதா தலையில் பலமாக தாக்கப்பட்டார். நாடுமுழுவதும் இந்தச் செய்தி பரவி மத்திய அரசுக்கும் சென்று நெருக்கடி ஏற்படுத்தியது.

ஜெயலலிதா தனது ஆதரவாளர்கள் சிலருடன் ஆளுநர் மாளிகைக்கு விரைந்தார். அங்கு சட்டமன்றத்தில் தனக்கு நேர்ந்த கொடுமைகளை எடுத்து கூறினார். பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்து "ஒரு பெண்ணுக்குச் சட்டசபையிலேயே பாதுகாப்பு இல்லை எனில், மாநிலத்தில் சாமானிய மக்களுக்கு எப்படி பாதுகாப்பு இருக்கும்?" என்று கேள்வி எழுப்பினார். இந்தச் சம்பவம், தீராத பழிதீர்க்கும் பகையுணர்வை ஜெயலலிதாவின் மனதில் ஏற்படுத்தியது. இதன் பின்னர் 1996ஆம் ஆண்டில் ஊழல் செய்ததாக ஜெயலலிதா கைதுசெய்யப்பட்டார். அதனாலும் கருணாநிதியைப் பழிதீர்க்கும் எண்ணம் ஜெயலலிதாவின் மனதில் வலுத்தது.

### கருணாநிதியைப் பழிக்குப்பழி வாங்கப் போவதாக்ச் சபதமெடுத்த ஜெயலலிதா

ஜெயலலிதாசிறையிலிருந்து வெளியில் வந்ததும், மதுரையில் நடந்த ஒருபொதுக் கூட்டத்தில் பேசினார். "என்னை 27 நாள்கள் சிறையில் வைத்த கருணாநிதியை பழிவாங்காமல் விடமாட்டேன்"; என்று வெளிப்படையாகவே சொன்னார். சோதிடத்தில் அதிக நம்பிக்கைஉள்ளவரான ஜெயலலிதா சோதிடர்களிடமும் ஆலோசனை கேட்டார். "எதிரியைப் பழிவாங்கி விட்டு, உள்குருவாயூர் கோவிலுக்கு



யானையைத் தானமாகக் கொடுத்தால், நீண்ட ஆயுளோடு வாழலாம்...எதிரிகள் அழிவார்கள்" என்று சோதிடம் சொல்லப்பட்டது. இந்தப்பின்னணியில், ஜெயலலிதா கருணாநிதியைப் பழிவாங்கக் காத்திருந்தார்.

2001ஆம் ஆண்டு மே மாதத்தில் நடந்த சட்டமன்றத் தேர்தலில் ஜெயலலிதா வெற்றிபெற்று புதிதாக ஆட்சியமைத்தார். அவர் பதவியேற்றதைத் தொடர்ந்து, ஆச்சார்யலு சென்னை மாநகராட்சி ஆணையராக நியமிக்கப்பட்டார். இவர்; கருணாநிதி ஆட்சியில் இடை நீக்கம் செய்யப்பட்டவராவார். அவரது முறைப்பாட்டின் மீது கருணாநிதி கைதுசெய்யப்பட்டார். சென்னை நகரில் புதிதாக மேம்பாலங்களை அமைத்ததில் அரசுக்கு ரூபாய் 12 கோடி ரூபா இழப்புக்கள் ஏற்பட்டன என்பதுஅவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு.

இந்தக் கைதைப் பற்றி அப்போது மத்தியில் சட்ட அமைச்சராக இருந்த அருண் ஜெட்லி "சட்டத்தை நிலைநாட்டுவதில் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவது ஆரம்பக் கட்டத்திலேயே நன்கு தெரிகிறது" என்று குறிப்பிட்டார்.

### தமது படுக்கை அறையில் வைத்து கருணாநிதி காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார்

அதிகாலையில்தி.மு.கதலைவர் மு. கருணாநிதி, தனது வீட்டின் மேல்தளத்தில் படுக்கையறையில் இருந்தபோது கதவைத் திறந்த காவல் துறையினர், கருணாநிதியை மாற்று ஆடை அணிந்து கொள்ளும்படி கூறினர். பொலிசாரைச் சற்றும் எதிர்பாராத கருணாநிதி முரசொலிமாறனுக்குத் தொலைபேசியில் தகவல் தெரிவித்தார். முரசொலி மாறன் அப்போது மத்திய அமைச்சராக இருந்தார். முரசொலிமாறன் தனது அரச வாகனத்தில் கருணாநிதி வீட்டுக்கு வந்தார். காவல் துறையினர் அவரை உள்ளே நுழைய அனுமதிக்கவில்லை. உடனே தனது அம்பாசிடர் காரால் கதவை மோதித் திறந்து உள்ளே போனார். அதன் பின்னர், பொலிஸாருக்கும் இடையூறு விளைவித்தார் என்று அவர் கைதுசெய்யப்பட்டார். சுதந்திர இந்திய வரலாற்றில் முதல் முறையாக மத்திய அமைச்சராக உள்ள ஒருவர் கைதுசெய்யப்பட்ட நிகழ்வு அதுவாகும்.

கருணாநிதி அணிந்திருந்த லுங்கியுடனேயே அவரைக் கைது செய்தார்கள். கருணாநிதியைப் பொலிசார் எங்கு அழைத்து செல்கின்றனர் என்று எவருக்குமே அப்போது தெரியவில்லை. பின்னர் நீதிபதி முன்பு முன்னிலைப்படுத்தப்பட்டு, ஜூலை 10ஆம் திகதிவரை சிறையில் அடைக்க உத்தரவிடப்பட்டது. சிறையில் அடைப்பதற்காக கருணாநிதியைஅழைத்துச் சென்றபோது அவர் சிறை வாசலில் அமர்ந்திருந்து சுமார் ஒருமணி நேரம் போராட்டத்தில் ஈடுபட்டார்.

கருணாநிதியின் கைதை அவரது குடும்பத் தொலைக்காட்சியான சன் ரி.வி. திரும்பத் திரும்ப ஒளிபரப்பியது. தொலைக்காட்சியில் காட்டப்பட்ட ஒருகாட்சியில் வீட்டினுள் நுழைந்த பொலிஸார் தள்ளியதால், கருணாநிதி கீழே தடுமாறி விழுகிறார். அவரைக் காப்பாற்றச் சென்ற முரசொலி மாறனை தாக்கிய பொலிஸார், அவரைக் கைதுசெய்தனர். மாறன் இதயநோயாளியாக இருந்ததால் தனது மார்பில் செயற்கை இதயமுடுக்கியைப்பொருத்தி இருந்தார். கைது செய்யப்பட்டதும் அப்போலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதன்போது ஆயிரக்கணக்கான தி.மு.க. உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர். முன்னதாக மு. க. ஸ்டாலின் ஒரு நீதிபதியிடம் சரணடைந்தார்.

இந்தக் கைதில் காவல்துறை கையாண்ட பல தவறுகளைச் சுட்டிக்காட்டி நீதிமன்றம் கண்டித்தது.

அதேநேரம் ஜெயலலிதாவுக்கு பதவிப் பிரமாணம் செய்துவைத்த ஆளுநர் பாத்திமா பீவி தாமாகவே முன்வந்து பதவி விலகினார். அரசியல் கொந்தளிப்பே இதற்கு உடனடிக் காரணமானது. அரசியல் சட்டத்தைக் காப்பாற்றத் தவறியமைக்காக ஆளுநர் பாத்திமா பீவிஎ்ய அவரது பதவியில் இருந்து நீக்குமாறு அமைச்சரவை, குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரை செய்திருந்தது. இதனைத் தொடர்ந்தே அவர் தனது ஆளுநர் பதவியிலிருந்து விலகினார். சன் ரி.வியில் 'ஐய்யோ, கொல்றாங்களே.கொல்றாங்களே' என்ற கருணாநிதியின் கூக்குரல், திரும்பத் திரும்ப ஒளிபரப்பப்பட்டது. அது கருணாநிதி மீது அனுதாப அலையை உருவாக்கியது.

(தொடரும்)

## ஆசிரியருக்கான கடிதம்

# யாழ்.மாவட்ட கலாசாரப் பேரவையினால் உறுப்புரிமை அலட்சியம் செய்யப்படுவதேன்?

யாழ்ப்பாண மாவட்ட கலாசாரப் பேரவைக்கு உறுப்பினர்களை இணைத்தல் தொடர்பாக 2015ஆம் ஆண்டு பங்குனி மாதம் பத்திரிகைகளில் செய்தி வெளியாகி இருந்தது. ஆயுள் சந்தா ஆயிரம் ரூபா எனவும், வருடாந்தச் சந்தா நூறு ரூபா எனவும் பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனது கலையார்வம் காரணமாக யாழ். செயலகம் சென்று பொறுப்பான உத்தியோகத்தரிடம் விண்ணப்பப் படிவம் பெற்று அதனை நிரப்பிக் கையளித்திருந்தேன். பெரும்பாலும் எல்லோரும் ஆண்டுச் சந்தாவே செலுத்தியுள்ளதை அவதானித்தேன். எனினும் நான் ஆர்வம் காரணமாக ரூபா ஆயிரம் செலுத்தி ஆயுள் சந்தாதாரராக இணைந்து கொண்டேன்.

ஆனால், 2015ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டம் ஆடிமாதம் நடந்து முடிந்ததை பத்திரிகைகள்மூலம் வாசித்து அறிந்தேன். பொதுக்கூட்டத்துக்கு ஆயுள் சந்தாதாரராகிய எனக்கு அழைப்பிதழ் அனுப்பப்படாதமை குறித்து ஆதங்கம் அடைந்தேன். இது தொடர்பாக 2016.07.25ஆம்திகதி கலாசாரப் பேரவையின் தலைவராகிய மாவட்டச் செயலருக்கு கடிதம் மூலம் எனது ஆட்சேபனையைத் தெரியப்படுத்தியிருந்தேன்.

அந்தக் கடிதத்துக்கு யாழ்.மாவட்ட கலாசாரக் பேரவையின் செயலாளரால் பதில் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்தில் தவறுதலாக அழைப்பு அனுப்பப்படவில்லை எனவும், 2017ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டத்ததுக்கு அழைப்பு அனுப்பப்படுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் இன்று வரை எந்தக் கூட்டத்துக்கும் எந்த அழைப்பிதழும் எனக்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

இப்படி எத்தனை பேருக்கு நிகழ்ந்து இருக்கும்? அப்படியானால் இந்தப் பேரவை உறுப்பினர்கள் தங்கள் பதவிகளைத் தக்க வைப்பதற்காக புதியவர்களின் வரவை வெறுக்கிறார்களா? சந்தா எதற்காக அறவிடப்படுகிறது? அந்த நிதி எவ்விதம் செலவிடப்படுகிறது. தமது பொறுப்புக்களைச் சரிவரச் செய்ய முடியாதவர்கள் எதற்காகப் பதவிகளில் ஒட்டிக்கொண்டு இருக்கவேண்டும்? இந்தக் கேள்விகளுக்கு எவர்கள் பதில் அளிக்கப் போகிறார்கள்? மிகுந்த கவலையுடன் இந்தச் செய்தியைப் பதிவு செய்கிறேன். உரியவர்கள் தகுந்த நடவடிக்கை மேற்கொள்வார்களா?

***இரா.ஜெயக்குமார், உரும்பிராய்.***

# வெனிசுலாவும் பணவீக்கமும்

அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள், அரசியல் சிக்கல்கள், உள்நாட்டுப் போர் என்பன காரணமாக வரலாறு காணாத பொருளாதார நெருக்கடிய்ய எதிர்கொண்டுள்ளது தென்னமரிக்க நாடுகளில் ஒன்றான வெனிசுலா. அத்தியாவசியப் பொருள்களை கொள்வனவு செய்வதற்காகலட்சக்கணக்கானபொலிவர்களை செலவிட வேண்டிய நிலையே அங்குள்ளது. இந்த வருட முடிவுக்குள் வெனிசுலாவின் பணவீக்கம் சுமார் 10 லட்சம் மடங்குகளைத் தொடும் என்கிறது பன்னாட்டு நாணய நிதியம். இந்தநிலையில்அத்தியவசியப்பொருள்களையும் அதைக் கொள்வனவு செய்ய வேண்டுமாயின் எவ்வளவு பொலிவர்களைச்செலவிட வேண்டும் என்பதையும் பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் ஒளிப்படக் கோர்வையாக வெளியிட்டுள்ளது. அந்த ஒளிப்படங்கள் கீழே தரப்படுகின்றன.


2.4 கிலோ கோழிக்கறியின் விலை 1.46 கோடி பொலிவர்கள்.


ஒரு கிலோ தக்காளியின் விலை 50 லட்சம் பொலிவர்கள்.


ஒரு கிலோ கரட்டின் விலை 30 லட்சம் பொலிவர்கள்.


ஒரு கிலோ மாட்டுக்கறியின் விலை 95 லட்சம் பொலிவர்கள்.


ஒரு கழிப்பறைத் தாள் உருளை 26 லட்சம் பொலிவர்கள்.


ஒரு கிலோ அரிசியின் விலை 25 லட்சம் பொலிவர்கள்.


ஒரு கிலோ பாலடைக்கட்டியின் விலை 75 லட்சம் பொலிவர்கள்.

# இந்தியா - மேம்படுத்

இந்தியா - பாகிஸ்தான் இடையிலான உறவை மேம்படுத்துவதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்வதற்குத் தயார் என்று அறிவித்தது சீனா.

இந்தியா - பாகிஸ்தான் இடையிலான இருதரப்பு உறவில் மிகப்பெரும் விரிசல் ஏற்பட்டுள்ளது. மும்பைத் தாக்குதல், ஊரி இராணுவ முகாம் தாக்குதல் என்பன காரணமாக நாளுக்குநாள் இந்த விரிசல் பெருகிச் செல்கிறது. பாகிஸ்தானில் இதுவரை மாறிமாறி ஆட்சியமைத்த பாகிஸ்தான் மக்கள் கட்சி, பாகிஸ்தான் முஸ்லிம் லீக் என்பன இந்தியாவுடனான நெருக்கத்தில் அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை. இந்த நிலையில் பாகிஸ்தானின் வரலாற்றில் என்றுமே இல்லாத அளவுக்கு ஆட்சி மாற்றம் நிகழ்ந்துள்ளது. முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான்கான் தலைமையிலான தெக்ரிக் இ இன்சாப் கட்சி ஆட்சியமைத்து அவர் அந்த நாட்டின் தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார். இந்தியா அமைதிப் பேச்சுக்கு வரவேண்டும் என்று அவர் அழை

விடுத்துள்ளார். இந்த
ணணியில் இரண்டு
ளுக்கும் இடையில்
யஸ்தம் செய்யத்
என்று அறிவித்தது சீ
"பாகிஸ்தானில் ஏற்ப
ஆட்சி மாற்றத்தை
சந்தர்ப்பமாகக் கெ
இந்தியா - பாகிஸ்தான்
யில் அமைதி ஏற்பட
டும். இதற்கு சீனா
யான அனைத்து உ
ளையும் செய்யும்"
சீனாவின் தரப்பில் வெ
டப்பட்டுள்ள அறிக்கை
குறிப்பி டப்பட்டுள்ளது

# கேரளாவில் பரவலாக நோய்த் தொ

புதுடெல்லி, ஒக். 24

"கடும் வெள்ள இடரை எதிர்கொண்டுள்ள கேரளாவில் பரவலாக நோய்த் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது" என்று கேரள சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.



சுமார் பத்து நாள்களாகப் பெய்த கடும் மழை காரணமாக மிகப்பெரும் வெள்ள இடருக்கு முகம் கொடுத்துள்ளது கேரளா. சுமார் 400 பேர் அங்கு உயிரிழந்துள்ளனர். பலர் தேடப்பட்டு வருகின்றனர். மீட்புப் பணிகள் தற்போது படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், கேரளாவில் தற்போதுள்ள பெரிய சவால் நோய்த்தொற்று என்று கேரள சுகாதாரத் துறை அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

கேரள சுகாதாரத்துறை அமைச்சர் சைலஜா, "சில முகாம்களில் ஓரிருவருக்கு சின்னம்மை இருப்பது கண்டறியப்பட்டது. அத்தகையவர்கள் தனிமைப் படுத்தப்பட்டு சிறப்புக் கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட்டுள்ளனர். ஏனைய சில தொற்றுநோய்களுக்கான அறிகுறிகளும் தென்பட்டுள்ளன. தொற்று நோய்களும் குடிதண்ணீர்

தட்டுப்பாடும்தான் தற்
சவால். மக்கள் இன்னு
வில்லை.
அனைத்து முகாம்களு
பப்பட்டுள்ளனர். விரை
பிக்கை உள்ளது" என்ற

# ரஷ்யாவின் அழைப்

மொஸ்கோ, ஒக். 24

ஆப்கானிஸ்தான் அரசும் தலிபான்களும் அமைதிப் பேச்சில் ஈடுபட வேண்டும் என்று ரஷ்யா விடுத்த அழைப்பை தலிபான் அமைப்பு ஏற்றுக்கொண்டது. எனினும் ஆப்கானிஸ்தான் அரசு நிராகரித்தது.

சுமார் இரண்டு தசாப்த காலமாக தலிபானும் ஆப்கானிஸ்தான் அரசும் போரில் ஈடுபட்டு வருகின்றன. தலைநகர் காபூலைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வரவேண்டும் என்பது தலிபான் அமைப்பின் நோக்கம். ஆப்கானிஸ்தான் அரசுக்கு ஆதரவாக அமெரிக்கா போரிட்டு வருகிறது. எனினும் தலிபான் அமைப்பை ஒடுக்க அமெரிக்காவால் முடியவில்லை.

ஆப்கானிஸ்தான் அதிபர் அஸ்ரப் கானி தலிபான்களைப் பேச்சுக்கு வருமாறு பலமுறை அழைத்த போதிலும் அந்த அழைப்பை தலிபான் அமைப்பு நிராகரித்திருந்தது. அமெரிக்காவுடன் மட்டுமே பேச்சு நடத்துவோம் என்று தலிபான் அறிவித்திருந்தது. ஆனால் "ஆப்கானிஸ்தான் அரசுடன் பேசிய பின்னரே தம்முடன் பேச்சு நடத்த வேண்டும்" என்று அமெரிக்கா அறிவித்திருந்தது. இதையடுத்து தலிபான்-ஆப்கான் இடையில் மீண்டும் போர் நடைபெற்று வந்தது.


இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான மத்தியஸ்தம் செய்யத் தயார் என்றும் இரு தரப்பையும் பேச்சுக்கு வருமாறும் ரஷ்யா நேற்றுமுன்தினம் அழைப்பு விடுத்தது. அந்த அழைப்பை தலிபான் ஏற்றுக் கொண்ட போதிலும் ஆப்கானிஸ்தான் நிராகரித்தது.

"எமக்கும் தலிபான்களுக்கும் இடையிலான பேச்சை இரு தரப்பும் பேசித் தீர்த்துக்கொள்ளும். இந்த விவகாரத்தில் மூன்றாம் தரப்பின் தலையீடு அவசியமற்றது" என்று ஆப்கானிஸ்தான் அரசு குறிப்பிட்டுள்ளது. (ம)

# - பாக். உறவை
# ந்த சீனா தயார்



அவர் அழைப்பும்
ள்ளார். இந்தப் பின்
ல் இரண்டு நாடுக
இடையில் மத்தி
செய்யத் தயார்
அறிவித்தது சீனா.
தானில் ஏற்பட்டுள்ள
மாற்றத்தை சிறந்த
பமாகக் கொண்டு
- பாகிஸ்தான் இடை
மைதி ஏற்பட வேண்
ற்கு சீனா தேவை
அனைத்து உதவிக
செய்யும்" என்று
ன் தரப்பில் வெளியி
ள்ள அறிக்கையில்
ப்பட்டுள்ளது. (ம)



## சந்திரனில் உறை நிலையில் உள்ளன தண்ணீர் படிமங்கள்

வொஷிங்டன், ஒக். 24

சந்திரனில் உறை நிலையில் தண்ணீர் படிமங்கள் உள்ளன என்று உறுதி செய்துள்ளது அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவன மான நாசா.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவின் 'இஸ்ரோ' நிறுவனம் சந்திராயன்1 என்ற விண்கலத்தை சந்திரனுக்கு அனுப்பியது.

அந்த விண்கலம் நடத்திய ஆய்வில் சந்திரனில் உறைந்த நிலையில் தண்ணீர் படிமங்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அவ்வ கறுப்பு நிறத்திலும், மிகவும் குளிராகவும் இருந்தன. எனவே அங்கு தண்ணீர் இருப்பதற்கான சாத்தியக்கூறு உள்ளது என இஸ்ரோ தெரிவித்தது.

அது குறித்து அமெரிக்காவின் 'நாசா' விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டனர். அதில் சந்திரனின் தென் துருவத்தில் பெரும்பாலான ஐஸ் படிமங்கள் மிகவும் கடினமான நிலையில் அடர்த்தியாக உள்ளன. அதே நேரத்தில் வடதுருவத்தில் உள்ள ஐஸ் படிமங்கள் பரந்து விரிந்த நிலையில் அடர்த்தியற்று இருப்பது தெரிய வந்துள்ளது.

அவை சந்திரனில் சந்திராயன்1 விண்கலம் கண்டுபிடித்த ஐஸ் படிமங்கள்தான் என்றும், ஆகவே அங்கு தண்ணீர் இருப்பதற்கான சாத்தியம் உள்ளது என்றும் நாசா விஞ்ஞானிகள் உறுதிசெய்துள்ளனர். (ம)

## ப்த் தொற்றுக்கள்



ம்தான் தற்போது நாம் எதிர்கொள்ளும் பெரிய
க்கள் இன்னும் அச்சத்தில் இருந்து மீண்டு வர

முகாம்களுக்கும் மனநல மருத்துவர்கள் அனுப்
னர். விரைவில் மீண்டு வருவோம் என்ற நம்
ள்ளது" என்று தெரிவித்தார். (ம)




## வெனிசுலாவில் நில நடுக்கம்

கரஸ்கஸ், ஒக். 24

தென்னமரிக்க நாடுகளில் ஒன்றாக வெனிசுலாவில் நேற்று முன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது. வெனிசுலாவின் கிழக்குப் பகுதியில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது என்றும் ரிச்டர் அளவுகோலில் 7 அலகுகளாக இந்த நில அதிர்வு பதிவானது என்றும் அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

நிலநடுக்கத்தால் ஓரிரு கட்டடங்கள் இடிந்தன. சில கட்டடங்களில் விரிசல் ஏற்பட்டது. எனினும் உயிரிழப்பு எதுவும் பதிவாகவில்லை. (ம)

## பக்தாதி உயிருடன்

டமஸ்கஸ், ஒக். 24

ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பின் தலைவர் அபூபக்கர் அல் பக்தாதி உயிருடன் உள்ளார் என்கின்றன பன்னாட்டு செய்தி நிறுவனங்கள். பக்தாதியின் குரல் என்று நம்பப்படுகின்ற ஒலிப்பதிவு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இதையடுத்தே பக்தாதி உயிருடன் உள்ளார் என்று ஊகிக்கப்படுகிறது.

அந்த ஒலிப்பதிவில், "எமது அமைப்பினர் பயத்துடனும், பசியுடனும் உள்ளனர். ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு சமீபத்தில் பல தோல்விகளைச் சந்தித்துள்ளது. இது கடவுள் எம்மைச் சோதிக்கும் காலம். இதை பொறுமையுடன் கையாள வேண்டும். நிச்சயம் இறைவன் பொறுமையாக இருப்பவர்களுக்கு நற்செய்தியை அறிவிப்பார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சிரியாவின் ரக்கா அருகே கடந்த வருடம் ஜீன் மாதம் 28ஆம் திகதி ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் முக்கியத் தலைவர்கள் பங்கேற்ற கூட்டம் நடந்தது. அப்போது சுகோய் ரக போர் வானூர்திகள் மூலம் அவர்கள் குழுமியிருந்த பகுதியில் சுமார் 10 நிமிடம் வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் பக்தாதியும் 30 முக்கிய தளபதிகளும் உயிரிழந்தனர் என்று ரஷ்யா உறுதிப்படுத்தியது. எனினும் அமெரிக்கா அதை மறுத்திருந்தது. இத்தகையதொரு பின்னணியில் இந்த ஒலிப்பதிவு வெளிவந்துள்ளது. சுமார் ஒரு வருடங்களின் பின்னர் பக்தாதியின் ஒலிப்பதிவு என்று சொல்லப்படுகின்ற ஒலிப்பதிவு வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ழப்பை ஏற்றது தலிபான் நிராகரித்தது ஆப்கான்

வோம் என்று
ால் "ஆப்கா
னரே தம்மு
என்று அமெ
யடுத்து தலி
ண்டும் போர்

ண்டுவருவ
தயார் என
வருமாறும்
ழைப்பு விடுத்
ான் ஏற்றுக்
தான் நிராக

டையிலான
த்து க்கொள்
றாம் தரப்
என்று ஆப்
ளது. (ம)



twitter



பிளாக் லைட்@BlackLightOfl

கூன் கொண்ட கிழவன் தலை நிமிர்ந்து பார்க்கிறான்..!
போன் கொண்ட இளைஞன் கூன் கொண்டு நடக்கிறான்..!!

வேட்பாளர்களே...

அப்பப்ப
சொன்னாத்தான்
கை தட்டல்
சத்தம் வரும்,
அடிக்கடி
சொன்னா காதில
குருதிதான்
வரும்.




# வெளியானது 'விஸ்வாசம்' முதல் சுவரொட்டி

அஜித் -சிவா் கூட்டணியில் உருவாகிவரும் படம் 'விஸ்வாசம்'. 'வீரம்', 'வேதாளம்', 'விவேகம்' ஆகிய படங்களைத் தொடா்ந்து சிவா இயக்கத்தில் அஜித் நடிக்கும் நான்காவது படம் இது. இந்தப் படத்தில் நயன்தாராவும் நடிக்கிறார். ஏற் கனவே 'பில்லா' மற்றும் 'ஆரம்பம்' படங்களில் அஜித் -நயன்தாரா இணைந்து நடித்துள்ளனர்.
இந்தப் படத்தின் முதல் சுவரொட்டி வெளியாகியுள்ளது. அந்த சுவரொட்டியில் படம் எதிர்வரும் பொங்கலுக்கு வெளியாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.



இதுதான் விஸ்வாசமா இருக்குமோ...?



# தடுப்போம்!

எங்களைப் பார்த்து கேட்கிற கேள்வி. "இந்த மாதிரி சம்பவம் நடக்கிறப்ப தடுக்க மாட்டீங்களான்னு தான். அய்யா, ரோட்டுல காட்டுல மேட்டு லன்னு எங்க ஒரு அடிதடி வெட்டுக்குத்து வழிப்பறி சம்பவம் நடக்கிறப்பவும் நாங்க ளும் தடுக்கத்தான் செய்றோம். சொல்லப் போனா தடுக்கிறதை மட்டும்தான் செய் றோம்.
அதாவது...
அறுபது வயசு பெண்மணிகிட்ட எவனாவது செயினைப்பறிச்சுக்கிட்டு ஓடுறப்ப, பிடிக்கப் போறவங்களைப் பார்த்து, "உனக்கெதுக் குப்பா இந்த வேலை. அவன் கத்தியால கித்தியால குத்தி டப்போறான்னு சொல்லி உதவப் போறவனைத் தடுக்கறோம்.

வங்கியில பணம் எடுத்துக்கிட்டு வர்ற வயசா னவர்கிட்ட எவனாவது பணத்தைப் புடுங்கிட்டு போனா, அதைப் புடிக்க போறவங்களை, "யோவ்! அவனுக்குப் பின்னால ஒரு கும்பலே இருக் கும். போய் உதைபட்டு வராதேனு புடிக்கப் பாயறவ னைத் தடுக்கறோம்.

நடு ரோட்டுல, மனைவியை புருஷன் காரன் அடிக் கிறப்ப, எவனாவது விலக்கி விடப் போனாலும், "யோவ். அது அவன் குடும்ப பிரச்சினைய்யா, இன்னைக்கு அடிச்சுக்குவாங்க, நாளைக்கு சேர்ந் துக்குவாங்கனு விலக்கி விடப் போறவனைத் தடுப் போம்.

சாலையில விபத்து நடந்தா, "ஆம்புலன்ஸ் வரும் வரை வெயிட் பண்ணாம அடிபட்டவனைத் தூக்கிக் கிட்டு ஆஸ்பத்திரிக்கு போலாம்னு உதவப் போற வனை "ஏம்பா! நீ பாட்டுக்கு ஹீரோ வேலை செய்ய பறேன்னு போகாத! அப்புறம் பொலிஸ், கோர்ட்டு, கேஸுனு அலையணும்னு தடுக்கறோம்.

சமூக அவலம் நடக்கிறப்போ, நாங்களும் தடுக்கத் தான் செய்யறோம். என்ன இந்த மாதிரித்தான் தடுக்கிறோம். அம்புட்டும்தான்....






**மேடம்:** புதிய நண்பரின் அறிமுகமும், ஆலோசனையும் கிடைக்கும். தொழில், வியாபாரம் செழித்து கூடுதல் நன்மை பெறுவீர்கள். தாராள பணவரவால் சேமிப்பீர்கள்.

**இடபம்:** அனுபவசாலியின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழிலில் சீரான இலாபம் கிடைக்கும். பெண்களுக்கு செலவில் சிக்கனம் தேவை.

**மிதுனம்:** உறவினர்களிடம் விவாதம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வாய்ப்பை சரியாகப் பயன்படுத்த வும். திடீர் செலவால் சேமிப்பு கரையும்.

**கடகம்:** விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி பணி இலகுவாக நிறை வேறும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**சிங்கம்:** பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரம் நண்பரின் உதவியால் வளர்ச்சி பெறும். வருமானம் உயரும். குடும்பத்தினர் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** புத்துணர்வுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் சிறு பிரச்னைகள் குறுக்கிட்டு மறையும். பணவிஷயத்தில் சற்று கவனம் தேவை.

**துலாம்:** செயலில் முன்யோசனையுடன் ஈடுபடவும். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தைப் பாதுகாக் க வும். இலாபம் சுமார்.

**விருச்சிகம்:** எதிலும் அறிவுப் பூர்வமாக செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். தாராள பணவரவில் சேமிப்பு அதிகரிக்கும்.

**தனுசு:** பிறரது ஏளன பேச்சுக்காக மனம் வருந்த வேண்டாம். குடும்பத்தினர் ஆதரவாக நடந்து கொள்வர். தொழிலில் இடையூறு குறுக்கிட்டாலும் வருமானம் குறையாது.

**மகரம்:** நல்லவர்களின் நட்பு கிடைக்கும். தாமதமான செயலில் அனுகூலபலன் உண்டாகும். தொழிலில் உற்பத்தி விற்பனை தெய்வ அருளால் அதிகரிக்கும்.

**கும்பம்:** பணிகள் நிறைவேற கூடுதல் முயற்சி தேவைப்படும். தொழில், வியாபாரத்தில் குறுக்கீடு இருக்கலாம். இலாபம் சீராக இருக்கும். அதிக நிபந்தனைகளுடன் கடன் பெற வேண்டாம்.

**மீனம்:** உறுதி மிக்க மனதுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் பெருகும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 7 | | | | 8 | |
| 1 | | 4 | 2 | | | | | 6 |
| | | | | | 6 | 9 | 2 | |
| | | | | | | | | |
| 6 | 5 | | | | 7 | 2 | 1 | |
| | 9 | | | 5 | | | | |
| | | 8 | | | 1 | 6 | | |
| | | | | | | 3 | 5 | |
| 3 | | | 4 | | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 8 | 3 | 7 | 6 | 2 | 5 | 1 | 9 |
| 1 | 9 | 2 | 5 | 8 | 3 | 4 | 7 | 6 |
| 6 | 7 | 5 | 1 | 4 | 9 | 2 | 8 | 3 |
| 5 | 1 | 9 | 6 | 2 | 7 | 3 | 4 | 8 |
| 2 | 4 | 7 | 9 | 3 | 8 | 6 | 5 | 1 |
| 8 | 3 | 6 | 4 | 1 | 5 | 7 | 9 | 2 |
| 3 | 6 | 1 | 8 | 5 | 4 | 9 | 2 | 7 |
| 9 | 2 | 4 | 3 | 7 | 1 | 8 | 6 | 5 |
| 7 | 5 | 8 | 2 | 9 | 6 | 1 | 3 | 4 |

நேற்றைய விடை

# சிந்திக்க...

நீங்கள் ஜெயித்துக்காட்டுவது முக்கியமல்ல, ஜெயித்தபின் இதுபோல பாதிக்கப்பட்ட மற்றவர்களுக்கு வழிகாட்டுவதுதான் முக்கியம்.
உடல்நலமின்மையைத் தவிர்ப்பது விவேகம், உடல்நல மின் மையை ஜெயிப்பது வீரம். மருந்து கள் 20வீதம்தான் குணப்படுத்தும், மனசுதான் 80வீதம் குணப்படுத்தும்.



உடல்நிலை பாதிக்கப்படுவது எம் கையில் இல்லை. ஆனால் மனதைப் பாதிக்கப்படாமல் வைத்திருப்பது எம்மிடம்தான் இருக்கிறது.

உடல் வலிமை மட்டும் இருந்தவர்கள் வீழ்ந்ததையும், மனவலிமை பெற்ற வர்கள் வாழ்ந்ததையுமே வரலாறு எமக்குக் காட்டியிருக்கிறது.

## நாளை

# 25.08.2018

சனிக்கிழமை

ஆவணி 09

திதி: சதுர்த்தசி பி.ப. 04.02 வரை
நட்சத்திரம்: திருவோணம் மு.ப. 0.29 வரை
சுபநேரம்: 03.05 – 04.35 வரை
ராகுகாலம்: 09.05 – 10.35 வரை




# அம்புலி மாமா

- சந்திரனை நிலா, திங்கள், வெண்ணிலா, அம்புலி மாமா என்று பல பெயர்களால் அழைப்போம்.
- சந்திரன் இரவு வேளையில் வானில் பவனிவரும்.
- அது நட்சத்திரக் கூட்டங்கள் நடுவில் ஒளிவீசும்.
- இதற்கு தனியான ஒளி கிடையாது.
- அது சூரியனில் இருந்து ஒளித் தெறிப்பை பெற்று ஒளி தருகிறது.
- சந்திரன் பூமியின் உபகோளாகும்.
- இது பூமிக்கு மிக அண்மையில் உள்ளது.
- சந்திரன் தன்னைத் தானே சுற்றிக் கொண்டு பூமியையும் சுற்றி வருகிறது.
- இது பூமியை ஒரு முறை சுற்றிவர எடுக்கும் காலம் ஒரு மாதமாகும்.
- சந்திரன் ஆரம்பத்தில் பிறை வடிவில் தெரியும்.
- பின்னர் தினமும் இது வளர்ந்து வரும்.
- ஒருநாள் அது முழுநிலாவாகக் காட்சி தரும்.
- அன்றைய தினம் பூரணை, பௌர்ணமி என்று அழைக்கப்படும்.
- பின்னர் இது ஒவ்வொரு நாளும் படிப்படியாகத் தேய்ந்து காட்சி தரும்.
- இறுதியில் ஒருநாள் அது முற்றாக மறைந்து விடும்.
- அன்றைய தினம் அமாவாசை எனப்படும்.
- அமாவாசை அன்று இரவில் பூமியில் இருள் சூழ்ந்திருக்கும்.
- பூரணை அன்று இரவில் முழு நிலவும் பால் ஒளியைப் பொழியும்.
- சந்திரனில் பூமியைவிடக் குறைந்த ஈர்ப்பு விசை உண்டு.
- இந்தச் சந்திரனின் ஈர்ப்பினால் கடலில் வற்றுப்பெருக்கு ஏற்படும்.
- இங்கு வளிமண்டலம் கிடையாது.
- இங்கு பகலில் வெப்பமும் இரவில் அதிக குளிரும் நிலவுகிறது.
- சந்திரனின் ஒளியை வர்ணித்து பண்டைக்காலம் முதல் இந்தக் காலம் வரை பல கவிஞர்கள் பற்பல கவிதைகளைப் பாடி வருகின்றனர்.
- சந்திரனின் ஒளிமுகத்தைப் பெண்கள் முகத்துக்கும் குழந்தைகளின் முகத்துக்கும் ஒப்பிட்டு பாடுவதில் கவிஞர்கள் வல்லவர்கள்.
- தாய்மார் சந்திரனை அம்புலி மாமா என்று காட்டி குழந்தைகளுக்கு உணவூட்டுவது முற்காலத்தில் வழக்கமாக இருந்தது.
- சந்திரனைக் கடவுளாக வழிபடும் வழக்கமும் இருந்து வந்திருக்கிறது.
- கைக்கு எட்டாப் பொருளாக இருந்த சந்திரனில், 1969இல் அமெரிக்க விண்கலமான அப்பலோ 11இல் பயணித்த நீல்ஆம்ஸ்ரோங், அல்ரின் என்பவர்கள் கால் பதித்தார்கள்.

# உண்மைக்குப் பரிசு

ஓர் ஊரில் இராமன், சோமன் என்று இரு நண்பர்கள் இருந்தார்கள். இருவரும் ஓரளவு படித்திருந்தனர். தமது ஊரில் ஏதேதோ வேலைகளைச் செய்து பிழைத்துவந்தனர். ஒருநாள் இராமன் தன் நண்பனிடம் "சோமா, எமக்குத் திடீரென ஒரு புதையல் கிடைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?" என்று கேட்டான். "இராமா! இப்படியெல்லாம் நினைக்காமல் பாடுபட்டு நேர்மையாக இருந்து பணம் சேர்ப்பதே நல்லது"என்றான் சோமன். சில நாள்களின் பின்னர் இருவரும் ஒரு வேலையாக் அடுத்த ஊருக்குச் சென்று கொண்டிருந்தனர். வழியில் ஒரு பையை இராமன் கண்டெடுத்தான். அதைத் திறந்து பார்த்ததில் அதற்குள் ஐம்பது ஆயிரம் ரூபா பணம் இருப்பதைக் கண்டு மிக மகிழ்ந்து "ஆகா என் அதிஷ்டமே அதிஷ்டம். கடவுளே என் நிலையைப் பார்த்து இதை எனக்குக் கொடுத்திருக்கிறார். இதை இருவரும் சமமாகப் பங்கிட்டு எடுப்போம்"என்றான். சோமனோ "வேண்டாம் இது எவரோ தவறவிட்ட பணம். நாம் உரிமை கொண்டாடுவது சரியல்ல. நாம் இந்தப் பையைக் கிராம உத்தியோகத்தரிடம் ஒப்படைத்து விடுவோம். அவர் பையைத் தவற விட்டவரைக் கண்டு பிடித்து அவரிடம் பணத்தைச் சேர்த்து விடுவார். மற்றவர் பணத்துக்கு நாம் ஆசைப்படக் கூடாது. நாமே உழைத்துப் பணம் சம்பாதித்து, கிடைத்ததைக் கொண்டு திருப்தியுடன் வாழ்வதே நல்லது"என்றான். இராமனோ முடியாது, இதுவழியில் நான் கண்டெடுத்த பணம். இது கிடைத்த போது நீயும் பக்கத்தில் இருந்தமையால் தான் உனக்குப் பங்கு தரநினைத்தேன். நீ பங்கு வேண்டாம் என்கிறாய்" என்று கூறி, சோமனது கைக்குள் வலுக்கட்டாயமாக ரூபா இருபத்தையாயிரத்தைத் திணித்து விட்டான். வேறு வழியில்லாமல் அந்தப் பணத்தைப் பெற்றுக்கொண்டான் சோமன்.




இராமனோ உடனடியாகப் பட்டணம் சென்று அந்தப் பணத்துக்கு தனது மனைவி பிள்ளைகளுக்கு ஆடைகள் பலவற்றை வாங்கினான். ஆனால் சோமனோ இராமன் கொடுத்த அந்தப் பணத்தைச் செலவு செய்யாது தனது வீட்டுக்கு எடுத்துச் சென்றான்.

இந்தச் சம்பவம் நடந்து ஒரு மாத காலத்தின் பின்னர் சோமன் இராமனிடம் சென்று "இராமா, எனக்குப் பட்டணத்தில் உத்தியோகம் கிடைத்து விட்டது. அதைநான் சென்று ஏற்கப் போகிறேன்"என்றான். அதைக் கேட்டு இராமன் ஆச்சரியப்பட்டு "உனக்கு எப்படி இந்த வேலை கிடைத்தது?" என்று கேட்டான். சோமன் "நீ கண்டெடுத்த பணத்தில் எனக்குப் பாதிப்பணத்தைக் கொடுத்தாய். நினைவிருக்கிறதா? அந்தப் பணத்தை நான் செலவு செய்யவில்லை. அந்தப் பணத்தை நான் முன்பு உனக்குக் கூறியப்படி கிராம உத்தியோகத்தரிடம் கொடுத்து நடந்ததைக் கூறி, மீதிப் பணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சம்பாதித்து அவரிடம் கொடுத்து விடுவதாகக் கூறினேன். நான் கூறியதைக் கேட்ட அவர் என்னைப் பாராட்டிவிட்டு அந்தப் பணப்பையின் சொந்தக்காரரான நல்லசாமி என்பவரைத் தேடிப்பிடித்து அந்தப் பணத்தை கையளித்ததோடு, என்னைப் பற்றியும் அவரிடம் கூறியுள்ளார். அந்த நல்லசாமி என்ற வியாபாரியின் மைத்துனர் ஒருவர் அரச நிதிப்பிரிவில் வேலை பார்க்கிறார். அவரிடம் என்னைப் பற்றிக் கூறி, பரிந்துரை செய்திருக்கிறார். அவரின் பரிந்துரையின் பேரில் அரச நிதிப்பிரிவில் எனக்கு நாணயக் கணக்கெழுதும், கணக்காளர் வேலை கிடைத்துள்ளது" என்றான் சோமன். இதனைக் கேட்ட ராமன் அப்படியானால் என்னை விட்டு விட்டு நீ மட்டும் பட்டணம் போகிறாயா?" என்றான் பெருமூச்சுவிட்டபடி.

"நண்பா கவலைப்படாதே!நான் அந்த வியாபாரியிடம் உன்னைப் பற்றியும் கூறியுள்ளேன். உனது ஏழ்மை நிலைதான், நாம் கண்டெடுத்த பணத்தில் உன்னை ஆசை கொள்ள வைத்ததென்றும் கூறி, உன்னை அவரது வியாபாரத்தில் கூட்டுச் சேர்த்துக்கொள்ளும்படி கூறியுள்ளேன். அவரும் உனக்கு வேலை தரச் சம்மதித்து விட்டார். நீயும் என் கூடப் புறப்படு. என் நிலையையும் கூறி, உன்னையும் என்னோடு அழைத்துப் போகத்தான் வந்தேன்"என்றான்.

"நண்பா! நீ நேர்மையாக நடந்ததால் கிடைத்த நல்ல பலன்பற்றி உணர்ந்தேன். இனி உன்னைப் போலவே நானும் நேர்மையாக வாழ்வேன்"என்றான் இராமன். நண்பர்கள் இருவரும் பட்டணம் நோக்கிப் புறப்பட்டனர்.



இரு படங்களுக்கும் இடையே 07 வேறுபாடுகள் உள்ளன; கண்டுபிடியுங்கள்

## வானம் கறுத்தால்



வானம் கறுத்தால் மழை பெய்யும்
மழை பெய்தால் மண் குளிரும்

மண்குளிர்ந்தால் புல்தழைக்கும்
புல் தழைத்தால் பசு மேயும்

பசு மேய்ந்தால் பால் சுரக்கும்
பால் சுரந்தால் கன்று குடிக்கும்

கன்று குடித்து மிஞ்சியதைக்
கறந்து கொண்டு வந்திடலாம்
காய்ச்சி நாமும் குடித்திடலாம்

# ‘வரலட்சுமி விரதம்’

## சௌபாக்கியம் தரும் திருத்தொண்டு

இரா.நிஷாந்தன்



**வழிபாடு**

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியாக விளங்கும் சிவப்பரம்பொருளை நாம் வழிபாடு இயற்றுகிறோம். பாடிப் பரவுகிறோம். ஆம், பக்தியொடு இந்து மதம் மேன்மைகொள் சைவ நீதியை உலகெலாம் பேணி மகத்துவங்கள் பல செய்திடக் காண்கிறோம். இங்கு வழிபாட்டு முறைகள் முதன்மைத்துவம் பெறுகின்றன. அவற்றுள் விரதங்கள் குறித்து நோக்கத்தக்கன. மனம், வாக்கு, மெய்யால் ஒன்றித்து இறைவனை வழிபாடு இயற்றுகின்ற தன்மை விரதங்களாக அற்புதம் புரிகின்றன. இவ்வகையிலே இந்துக்கள் பல்வேறுபட்ட விரதங்களை ஆண்டுதோறும் மெய்யுருக கடைப்பிடித்து வருகின்றனர்.

'இறைவன் திருவருளை நாடியிருத்தல்' என்ற தத்துவத்தையே இவை உணர்த்தி நிற்கின்றன. இவ்விதமான விரதங்களுள் சிறப்பானதாக வரலட்சுமி விரதம் கருதப்படுகிறது. ஆவணி மாதத்தில் வருகின்ற பௌர்ணமி தினத்துக்கு முன்பான வெள்ளிக்கிழமை வரலட்சுமி விரதம் கடைப்பிடிக்கப்படுகிறது. குறிப்பாக, 'செல்வ போகங்களைப் பெறுதல், புத்திர பாக்கியம், கணவன் நீண்ட ஆயுளோடு வாழ்தல், திருமணமான பெண்களின் மாங்கல்யம் நிலைத்திருத்தல், வாழ்வில் மகிழ்ச்சி உண்டாதல்' என இறைவனுடைய திருவருள் கடாட்சத்தை நினைந்து பெண்கள் இவ்விரதத்தை ஆண்டுதோறும் கடைப்பிடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**மகாலட்சுமியின் தோற்றம்**

ஒரு முறை அமிர்தம் வேண்டி தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தனர். அங்கிருந்து பல தெய்வீகமான வஸ்துக்கள வெளிவந்தன. இறுதியில் அழகியல் வனப்பொடு மகாலட்சுமி தேவி எழுந்தருளல் புரிந்தார். மகாலட்சுமியை வாழ்த்தி வணங்கிய தேவர்களின் தலைவன் இரத்தினமயமான பீடம் ஒன்றை எம்பிராட்டி மகாலட்சுமிக்கு தேவிக்கு அளித்தான். அங்கு கூடியிருந்த தேவர்களும், முனிவர்களும் மகாலட்சுமியைப் போற்றித் துதித்தனர். தன் திருக்கரத்தில் செல்வம் கொழிக்கும் கலசத்துடன் தோன்றிய திருமகள், காத்தல் கடவுளாம் விஸ்ணுவைத் தன் துணைவனாக ஏற்று மணமாலை சூடி அவர் இதயக்கமலத்தில் அமர்ந்து கொண்டாள்.

இத்தகு சிறப்புடைய திருமகள் லட்சுமியின் தோற்றப் பொலிவை மகாகவி பாரதியார் பினவருமாறு பாடிக் களிக்கிறார்.

**பாற்கடலிடைப் பிறந்தாள் – அது**
**பயந்த நல் அமுதத்தின் பான்மை கொண்டாள்**
**ஏற்குமோர் தாமரைப்பூ – அதில்**
**இணை மலர்த் திருவடி இசைந்திருப்பாள்**
**நாற்க் கரம் தானுடையாள் – அந்த**
**நான்கினும் பல வகைத் திருவுடையாள்**
**வேற்கரு விழியுடையாள் – செய்ய**
**மேனியள் பசுமையை விரும்பிடுவள்!**

**அருள் புரியும் அஸ்ட லட்சுமிகள்**



'ஆதிலட்சுமி, தான்யலட்சுமி, தைரிய லட்சுமி, கஜலட்சுமி, சந்தான லட்சுமி, விஜய லட்சுமி, வித்யாலட்சுமி, தனலட்சுமி' என வடிவம் தாங்கி மகாலட்சுமி அஸ்டலட்சுமிகளாக திருவருள் பாலிக்கும் சிறப்பு அற்புதமானது.

•ஆதி லட்சுமி - நோய் நொடி இன்றி உடல் நலம் பெறலாம்.
•தான்ய லட்சுமி - தானியங்கள் நிறைவாகக் கிடைப்பதோடு பசிப்பிணி நீங்கும்.
•தைரிய லட்சுமி - வாழ்வில் ஏற்படுகின்ற எத்தகைய இடர்ப்பாடுகளையும் எதிர்கொள்வதற்கான தைரியம் கிடைக்கும்.
•கஜ லட்சுமி - வாழ்வில் அனைத்து சௌபாக்கியங்களும் கிட்டும்.
•சந்தான லட்சுமி-குழந்தைப் பேறு கிடைக் கும்.
•விஜய லட்சுமி-நற்காரியங்கள் அத்தனையும் வெற்றி பெறும்.
•வித்யா லட்சுமி-கல்வியும் ஞானமும் நிலைபெறும்.
•தன லட்சுமி-செல்வச் செழிப்பு உண்டாகும்.

**வரலட்சுமி விரதம் கடைப்பிடிக்கும் முறை**

வரலட்சுமி விரதம் விஷ்ணு ஆலயங்களிலும் அம்பாள் ஆலயங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. திருவிளக்குப் பூஜையுடன் விரதத்தை உரிய நியதிப்படி கடைப்பிடிக்கலாம். ஆலயங்களுக்குச் செல்ல முடியாதவர்கள் வீடுகளில் உரிய முறைப்படி விரதத்தை மேற்கொள்ளலாம். குறிப்பாக, விரத காலத்தில் வீட்டை தூய்மைப்படுத்தி வாசலில் கோலம் இட்டு, தாயறையில் நிறை கும்பம் வைத்து பூக்கள், பூமாலைகள் முதலானவற்றை சாற்றி, நைவேத்தியமிட்டு திருவிளக்கேற்றி குங்கும அர்ச்சனை செய்யலாம். மகாலட்சுமி அஸ்டோத்திரம், மகாலட்சுமி துதி போன்றவற்றை உச்சரித்து நோன்புக் காப்பை கையில் அணிந்து விரதத்தை நிறைவு செய்யலாம்.

**ஈழத்தில் வரலட்சுமி விரதம்**


ஈழமணித் திருநாட்டில் வரலட்சுமி விரதம் பல ஆலயங்களில் சிறப்புற கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக விஷ்ணு ஆலயங்களில் இவ்விரதம் மேன்மையுறுவதை காணலாம். அவ்வகையில் வல்லிபுர ஆழ்வார் ஆலயம், வட்டக்கச்சி ரங்கநாதப்பெருமாள் ஆலயம், பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலயம் என்பன வரலட்சுமி விரத காலத்தில் அம்பிகையின் திருவருள் சிறப்பொடு விளங்கும்.

**அம்பிகையின் திருவருளை நாடுவோம்**

'பொருளில்லாதோருக்கு இவ் உலகில்லை, அருளில்லாதோர்க்கு அவ்வுலகில்லை' என்பதற்கு அமைவாக இன்று இந்தக் கலியுகத்தில் மனிதர்களைச் சீர்தூக்கிப்பார்க்கும் செல்வத்துக்கு அதிபதியான மகாலட்சுமியின் அருள் வேண்டி இன்றைய நன்னாளில் அனைத்து இல்லங்களிலும் ஆலயங்களிலும் வரலட்சுமி நோன்பு சிறப்பாக நடைபெறுகிறது. இந்தப் புனிதமான திருநாளில் நாமும் மகாலட்சுமி தேவியை மனம், வாக்கு, மெய்யால் பணிந்து வழிபாடு இயற்றுவோம். அருள் கடாட்சத்தைப் பெற்று செல்வச் செழிப்போடு வாழ்வோமாக.

# வரமொன்று தாராய் வரலக்குமித்தாயே!


யோகேஸ்வரி சிவப்பிரகாசம்



அம்மா, வரலக்குமித்தாயே! அகிலத்தின் செல்வங்கள் அனைத்தின் சக்திகளையும் ஒன்றுதிரட்டி ஒருருவாக்கி நாம் வணங்கும் அன்னையே உன் சக்தி பெரிதம்மா. செல்வத்தின் வலிமை பற்றிக் கூறவும் வேண்டுமோ? நின் சக்தியால் ஆகாதது ஏதுமுண்டோ? ஆனால் நீ எங்கள் அன்னையம்மா. அன்னையென்றால் அன்பின் உருவம், வாத்சல்யத்தின் வடிவம். நின் சக்தியினால் ஆகுவது அன்பு கலந்து அமையவேண்டும் என வேண்டியே நின்னைத் தாயாகக் கண்டோமம்மா.

நோன்பிருந்து வழிபாடுகள் செய்தால் வேண்டும்வரங்களெல்லாம் தருவாயென்ற நம்பிக்கையோடு வணங்கி நிற்கின்றோம். நம் தவத்தினால் நாம் பெற்ற தாயே! அம்மா, உன்னை அடைவதற்காய் நாம் இன்று செய்பவை பற்றி நீ நன்கு அறிவாய். சூதும், வஞ்சனையும், வன்முறைகளும் மட்டுமே உனையடையும் மார்க்கங்களென்னும் நம்பிக்கை நம்முன் வேரூன்றிவிட்டதம்மா. நாற்றமெடுக்கும் சகதியினூடு குறுக்கு வழியில் நீளும் கரங்களுக்கு வரமள்ளித் தரலாமா தாயே? அதன் பயன் எதுவென்பது நீ அறியாததா? நீ அள்ளி வழங்கும் செல்வம் எமை எவ்வாறெல்லாம் தீய வழிகளில் நடத்திச் சென்று உலகத்தையே பாவப் பூமியாக்குகிறது என்பதை நீ பார்க்கவில்லையா? நீதி வழி நின்று நெடுங்காலம் பாடுபட்டோருக்குப் பலன் ஏதுமற்றுப்போவதேன்? இது தகுமோ? தாயன்பு தன் பிள்ளைகளை நல்வழிப்படுத்துவது தான். கேட்டதெல்லாம் கொடுத்துக் கெடுத்து விடுவதல்ல.

செல்வம் அடைவதற்காய் நாம் செல்லும் வழிகளெல்லாம் நிணநாற்றம் நிறைந்து கிடக்கிறதே. அதை உன்னால் எப்படிப் பொறுக்க முடிகிறது. அந்த நாற்றச் சகதியுள் நீ வாழக் கூடாதம்மா. நீ நினைத்தால் நடக்காதது உண்டா? நின்னைச் சரணடைந்து வரம் வேண்டும் இந்த நல்ல நாளிலே ஒரு வரம் வேண்டினேன். தந்தருள் தாயே!. இந்த உலகமெல்லாம் செல்வம் செழிக்கவேண்டும். அதனால் அன்பும், அறமும், நிறைவும் நிலை பெறவேண்டும். இன்பமொன்றே எல்லோர் வாழ்விலும் நிலவவேண்டும். நீ வழங்கும் செல்வம் பாவத்தினால் அடையப்படக்கூடாது. அது பாவத்திற்குத் துணைபோகவுங்கூடாது. அருள்வாயா தாயே?



## நல்லூர் கந்தன் 9 ஆம் நாள் திருவிழா

### நலமே வ(த)ருவாய் நல்லைப் பதிவாசா!

பேரோங்கு நல்லைப் பதியமர்ந்த பேரழகா
பீடுதரு போதைகளால் புலம்புவோரைப் பார்த்தும்
வேரோங்கு விருட்சமென வாழ்ந்திருந்த மக்களின்று
வாரிழந்த பாதணிபோல் வருந்துவதைக் கண்ணுற்றும்
சீரோங்கு குடிமக்கள் சீர்வரிசையெலாம் இழந்து
சீறிவரும் சூதுவாதுகளால் சிதைவுறுவதைக் கண்ணுற்றும்
கூரோங்கு நாணமொடு குலவிய மாதர்கள்
குடிவெறியர் கொடுமையினால் கதறுவதைக் கண்ணுற்றும்
போரோங்கு நிலைமைகளால் பகைமை வளர்ந்து
பலியாகி மக்கள் மாள்வதைக் கண்ணுற்றும்
விரைந்தேவும் வேலினால் விடிவதனைக் காண
வாராததேனோ நல்லூர் கந்தா!

மு.தணிகாசலம்




# மரண அறிவித்தல்



## தம்பிஐயா கருணாமூர்த்தி

*(உரிமையாளர் - கல்யாணி கிறீம் ஹவுஸ்)*

**தோற்றம் : 04.02.1948** **மறைவு : 21.08.2018**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா கருணாமூர்த்தி கடந்த (21.08.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் சுபத்திராதேவியின் அன்புக்கணவரும் சாம்பவி (சுவிஸ்), ஹம்ஸாநந்தி (பிரான்ஸ்), சாரங்கன் (மென்பொருள் பொறியியலாளர், சிங்கப்பூர்), ராகசொரூபி (முகாமைத்துவ உதவியாளர் - மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடமாகாணம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் பரமேஸ்வரி, இலக்ஸ்மி, மீனாம்பாள், தையல்நாயகி, கிரிஸ்ணமூர்த்தி, விஜயபாலன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் மோகனதாஸ், சுயீவன், மிஷாலினி, சஞ்சீவன் ஆகியோரின் அன்பு மாமனும் ஜனேஸ், அபிலாஷ், அஸ்வந்த், அபிசாந்த், அபிசங்கர், சர்மிதா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.



அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2018) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.10.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்குஎடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**405, கோவில் வீதி, நல்லூர்**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 18385/17/15/18)

# வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முன்னணி Hotel ஆன Tilko Jaffna City Hotel இற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

* வதிவிட பராமரிப்பு உதவியாளர் - House keeping Assistant
* பராமரிப்பு உதவியாளர் (மின்/ குழாய் இணைப்பாளர்) - Maintenance assistant ஆண்
* சமையலாளர் - Cook
* சமையல் அறை உதவியார்கள் - Kitchen helper

அனுபவம் மற்றும் வயதிற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.
தங்களது சுயவிவரக் கோவையை 27.08.2018 இற்கு முன்னர் நேரில் அல்லது கீழ்காணும் முகவரிக்கு / மின்னஞ்சலிற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**தொடர்பு - 021720 0707, 077 767 5200**
**info@tilkohotels.com**
**Tilko Jaffna City Hotel**
**70/6, K.K.S. Road, Jaffna**

## மரண அறிவித்தல்



பிறப்பு 08 06 1970 — இறப்பு 23 08 2018

### திருமதி கலாநந்தி தேவராசா

**(ஆசிரியர் - யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலயம்.
முன்னாள் ஆசிரியர் நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி வித்தியாலயம்)**

நயினாதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 332 பாங்ஸால் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலாநந்தி தேவராசா நேற்று (23.08.2018) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா மற்றும் கிருஸ்ணவதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், தேவராசாவின் அன்பு மனைவியும், ஜெகதாயினியின் அன்புத் தாயாரும், செந்தூரனின் மாமியாரும், நேசவேள், கலைச்செல்வி, கலைரஜனி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆரதியின் அன்புப் பேர்த்தியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பாங்ஸால் வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 459 9024**

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வபூமணி கருணாகரன்



மலர்வு 24.08.1938 — உதிர்வு 20.08.2018

மலேசியா Perlis ஐ பிறப்பிடமாகவும், யாழ். ஊரெழு, கொக்குவில் தலையாழி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் ஆஸ்திரேலியா Homebush, New ஐ தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்வபூமணி கருணாகரன் 20.08.2018 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மலேசியா Perils ஐ சேர்ந்த காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - நேசம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், கொக்குவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கனகசபை - சோதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கருணாகரனின் அன்பு மனைவியும், கோணேஸ்வரனின் (ஈசன்) அருமைத் தாயாரும், வசந்தியின் அன்பு மாமியாரும், விவேகா, ஸ்ரீமன் ஆகியோரின் ஆசைப்பேர்த்தியும், காலஞ்சென்ற அம்பிகாபதி (ராசன்), கமலாதேவி (Australia - Sydney) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவரோஜினி (லண்டன்), Dr. சிவானந்தன் (லண்டன்), Dr. மஹாரோஜினி (லண்டன்), பரமானந்தம் (லண்டன்), மனோண்மணி, காலஞ்சென்ற சிவானந்தராஜசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.08.2018) வியாழக்கிழமை Australia Rookwood Memorial Gardens இல் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: ஆனந்தஜோதி (ராஜன்)**
**+94 753 888 912**

(CS/19221 (11)

**கோணேஸ்வரன் (ஆஸ்திரேலியா) - +614 225 24706**

## வீடு வாடகைக்குண்டு

இல. 27 சோமசுந்தரம் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஆறு அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. (கச்சேரிக்கு அருகில்)

**தொடர்பு - 071 8565 545**

## கண்ணீர் அஞ்சலி




எமது பாடசாலையில்
கடமையாற்றி வரும் ஆசிரியை
**திருமதி**
**கலாநந்தி தேவராசா**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
கல்லூரிச்சமூகத்தின் சாரியில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**யா / கொட்டடி நமசிவாய வித்தியாலய சமூகத்தினர்.**

## மரண அறிவித்தல்

### கந்தையா துரைராஜா



சங்கரத்தை, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் 8ஆம் வட்டாரம், மண்டைதீவு தெற்கு மற்றும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா துரைராஜா கடந்த (21.08.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராஜா கமலம்மாவின் அன்புக் கணவரும் ஜெயந்தனின் (லண்டன்) பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான கணேசபிள்ளை, பூமலர், சிவநாதபிள்ளை மற்றும் திருஞானசம்பந்தர் ஆகியோரின் மைத்துனரும் றஜிதாவின் (லண்டன்) மாமனாரும் பிரகஷ்த்தி, பிரியஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் தயாளரூபன், கபிலரூபன், ஜெயரூபன், சுபாங்கினி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரதான வீதி, 4ஆம் வட்டாரம், முள்ளியவளையில் உள்ள தவபாக்கியம் ஆனந்தராஜாவின் இல்லத்தில் இன்று (24.08.2018) முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று கற்பூரபுல் இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**மகன் (ஜெயந்தன்) +44 757 239 8951, 077 809 8374**

## உணவகம் ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை

*உணவு பரிமாறுபவர்
*உணவு பொதி செய்பவர்
ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.

**தொடர்பு - 077 4652 860**

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **இளையதம்பி அருமைநாதன்** (அருமை)



அன்னை மடியில் 06.10.1954

ஆண்டவன் அடியில் 29.08.2012

திதி:- வளர்பிறைச் சதுர்த்தி (24.08.2018)

ஏற்றி வைத்த தீபம் ஒன்று திரை மறைந்து போனதின்று
ஆண்டுகள் ஆறு ஆயிற்று ஆனாலும் தேய்ந்து போனது காலம்தான்
வளர்ந்து போனது உங்கள் நினைவுதான்
என்றும் நெஞ்சில் இட்ட கோலமாக உங்கள் நினைவைச் சுமந்து வாழ்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவன் தாழ் நித்தமும் வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தேவாலய வீதி,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## நாகபூஷணி திருமணசேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.
**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**021 222 9306, 077 138 7596**

(CS 18781/15/17)

## தேவை

01) விற்பனைப் பிரதிநிதிகள் (Rep) ஆண்கள்
02) கணக்கியல் பயின்ற கணினி அனுபவமுள்ள - பெண்கள்
03) பொதியிடல் வேலை செய்யக்கூடிய - பெண்கள்
04) கொப்பரா, தேங்காய் கொள்வனவு செய்யப்படும்.

**தொடர்பு - 076 822 7536, 076 822 7546**




## வேலையாள்கள் தேவை

கொக்குவிலில் அமைந்துள்ள சைவ உணவகம் ஒன்றிற்கு சமையல் உதவியாளர்கள் மற்றும் றொட்டி போடத்தெரிந்தவர், பரிமாறுபவர் மற்றும் சுத்திகரிப்பாளர் தேவை

**075 081 1931**

## எல்லை...

காலதாமதம் ஆகும். உடனடியாகத் தேர்தல் நடத்துவதாயின் பழைய முறையிலேயே நடத்த முடியும். அதனால் புதிய முறையில் மாகாணசபைத் தேர்தல் நடத்துவதற்காக உருவாக்கப்பட்ட மாகாண எல்லை வரம்பு அறிக்கையை எதிர்ப்பதற்கு கூட்டமைப்புத் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் இன்று இடம்பெறும் விவாதத்தில் எல்லை நிர்ணய அறிக்கையை, ஐக்கிய தேசியக் கட்சி, மகிந்த அணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாற்று அணி உள்ளிட்ட சிறுபான்மைக் கட்சிகளும் எதிர்த்துப் பேசவுள்ளன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் மாத்திரமே இந்த அறிக்கையை ஆதரிக்கவுள்ளன. (ற-5.61)

## பறித்துச்...

பட்டிருந்தன. கொக்குவில், தொடருந்து நிலையத்துக்கு அண்மையில் வைத்து மானிப்பாய் இளைஞர் ஒருவரைத் தாக்கி அவரது உந்துருளியை வாள்வெட்டுக்குக் குழு பறித்துச் சென்றிருந்தது.

அந்த உந்துருளி நேற்றுக் காலை பிரம்படி வீதியில் எரியூட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது. இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-8)

## ஓ.எம்.பிக்குக்...

களே அதிகமாக உள்ளன என்று காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த ஒரு தசாப்த காலத்தில் பலர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். காணாமல் ஆக்கப்பட்டோர் எண்ணிக்கையைப் பரிசீலிக்கும் போது ஆசியாவில் மாத்திரமன்றி, உலகளாவிய ரீதியிலேயே அதிகமானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ள நாடாக இலங்கை உள்ளது. முன்னைய ஆணைக்குழுக்களின் மூலம் பெறப்பட்ட தரவுகள் மற்றும் தற்போது பெறப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில் 20 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

2018ஆம் ஆண்டு காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகம் அமைக்கப்பட்டது. பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதலிருந்து பாதுகாக்கும் சட்டமும் நிறைவேற்றப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டுள்ளோரின் குடும்பங்களுக்கு சான்றிதழை வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போதும், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அதனைப் பெற்றுக்கொள்வதில் கூடிய கவனம் செலுத்தவில்லை. தமது உறவுகளுக்கு என்ன நிகழ்ந்தது என்பதை அறிவதே அவர்களின் நோக்கமாக இருக்கின்றது - என்றார். (ற-5.61)

## பாதுகாப்பை....

ஏமாற்றும் செயற்பாடு என்று வடக்கு மக்கள் கூறுகின்றனர். மக்கள் புதிய காணிகளை அரசிடம் கோரவில்லை. தாங்கள் பரம்பரையாக வாழ்ந்த காணிகளையே கேட்கின்றார்கள்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

வடக்கில் இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ள காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா அரச தலைவரிடம் நேரடியாகக் கோரியிருந்தார். அதற்குப் பதிலளித்த அரச தலைவர் மைத்திரிபால, 88 சதவீதமான காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன என்றும், எஞ்சிய காணிகள் விரைவில் விடுவிக்கப்படும் என்று கால எல்லை எதுவும் குறிப்பிடாமல் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைப் பணிமனையில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

வடக்கு முதலமைச்சரும் தெற்கு அரசியல்வாதிகளும் தொடர்ந்து இனவாதம் பேசுகின்றனர். முதலமைச்சரின் பிரதான கோரிக்கை, வடக்கு மக்களின் காணி விடுவிப்பு பற்றியதாகும். இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. குறுகிய வட்டத்துக்குள்ளேயே இருக்கின்றார்கள். இராணுவம் தமிழ் மக்களின் காணிகளை விடுவிக்காமல் வைத்திருப்பது அவர்கள் பொருளாதாரத்தில் பின்னடைந்திருப்பதற்கு காரணமாக இருக்கலாம்.

தேசிய பாதுகாப்பைக் குறிப்பிட்டு காணிகளை விடுவிக்காமல் இருப்பது தமிழ் மக்கள் மனங்களில் பெரும்பான்மையினர் தொடர்பில் வேற்றுமையைத் தோற்றுவிக்கும்.

வடக்கில் காணிகள் விடுவிக்கப்பட்டால் தெற்கில் சிலர் கொதிக்கின்றனர். இராணுவ முகாம்களை அகற்றினால் விடுதலைப் புலிகள் மீண்டும் வருவார்கள் என்று வதந்தி பரப்பி அரசியல் இலாபம் தேடுகின்றார்கள். வடக்கு மக்களின் விடயத்தில் அரசியலை மையப்படுத்திச் செயற்படாமல் யதார்த்த நிலமைகளுக்கு முன்னுரிமை வழங்கித் தீர்வு காணப்பட வேண்டும் - என்றார். (ற-5.31)


சேவைநலன் பாராட்டும் பிறந்தநின வாழ்த்தும்

திரு. நடராசா கலாவர்ணன்



அவர்கள் இன்று (24.08.2018) வெள்ளிக்கிழமை தனது 60ஆவது அகவையை தொட்டு நிற்கும் இவ்வேளையில் அவரை மனமார வாழ்த்துவதோடு அவர் கடந்த காலத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் விசேட தரம் உள்ளூராட்சித் திணைக்களம் ஊடாக மக்களுக்கு ஆற்றிய பணியிலிருந்து ஓய்வுபெறும் இவ்வேளையில் அவருக்கு எமது எமது நன்றியை தெரிவிப்பதோடு ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையத்தில் தலைவர், செயலாளர், பொருளாளர் எனும் பணிகளை சிறப்புற ஆற்றியமையும் தொடர்ந்து நிலையத்தின் கணக்கு ஆய்வாளராக கடமையாற்றிவரும் பணியையும் பாராட்டுவதோடு அவரது வாழ்வில் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாளின் அருள் பெருக பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்,
வண்ணை ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையம்

விளம்பர தொடர்புகளுக்கு
உதயன் advt@uthayan.com, 021 493 1111




Biology வகுப்பு
தனி/ குழு/ ரியூற்றறி வகுப்புக்கள்
புதிய 2019, 2020
பழைய 2018 (இருமொழிகளிலும்)
நரேன் மாஸ்டர் - 077 665 5290

மேலும் மேம்படுத்தப்பட்ட
கொஸ்கந்தவல
ஜீவக வாத தைலம்®
- முதுகு வலி
- முழங்கால் வலி
- ஆர்த்தரைட்டிஸ்
- மூட்டு வலி
- தசைப்பிடிப்பு
- நரம்புசார் வலிகள்

Jeewaka Herbal Products (Pvt) Ltd
0777 322 574

## காணவில்லை



சென்.செபஸ்ரியார் கோவில் றோட், கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த
**தர்மராஜா தர்மாலினி**
22 வயதுடைய இவரை கடந்த 3 நாள்களாகக் காணவில்லை.
(இவர் மனவளர்ச்சி குன்றியவர்)
இவரைக் கண்டவர்கள் கீழ்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்
**077 950 6811,**
**021 221 3597**



அதி கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 351
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 62,773,420/-
சீட்டிழுப்பு திகதி 2018.08.23
வெற்றி இலக்கங்கள்: 10 11 23 66 H

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1494
சீட்டிழுப்பு திகதி 23.08.2018
வெற்றி இலக்கங்கள்: 03 50 53 61 P
ரூ 33, 304, 820=

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 171
சீட்டிழுப்பு திகதி 23.08.2018 நீலம்

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விதி எண் |
|---|---|---|
| R | 61 62 66 | 04 |

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ.10, 945, 728/=

ஸ்வர்ண திலின

| | |
|---|---|
| மாத்தளை | 5450692 |
| காலி | 9680714 |
| புத்தளம் | 7798686 |
| யாழ்ப்பாணம் | 5586819 |
| அனுராதபுரம் | 4893225 |

அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk



## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 . 12 . 1948
மறைவு 03 . 09 . 2017



**அமரர் சின்னத்தம்பி முத்துலிங்கம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
திதி:- 24.08.2018 (திரயோதசி)

எங்கள் அப்பாவே உமையிழந்து ஆண்டொன்று ஆனதுவோ?
ஆறவில்லை எம் மனது
எங்களுடன் பல ஆண்டு மகிழ்ந்திருப்பீர் என்றிருந்தோம்
எல்லாம் ஒரு நொடியில் பொய்யாகிப் போனதுவே
ஆசிரியராக பலரது வாழ்வில் ஒளியேற்றிய அப்பாவே!
ஓராண்டு விடியலில் தேடுகிறோம் உங்களை
பலநாள்கள் எமது வருகைக்காய் விழிவைத்துக் காத்திருந்தீர்
இன்று நாம் உங்கள் இனிய நினைவுகளுடன் வாழ்கின்றோம்
எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

மடத்தடி லேன், மானிப்பாய்.
குடும்பத்தினர்.


# பண மோசடிக் குற்றச்சாட்டில் இருவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஒக.24

வெளிநாட்டில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தரப்படும் என்று கூறிப் பணத்தை மோசடி செய்தனர் என்ற முறைப்பாட்டுக்கு அமைய பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் உட்பட இருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர். அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

சுவில் நாட்டில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தரப்படும் என்று கூறி 7 லட்சம் ரூபா மோசடி செய்யப்பட்டது என்று வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

பெண் ஒருவர் முகநூல் ஊடாக முறைப்பாட்டாளருக்கு அறிமுகமாகியுள்ளார். மின்னஞ்சல் மூலம் முறைப்பாட்டாளரின் விவரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன என்று தெரிவித்து வங்கிக் கணக்கிலக்கம் ஒன்றைக் கொடுத்துப் பணத்தை வைப்பிலிடக் கூறியுள்ளனர். பணம் வைப்பிலிடப்பட்டதும் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன என்று முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகப் பாதிக்கப்பட்ட நபர் கடந்த 9ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள சிறப்புக் குற்றப்புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளார்.

விசாரணைகளை அடுத்து கரவெட்டி பிரதேச சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவரையும், கொடுக்கலில் தொடர்பில் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகத்தில் ஊடகவியலாளர் ஒருவரையும் நேற்றுமுன்தினம் கைது செய்தனர். தனது ஆவணங்களை ஊடகவியலாளர் ஒருவரிடமே கொடுத்தேன் என்று முறைப்பாட்டாளர் தெரிவித்ததுடன், தொலைபேசி இலக்கத்தையும் பொலிஸாருக்கு வழங்கியிருந்தார். அதையடுத்தே யாழ்ப்பாணத்திலுள்ள தொலைக்காட்சியைச் சேர்ந்த ஊடகவியலாளர் கைது செய்யப்பட்டார். விசாரணையில் வங்கிக் கணக்கிலக்கம் கரவெட்டிப் பிரதேச சபை உறுப்பினரது என்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதையடுத்து அவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர்கள் நேற்று மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 27ஆம் திகதிவரை நீதிமன்று விளக்கமறியலில் வைத்தது.


7th Largest International Tradeshows For
**BUILDING MATERIAL & CONSTRUCTION MACHINERY, WOOD WORKING & FURNITURE** Manufacturing Sector of Sri Lanka

VISIT

ALLUMEX presents
sri lanka BUILDCON | WOOD
JAT PAINTS presents
INTERNATIONAL EXPO 2018

7th - 8th - 9th SEPTEMBER 2018, BMICH, COLOMBO

| | | |
|---|---|---|
| 10+ COUNTRIES | 150+ EXHIBITORS | 2000+ PRODUCTS |
| NEW INNOVATIONS | LATEST TRENDS | INTERNATIONAL CONFERENCE |

FOR FURTHER INFORMATION
(+94) 771864870/ (+94) 761210838 | info@futurextrade.com
Web: www.srilankabuildcon.com/ www.srilankawood.com

ORGANIZED BY: Futurex SHOWCRAFT | SUPPORTED BY: CII | MARKETING PARTNER: CDC EVENTS | TRAVEL PARTNER
TV PARTNER | MEDIA PARTNER: NIRMAN ... Ply Reporter PLY WORLD



## மரண அறிவித்தல்

### திருமதி சின்னம்மா சின்னத்தம்பி

(ஓய்வு நிலை ஆசிரியை)



யாழ். வடமராட்சி கரவெட்டி மத்தி வாழையப்பா வீட்டைப் பிறப்பிடமாகவும், முடக்காடு நெல்லியடி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா சின்னத்தம்பி நேற்று (23.08.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சிற்றம்பலம் இலட்சுமி தம்பதியரின் அன்புமகளும் க.சின்னத்தம்பியின் (ஓய்வு நிலை ஆசிரியர்) அன்பு மனைவியும் க. தெய்வானை, க.வள்ளிப்பிள்ளை, திருமதி வ. பத்தினி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சி. கிருஸ்ணபிள்ளை மற்றும் திருமதி வி. பொன்னம்மா ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான சி. சத்தியேஸ்வரன், சி. விக்கினேஸ்வரன் மற்றும் திருமதி யோ. பரிமளா (லண்டன்), திருமதி சி. சியாமளா (ஆசிரியை, வவுனியா சைவப்பிரகாச ஆரம்ப பாடசாலை), சி. சேந்தன் (ஜேர்மனி), சிவநேசன், (பொறுப்பாசிரியர், கணித வளமூல நிலையம்), திருமதி சி. மஞ்சுளா (ஆசிரியை, யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை மருந்தித்துறை) ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற சி. கமலாதேவி மற்றும் திருமதி வி. செல்வநாயகி, சு. யோகேஸ்வரன் (லண்டன்), இ. கிருஸ்ணானந்தன் (ஆசிரியர், வவுனியா செட்டிக்குளம் மகாவித்தியாலயம்), திருமதி சே. ரஜனி (ஜேர்மனி) திருமதி சி. பிரேமாதேவி, சு. சிவபாலன் (ஆசிரியர், யா/ வட இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.08.2018) சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 129, முடக்காடு வீதி,
நெல்லியடி கிழக்கு, கரவெட்டி.
021 226 4386, 077 875 9690

தகவல்:
குடும்பத்தினர்.


## சிகரெட் விற்பதை நிறுத்திய நகரங்களில் யாழ். முதலிடம்

கொழும்பு, ஒக. 24

இலங்கையில் 100க்கும் அதிகமான நகரங்கள் சிகரெட் விற்பனையைப் புறக்கணித்துள்ளன என்று சுகாதார அமைச்சை மேற்கோள்காட்டி, சீனாவின் சின்ஹுவா செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. புறக்கணிக்கும் நகரங்களில் யாழ்ப்பாணம் முதலிடத்தில் உள்ளது என்று கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் அதிகபட்சமாக 22 நகரங்களிலும், மாத்தறையில் 17 நகரங்களிலும், குருநாகலில் 16 நகரங்களிலும், சிகரெட் விற்பனை முற்றிலுமாக புறக்கணிக்கப்பட்டுள்ளது. தற்போது 107 நகரங்கள் இந்த முடிவில் இணைந்துள்ளன.

புகைப்பொருள் இல்லா நாட்டை உருவாக்கும் இலக்கை அடையும் நோக்கில், விற்பனையாளர்கள் சிகரெட் விற்பனையைப் புறக்கணிக்கும் முடிவை எடுத்துள்ளனர்.

சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட தீவிர பரப்புரையை அடுத்து, வணிக நிலையங்கள் மற்றும் வணிகர்கள் சிகரெட் விற்பனையை நிறுத்தியுள்ளனர்.

2019ஆம் ஆண்டில் இந்த நகரங்களின் எண்ணிக்கை 200 ஆக அதிகரிக்கும் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் புகையிலைப் பொருட்களின் பயன்பாட்டை ஒழிக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

புகையிலைப் பொருள்களுக்கு 90 வீதம் வரை வரி அதிகரிக்கப்பட்டதுடன், சிகரெட் பொதிகளில் 80 வீதம் எச்சரிக்கை படம் அச்சிடப்பட்டிருக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. பாடசாலைகளின் இருந்து 100 மீற்றர் சுற்றாடலில் சிகரெட் விற்பனை தடை செய்யப்பட்டுள்ளதுடன், பொதுஇடங்களில் புகைப்பதும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

2020இல் புகையிலை பயிர்ச்செய்கையை தடை செய்வதற்கும் இலங்கை திட்டமிட்டுள்ளது. (ந-5)

# வெங்காய சமோசா...



**தேவையானவை**

கோதுமை மா - 1கோப்பை
எண்ணெய் - 1 தேக்கரண்டி
உப்பு - தேவையான அளவு
வெங்காயம் - 1/4 கிலோ
அவல் - 3 கோப்பை
மிளகாய்ர் தூள் - 2 தேக்கரண்டி
சீரகம் - 2 தேக்கரண்டி
பச்சை மிளகாய் - 2
கொத்தமல்லி - 1/2 கோப்பை
எலுமிச்சைச் சாறு - 1/2 தேக்கரண்டி

**செய்முறை**

கோதுமை,உப்பு,எண்ணெயைச் சேர்த்து தண்ணீர் விட்டு ரொட்டி மா போல் பிசைந்து கொள்ளவும்.
15நிமிடங்கள் ஊறவிடவும்.
ஒரு பாத்திரத்தில் வெங்காயம்,அவல்,மிளகாய்த் தூள், சீரகப் பொடி, நறுக்கிய பச்சை மிளகாய், உப்பு, கொத்தமல்லி, எலுமிச்சைச் சாறு சேர்த்து பிசைந்து கொள்ளவும்.
சமோசா மாவை சாப்பாதி போல் மெல்லியதாக திரட்டிக் கொள்ளவும்.
தோசைக் கல்லில் போட்டு ஒரு பக்கம் மட்டும் சூடு படுத்தினால் போதுமானது.
சூடுபடுத்திய ரொட்டியை நீளவாக்கில் வெட்டவும்.
பசையைத் தடவி முக்கோணமாக மடித்துக் கொண்டு செய்து வைத்திருந்த வெங்காயக் கலவையை நிரப்பி பசையை தடவி முடிவிடவும்.
சூடான எண்ணெயில், செய்து வைத்த சமோசாவை பொரித்து எடுத்தால் சுவையான வெங்காய சமோசா தயார்.

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 800 | 1000 | 1000 | 1000 |
| நண்டு | 600 | 500 | 600 | 600 |
| கணவாய் | 800 | 900 | 1000 | 1000 |
| பாரை | 700 | 900 | 700 | 800 |
| சுறா | 600 | 900 | 1000 | 1200 |
| சீலா | 500 | 500 | 700 | 400 |
| விளை | 600 | 500 | 700 | 700 |
| முரல் | 400 | 400 | 600 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 500 | 300 |
| கிளாக்கன் | 800 | 400 | 600 | 600 |
| ஒரா | 400 | 500 | 600 | 500 |
| திரளி | 250 | 300 | 300 | 250 |
| நகரை | 300 | 300 | 400 | 250 |
| சூடை | 150 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 250 | 300 | 300 | 300 |
| திருக்கை | 350 | 300 | 500 | 400 |
| மதனம் | 200 | 300 | 400 | 300 |
| கொய் | 150 | 100 | 100 | 100 |
| பாலை | 250 | 300 | 600 | 300 |
| வாளை | 200 | 300 | 500 | 200 |



## இது புதுசு

ஆண்களுக்கான சேட் வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை இரண்டாயிரத்து 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| கத்தரி | 120 | 120 | 100 | 100 |
| முள்ளங்கி | 80 | 50 | 80 | 80 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 |
| பயிற்றை | 120 | 100 | 100 | 100 |
| பாகல் | 280 | 140 | 120 | 240 |
| க.கிழங்கு | 100 | 80 | 100 | 120 |
| பெ.வெங்காயம் | 100 | 120 | 110 | 110 |
| சி.வெங்காயம் | 120 | 90 | 120 | 130 |
| பூசணி | 40 | 60 | 80 | 60 |
| தக்காளி | 180 | 90 | 80 | 160 |
| வாழைக்காய் | 70 | 100 | 100 | 80 |
| கீரை | 20 | 25 | 10 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 35 | 40 |
| ப.மிளகாய் | 400 | 120 | 200 | 400 |
| புடோல் | 110 | 60 | 80 | 100 |
| கோவா | 150 | 120 | 140 | 160 |
| வெண்டி | 100 | 50 | 80 | 100 |
| போஞ்சி | 300 | 180 | 280 | 280 |
| லீக்ஸ் | 200 | 100 | 120 | 180 |
| தேங்காய் | 70 | 50 | 60 | 70 |
| உ.கிழங்கு | 100 | 110 | 110 | 100 |
| தேசிக்காய் | 80 | 40 | 50 | 50 |
| வல்லாரை | 20 | 30 | 15 | 20 |
| கறிமிளகாய் | 280 | 150 | 200 | 300 |
| கரட் | 280 | 400 | 240 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 80 | 50 | 130 |



# மஞ்சள் காமாலை பற்றி தெரிந்து கொள்ள வேண்டியவை

குருதியில் ஒருவகைப் பித்தம் அதிகரிப்பதே மஞ்சள் காமாலை ஆகும். மஞ்சள் காமாலை என்று சொன்னால் மக்களிடையே ஒரு வித பயம் அல்லது பீதி ஏற்பட்டு விடுகிறது. முதலில் இதனைப் பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும். மஞ்சள் காமாலை எப்படி உருவாகிறது என்பதைப் புரிந்து கொண்டால் இதற்கான தீர்வு என்ன என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

மஞ்சள் பித்தம் என்பது சிவப்பு அணுக்கள் இறக்கும் போது அவற்றில் இருந்து வெளிவருகிறது. இது இயற்கையாகவே எமது குருதியில் குறிப்பிடப்பட்ட அளவு இருக்கும். இது அதிகமாகாமல் பார்த்து கொள்வது கல்லீரலின் வேலை ஆகும். அளவுக்குமேல் போகும் பித்தத்தை குருதியில் இருந்து எடுத்துக்கொண்டு. அதை பித்த நீராக மாற்றி பித்த நாளங்களில் சுரந்து பிறகு அது பித்தப்பையில் தேக்கி வைக்கப்படுகிறது. பின்னர் மலத்தின் வழியாக உடலை விட்டு வெளியேற்றப்படுகிறது.

சிவப்பு அணுக்களில் இருந்து ஆரம்பித்து கல்லீரலினால் பித்த நீராக உருவாக்கப்பட்டு பித்தப்பையில் தங்கியிருந்து, பித்தநாளம் மூலமாக குடலுக்கு வந்து பின்னர் வெளியேறும் பாதைகளில் ஏதாவது ஒரு இடத்தில் கோளாறு ஏற்பட்டால் வருவதே இந்த மஞ்சள் காமாலை நோய். இதனை அடிப்படையாகக் கொண்டே மஞ்சள் காமாலை மூன்று வகையாகப் பிரிக்கப்படுகிறது.

முதல் வகை சிவப்பு அணுக்கள் சம்பந்தப்பட்ட நோய்கள்.
இதில் அளவுக்கு அதிகமாக சிவப்பு அணுக்கள் இறந்து அவற்றில் இருந்து அதிகமாக மஞ்சள் பித்தம் வருவது.
இரண்டாவது கல்லீரல் சம்பந்தப்பட்ட நோய்கள். இதில் கல்லீரல் அதன் வேலையை செய்யாமல் இருப்பதனால் குருதியில் மஞ்சள் பித்தம் தங்கி விடு கிறது. மூன்றாவது அடைப்பு காமாலை என்பது. அதாவது பித்தநீர் பாதையில் ஏதாவது அடைப்பு ஏற்பட்டு அது கல்லீரலில் இருந்து குடலுக்கு வரமுடியாமல் தடைப்பட்டு விடுகிறது.


இந்த நோய் வருவதற்கு தனித்தனியே நிறையக் காரணங்கள் உள்ளன. எனவே மஞ்சள் காமாலை வந்தவுடன் முதலில் நாம் செய்யவேண்டியது என்னவென்றால் மூன்றில் எந்தவகை மஞ்சள் காமாலை என்று தெரிந்து கொள்ளவேண்டும். பின்னர் அதற்கான காரணத்தையும் தெரிந்து கொள்ளவேண்டும். ஏனென்றால் ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு சிகிச்சை முறைகள் உள்ளன.

இதில் மக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய விடயம் என்னவென்றால், சிலவற்றுக்குத் தான் நாட்டு மருந்து உதவி செய்யும். சிவப்பு அணுக்கள் சம்பந்தப்பட்ட காமாலை.. அடைப்புக் காமாலை மற்றும் ஒரு சில கல்லீரல் நோய்களினால் வரும் காமாலைக்கு வேறுவிதமான மாத்திரை மருந்துகள் அல்லது அறுவைச் சிகிச்சை மூலமாக அடைப்பை நீக்குதல் போன்ற சிகிச்சைகளும் தேவைப்படும்.

எனவே மஞ்சள் காமாலையின் வகையை கண்டுபிடித்து அதன் காரணத்தைக் கண்டுபிடித்து அதற்கான சரியான சிகிச்சை முறையை தேர்ந்தெடுத்து சிகிச்சை பெற்றால், இந்த மஞ்சள் காமாலை குணமடைய நிறைய வாய்ப்புள்ளது.

# ஏற்றுமதி இறக்குமதி செலுத்தல் வேறுபாட்டு மிகை

## செயலாக்க அளவு




# வர்த்தகத் தகவல் நுழைவாயில் இணையத்தளம் ஆரம்பம்

இலங்கை வர்த்தகத் திணைக்களம் உலக வங்கியின் அனுசரணையோடு வர்த்தக தகவல் நுழைவாயில் இணையத்தளத்தை அண்மையில் ஆரம்பித்துள்ளது.

இந்த இணையத்தளம் 'எஸ்.எல்.ரி.ஐ.பி' என பெயர் பெயர் குறிப்பிடப்படுகிறது. குறித்த இணையத்தளம் ஊடே வர்த்தகர்களுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படும் பண்டங்கள், அனுமதிப்பத்திரங்கள், தீர்வைகள், சட்ட திட்டங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதியளிப்பு உடன்படிக்கை முதலான பன்னாட்டு ஒப்பந்தங்களுக்கு இது முக்கியமானதாக அமைந்துள்ளது.




இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன், வர்த்தகத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் தேசிய வர்த்தக வசதிகள் குழுவின் தலைவி திருமதி சோனாலி விஜேரத்ன, கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளர் கே.டி.என்.ரஞ்சித் அசோகா, உலக வங்கி குழுவின் மூத்த வர்த்தக நிபுணர் மார்கஸ் பார்ட்லி ஜோன்ஸ், இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்குமான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் எச்.ஈ பிரைஸ் ஹட்ஷெஸன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஓ)

# முதலீட்டு நடவடிக்கைகளில் பின்னடைவு

## புதிய வரிச் சட்டம் காரணமெனச் சுட்டிக்காட்டு

புதிய வரிச் சட்டம் காரணமாக முதலீட்டு நடவடிக்கைகளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது எனவும் முதலீட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஆர்வம் முதலீட்டாளர்களிடையே குறைவடைந்துள்ளது எனவும் கொழும்பு பங்குச் சந்தை வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

வரிச்சட்டங்களுடன் டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி, உறுதித் தன்மையற்ற உலகளாவிய பொருளாதார நிலைமை காரணமாக பொருளாதார வளர்ச்சி குறைவடைவதல் போன்ற காரணங்களாலும் பங்கு விற்பனை மற்றும் கொள்வனவு வர்த்தகம், உற்பத்தி தொடர்பான முதலீட்டு நடவடிக்கைகளில் தேக்க நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் தேர்தல் காலத்தை முன்னிட்டு வாக்காளர்களை கவரும் விதமாக அரசு மேற்கொள்ளக் கூடிய விலைக்குறைப்பு நடவடிக்கைகள் உட்பட ஏனைய இறுக்கமான கொள்கைத் திட்டங்கள் காரணமாக வர்த்தகம், உற்பத்தி மற்றும் முதலீட்டு செயற்பாடுகள் பாதிப்படைவதுடன் முதலீட்டாளர்களின் வருமானம் உறுதித்தன்மையற்று காணப்படுவதுடன் முதலீடுகளுக்கான பங்குப் பரிமாற்றங்களும் குறைவடைந்துள்ளதாக பங்குத் தரகர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ)

# சுற்றுலாப் பயணிகளின் உள்வருகையை அதிகரிக்கத் தீர்மானம்

## இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை

இலங்கைக்கு வருகைதரும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைத் தலைவர் கெவன் ரத்னாயக்க,

"5 ஆயிரம் விருந்தக அறைகளை புதிதாக அமைக்க இலங்கை சுற்றுலாத் துறை தீர்மானித்துள்ளது. இது தொடர்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று அண்மையில் கைச்சாத்திடப்பட்டது. இதன் அடிப்படையிலே பன்னாட்டு தரத்துக்கு அமைவாக 42 ஆயிரம் அறைகள் அமைக்கப்படவுள்ளன. இவ்வருட இறுதிக்குள் வேலைத்துப் பணிகளும் நிறைவடையும்.

இவ்வாறு அமைக்கப்படவுள்ள விருந்தக அறைகள் மூலம் இலங்கைக்கு வருகை தருகின்ற 45 இலட்சம் சுற்றுலா பயணிகளின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும். எதிர்வரும் 2020ஆம் ஆண்டளவில் 7 பில்லியன் அமெரிக்க டொலர்களை அந்நியச் செலாவணியாக பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளோம்." - என்றார். (ஓ)


CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455

பங்குச்சந்தைத் தகவல்கள்

| 23/8/2018 | | | |
|---|---|---|---|
| www.cse.lk | | | |
| சுட்டிகள் | | இன்று | நேற்று |
| ASPI | 15.39 | 6,055.76 | 6,040.37 |
| S&P SL20 | 1.62 | 3,215.61 | 3,213.99 |
| வியாபாரப்புரள்வு | | 1,065,332,160 | 464,100,800 |
| உள்நாடு- கொள்வனவு | | 363,081,248 | 306,364,992 |
| விற்பனை | | 445,598,272 | 258,265,616 |
| வெளிநாடு- கொள்வனவு | | 702,250,880 | 157,735,792 |
| விற்பனை | | 619,733,890 | 205,835,184 |

| கம்பனி அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 140 | 2,281,489 | 319,283,689 |
| மெல்ஸ்ரா க்ரோப் | MELS.N | 50.4 | 6,280,941 | 288,281,757 |
| ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் | HHL.N | 90.50 | 1,979,714 | 178,087,528 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 120.90 | 519,596 | 62,871.448 |
| சம்பத் வங்கி | SAMP.N | 276.00 | 119,251 | 30,399.037 |
| லங்கா மில்க்பூட்ஸ் | LMF.N | 159.90 | 190,752 | 30,329,618 |
| கார்கில்ஸ் சிலோன் | CARG.N | 202.90 | 147,145 | 29,863,981 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 220 | 118,311 | 26,115,731 |
| ஐட்கென் ஸ்பென்ஸ் | SPEN.N | 46 | 429,340 | 19,321,931 |
| டோக்கியோ சிமெண்ட் | CTC.N | 1330 | 10,031 | 13,037,020 |



பங்குலாபம் அறிவித்தல்
சேவ்ரோன் லூப்ரிகன்ஸ் ரூபா 2.25
ரேணுகா City Hotel ரூபா 6.00
ரேணுகா ஹோட்டல்ஸ் ரூபா 1.60
Call 0777 822 014 / 0777 105 205

| சந்தைக் குறிகாட்டிகள் | |
|---|---|
| கம்பனிகள் | 237 |
| பரிமாற்றத்தில் | 227 |
| விலை உழைப்பு | 9.4 |
| புத்தகப்பெறுமதி | 1.2 |
| பங்குலாப விளைவு | 3.2 |

## சம்பந்தனை...

வரன் தற்போது கொழும்பில் தங்கியுள்ளார். எதிர்க்கட்சித் தலைவரும், கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனைச் சந்திப்பதற்கு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரையில் கொழும்பில் தங்கி நிற்பேன் என்றும் அதற்கிடையில் சந்திப்புக்கு நேரம் ஒதுக்கித்தர வேண்டும் என்று முதலமைச்சா பணியகத்தால், எதிர்க்கட்சித் தலைவரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நேற்று இடம்பெற்ற கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தி லும் கருத்துத் தெரிவித்துள்ளார். முதலமைச்சரைச் சந்திப்பதற்கு கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழு எதிர்ப்பு வெளியிடவில்லை. (ற-5,105)

## இளைஞர்...

யாழ்ப்பாணத்தின் பல இடங்களில் வாள்களுடன் வந்த கும்பல் வன்முறையில் ஈடுபட்டது. அவற்றுடன் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகத்தில் கொக்குவில், முதலி கோயிலடியைச் சேர்ந்த 22 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-8)

## விக்கியின்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம், எதிர்க்கட்சித் தலைவர் பணிமனையில் நேற்று இடம்பெற்றது. கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், ஈ.சரவணபவன், திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா, சிவமோகன் ஆகியோரைத் தவிர ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எதிர்க்கட்சித் தலைவரும், கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்கு எழுதிய கடிதம் வாசிக்கப்பட்டது.

அந்தக் கடிதத்தில், வடகிழக்கு அபிவிருத்திக்கான அரச தலைவர் செயலணியின் கூட்டத்துக்கு நான் செல்லவில்லை. இது சம்பந்தமாக நான் அரச தலைவருக்கு அனுப்பிய கடிதத்தின் பிரதியை அனுப்பி வைக்கின்றேன். கூட்டத்தில் நான் பங்குபற்றியிருந்தால் அரசியல் ரீதியாக பல நன்மைகளை நான் பெற்றிருப்பேன். ஆனால் தமிழர்கள் தங்கள் பிரச்சினைக்கான தக்க தீர்வொன்றை பெற முடியாதே இருக்கும்.

தற்பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 16 பேருக்கும் செயலணிக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார ஊக்கிகளே அரசியல் தீர்விலும் பார்க்க தமிழர்களுக்கு இந்தத் தருணத்தில் முக்கியத்துவம் அளிக்கக் கூடியவை என்று நீங்கள் நினைத்தால் கூட்டத்தில் பங்குபற்ற நீங்கள் முடிவெடுக்கலாம்.

ஆனால் அரசு பொருளாதார ரீதியாக எங்களுக்கு பல நன்மைகளைக் கொடுக்க எப்பொழுதும் ஆயத்தமாகவே உள்ளதென்றாலும் அரசியல் ரீதியாக ஒரு தீர்வைக் கொடுக்க மறுக்கின்றது என்பதே என்னுடைய தனிப்பட்ட கருத்து. எமது 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் செயலணிக் கூட்டங்களில் பங்குபற்றாது "அரசியல் தீர்வு முதலில் பொருளாதார முன்னேற்றம் அதன் பின்னர்" எனக் கூறுவதே உசிதம் என நான் கருதுகின்றேன். கொழும்பு அரசின் அமைச்சர்கள் சுமார் 12 பேரும் அவர்களுடைய செயலர்களும், இன்னும் சிலரும் படையினரில் உயரதிகாரிகளும் தான் குறித்த செயலணியில் அங்கம் வகிக்கின்றார்கள். இவ்வாறான கூட்டங்களில் படையினருக்கு என்ன பங்கு என்று நான் கேட்டிருக்கின்றேன். உங்களுடைய கருத்தை எனக்குத் அறியத்தரவும் என்றுள்ளது.

முதலமைச்சரின் இந்தக் கடிதத்தை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் வாசித்த பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரினதும் கருத்துக் கேட்கப்பட்டது.

அரச தலைவர் செயலணியின் சிறப்புக் கூட்டத்தில் பங்கேற்கவேண்டும் என்றே கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறியுள்ளனர். அரசியல் தீர்வு முதன்மையானது என்பதில் மாற்றுக் கருத்தில்லை என்றும், அதற்காக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்காமல் இருக்க முடியாது என்றும் கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

எதிர்வரும் 27ஆம் திகதி இடம்பெறும் அரச தலைவர் செயலணியின் கூட்டத்தில் பங்கேற்பது என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளனர். இந்தக் கூட்டத்தில் பங்கேற்காத கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான புளொட் அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தனும், அபிவிருத்திச் செயலணியின் கூட்டத்தில் பங்கேற்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். (ற-5,105)

## வாக்கெடுப்பா?...

எல்லை வரம்புக் குழுவின் அறிக்கை இன்று வெள்ளிக்கிழமை விவாதத்திற்கு எடுக்கப்படவுள்ளது. அறிக்கையின் மீது வாக்கெடுப்பு நடத்துவதா? இல்லையா? என்பது தொடர்பான இறுதி தீர்மானம் கட்சி தலைவர்களின் இன்றைய கூட்டத்தில் எடுக்கப்படவுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி, கூட்டு எதிரணி உள்பட சிறுபான்மையின கட்சிகள் எல்லை வரம்பு அறிக்கை தொடர்பான தமது தீர்மானங்களை நேற்று கூடிய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அறிவித்ததை அடுத்தே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

நேற்று இடம்பெற்ற கட்சி தலைவர்கள் கூட்டத்தின் போது இன்று வெள்ளிக்கிழமை நடத்தப்படவுள்ள எல்லை வரம்பு குழுவின் அறிக்கை மீதான விவாதம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

கட்சி தலைவர்களின் நேற்றைய கூட்டத்தில் எல்லை வரம்புக் குழுவின் அறிக்கை தொடர்பில் இணக்கப்பாட்டுக்கு வர முடியாத நிலமை காணப்பட்டது. எல்லை வரம்பு அறிக்கையை வாக்கெடுப்புக்கு விடுவதா? இல்லையா? என்பதனை இன்றைய தினம் கூடித் தீர்மானிப்பதற்கு கட்சி தலைவர்கள் முடிவு செய்தனர். (ற-5,61)

## தொடருகின்றது...

வாக்குறுதிக்கு மாறாக வடமராட்சி கிழக்கில் வெளிமாவட்ட மீனவர்கள் தொடர்ந்தும் கடலட்டை பிடிப்பில் ஈடுபடுகின்றனர் என்று வடமராட்சி மீனவர் சமாசத் தலைவர் நா.வர்ணகுலசிங்கம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களத்துக்கு எழுத்துமூலம் முறைப்பாடும் செய்துள்ளார். "வடமராட்சி கிழக்கில் வெளிமாவட்ட மீனவர்கள் தங்கிநின்று கடலட்டை பிடிக்கின்றனர். அதற்கு நாம் எதிர்ப்பு வெளியிட்டிருந்தோம். கடலட்டை பிடிப்பவர்கள் 4 நிபந்தனைகளின் அடிப்படையிலேயே தொழில் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர் என்று எமக்குக் கூறப்பட்டது. இரவில் கடலட்டை பிடிக்கப்பட முடியாது என்பது முக்கிய நிபந்தனையாகக் கூறப்பட்டது. 27 படகுகளில் சென்ற மீனவர்கள் இரவில் மீன்பிடித்தனர் என்று கடற்படையினரால் கைது செய்யப்படனர். இரவில் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து அவர்கள் விடுவிக்கப்பட்டனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அரச தலைவர் வந்திருந்தபோது போராட்டம் நடத்த திட்டமிட்டிருந்தோம். அதற்குமுதல் நாள் கடற்தொழில் அமைச்சர் மீனவர்களுடன் சந்திப்பு நடத்தினார். கடலட்டை பிடிப்போரை முழுமையாக வெளியேற்றுவதாக சந்திப்பில் வாக்குறுதியளித்தார். ஆனால் எமது கண்கள் முன்பாகவே கடலட்டை பிடிப்போர் எங்களின் 6 வலைகளை அறுத்தனர். இது தொடர்பில் மாவட்டப் பணிப்பாளரிடம் தெரியப்படுத்தியுள்ளோம்" என்றார் வர்ணகுலசிங்கம்.

மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்துறை பிரதிப் பணிப்பாளர் சுதாகரன் இது தொடர்பில் கேட்டபோது, "அமைச்சருடனான கலந்துரையாடலின்போது வாய்மூலமாக கூறப்பட்டுள்ளது. எமக்குப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து இதுவரை எந்தவிதமான உத்தரவுகளும் வரவில்லை. அவ்வாறு ஏதாவது உத்தரவுகள் கிடைத்தால் மட்டுமே நடைமுறைப்படுத்த முடியும்" - என்றார். (ற-5,105)

## பொருளாதார...

முடிவு செய்துள்ளதாக கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு அரச தலைவர் செயலணியில் 48 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். வடக்கு மாகாண முதலமைச்சர் அதில் உள்வாங்கப்பட்டிருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடக்கப்படவில்லை.. செயலிணியின் முதலாவது கூட்டத்தின் பின்னர் அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேனவின் பணிப்புக்கு அமைவாக, கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 16பேருக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது.

அபிவிருத்திச் செயலணியில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பங்கேற்கவேண்டாம் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் கோரியிருந்தார். அவரது கோரிக்கையை நிராகரித்து செயலணியில் பங்கேற்க கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

இது தொடர்பில் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது

வடக்கு, கிழக்கில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் ஒவ்வொரு விதமான பிரச்சினைகள் உள்ளன. அவை தொடர்பில் பேசப்பட்டு தீர்வு காணப்படவேண்டும்.

அரசியல் தீர்வுக்கான முயற்சி இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது. அது வேறு தளத்தில் நடக்கின்றது. அதுதான் முதன்மையானது. அந்த விடயம் முக்கியமானது என்பதில் மாற்றுக் கருத்தில்லை. அதுவரை எமது மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்காமல் இருக்க முடியாது. எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண் டும்.

வெறுமனே அரசியல் தீர்வு வேண்டும் என்று கூறிக்கொண்டு எமது மக்களின் பிரச்சினைகளைக் கைவிட முடியாது. அரசியல் தீர்வு பெற்றுக்கொள்வதை போலவே எமது மக்களின் தேவைகளையும் பூர்த்திசெய்ய வேண்டும். வடக்கு முதல்வர் கூறிய காரணிகளை விடவும் மக்களின் நிலமைகளை நாம் கருத்தில் கொண்டு இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளத் தீர்மானம் எடுத்துள்ளோம் - என்றார். (ற-5,31)

## நேரடியாக...

தமிழகத்துக்கு வானூர்திச் சேவைகள் ஆரம்பிப்பதற்கான நட்வடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள நிலையிலேயே இவ்வாறானதொரு கருத்து வெளியிடப்பட்டுள்ளது. (ற-5)

## உந்துருளி...

யில் பயணித்த இளைஞர்களே உயிரிழந்தனர். நட்டாங்கண்டலைச் சேர்ந்த அந்தோனி சுரேஸ் (வயது-23), ஒட்டன்குளத்தைச் சேர்ந்த சிவகுமார் புனிதகுமார் (வயது-24)) ஆகியோரே உயிரிழந்தனர்.

விபத்து வெள்ளாங்குளம் சந்திக்கு அண்மையாக மாங்குளம் துணுக்காய் வீதியில் நடந்துள்ளது. வெள்ளாங்குளத்தில் இருந்து மல்லாவி நோக்கி உந்துருளியில் பயணித்த இளைஞர்கள் பாரவூர்தி ஒன்றை முந்திச் செல்ல முற்பட்டபோது எதிரே வந்த கன்ரர் ரக வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகினர் என்று கூறப்படுகின்றது. விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றையவர் மருத்துவமனை கொண்டு செல்லும் வழியில் உயிரிந்தார்.

உயிரிழந்த இளைஞர்கள் உறவினர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. விபத்துத் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-8,110)

## வடக்கு...

பலப்படுத்த நாம் தயாராக உள்ளோம்.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார் சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார்.

நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்ப்பாணம் குடாநாட்டில் இடம்பெறும் சமூக விரோதச் செயற்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா?, குள்ளமனிதர் போன்று சிலர் சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். அது தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்படுகின்றது?, போதைப் பொருள் கடத்தல்கள் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் கிடைத்துள்ளனவா?, அவற்றின் பின்னணியில் அரசியல் நடவடிக்கைகள் உள்ளனவா?, நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியுமா? என்று கேள்விகள் எழுப்பினார். அவற்றுக்குப் பதிலளிக்கும் போதே சட்டம் ஒழுங்கு அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

வடக்கில் நடக்கும் குற்றச் செயல்களுடன் ஆவாக் குழுக்கள் தொடர்புபட்டுள்ளன என்று குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளது. சம்பவங்களுடன் தொடர்புடைய 38 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆயுதங்களும் கைது செய்யப்பட்டுள்ளன. நீதிமன்ற விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. சந்தேகநபர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடையவர்கள் யார் என்பது தொடர்பாக இன்னமும் தகவல் கிடைக்கவில்லை. அரசியல்வாதிகளின் பின்னணி உள்ளதா என்பது தொடர்பாகவும் தகவல் கிடைக்கவில்லை. இவை தொடர்பாக ஆராயப்படுகின்றது.

குள்ளமனிதர் தொடர்பாக மக்களால் எந்த முறைப்பாடும் செய்யப்படவில்லை. அதனால் அது பற்றி எமக்குத் தெரியாது. ஆயினும் வடக்கில் குற்றச்செயல்களைத் தடுக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. பொலிஸார் உரிய நடவடிக்கைகள் எடுக்கின்றனர். அரசியல்வாதிகள், சிவில் உறுப்பினர்கள், இராணுவம் ஆகிய அனைத்துத் தரப்புகளுடனும் கலந்துரையாடி உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. மக்கள் மீதான எந்த அழுத்தமும் பிரயோகிக்கப்படவில்லை. வடக்குப் பாதுகாப்பு மந்தமாக உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. எமது செயற்பாடுகள் சரியாகவே முன்னெடுக்கப்படுகின்றன.

வடக்கில் தமிழ் தெரிந்த பொலிஸார் இல்லாதமை பிரச்சினையாகும். முடிந்த அளவு தமிழ் மக்கள் பொலிஸ் துறையில் இணைய வேண்டும். தமிழர்களை இணைத்துக் கொண்டு வடக்கில் சிவில் பாதுகாப்பைப் பலப்படுத்த நாம் தயாராக உள்ளோம். தமிழ் அரசியல்வாதிகள் இந்தச் செய்தியை வடக்குத் தமிழ் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். வெற்றிடங்கள் உள்ளன. அவற்றுக்குத் தமிழ் பொலிஸார் இணைத்துக் கொள்ளப்படுவதே ஆரோக்கியமானது - என்றார்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக வன்முறைகள் அதிகரித்துள்ளன. யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினமும் பல்வேறு இடங்களில் வாள்வெட்டுக் கும்பல்கள் தாக்குதல் நடத்தியிருந்தன. ஆவாக் குழுவுக்கு எதிராக மற்றொரு வாள்வெட்டுக் குழு துண்டறிக்கைகளையும் வீசிச் சென்றிருந்தது. (ற-31)

## திணைக்களங்கள்...

வடக்கில் முல்லைத்தீவு மாவட்டத்தின் அரைவாசிப் பிரதேசம் மகாவலி அதிகார சபையின் கீழ் கொண்டு செல்லப்பட்டுள்ளது. மாவட்ட செயலகம் அமைந்துள்ள பிரதேசம் மகாவலி அதிகார சபையின் கீழ் சென்றுள்ளது. 1985ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்தின் பெரும்பகுதி மகாவலித் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படுகின்றது என்று கூறப்பட்டது. இன்று வரை ஒரு சொட்டு மகாவலி நீர் கூட முல்லைத்தீவுக்கு வரவில்லை. அதை அங்குள்ள மக்கள் எதிர்பார்க்கவும் இல்லை. அங்கு நீர் வந்தால் ஏற்படும் நன்மைகளை விட அங்கு ஏற்படும் சிங்களக் குடியேற்றங்களை நினைத்து அந்த மக்கள் அச்சப்படுகின்றனர். 30 ஆண்டுகளில் பெரும்பகுதி நிலம் சிங்கள் குடியேற்றத்துக்கும், வாழ்வாதாரத்துக்கும் என்று கபளீகரம் செய்யப்பட்டுள்ளது. மகாவலி அதிகார சபை ஒரு தமிழனுக்குக் காணி அனுமதிப் பத்திரம் வழங்கியது என்றும் நாம் இதுவரை அறியவில்லை.

வன ஜீவராசிகள் திணைக்களம் ஒரு பக்கத்தால் தமிழரின் நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த நிலையில் தற்போது தொல்லியல் திணைக்களமும் அந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

தொல்லியல் திணைக்களம் முல்லைத்தீவு, கொக்குளாயில் உள்ள பிள்ளையார் ஆலயம் தொல்லியல் என்றது. பின்னர் அங்கே விகாரை அமைக்கப்படுகின்றது. மன்னார், திருக்கேதீஸ்வரம் தொல்லியல் என்றனர். அங்கு விகாரை அமைக்கப்படுகின்றது. தற்போது வவுனியா, ஆதிலிங்கேஸ்வரர் ஆலயப் பகுதி தொல்லியல் என்கிறார்கள். அங்கும் விகாரைதான் அமைக்கப்படும்.

நாம் விகாரைக்கு எதிரானவர்களோ, அல்லது நாட்டில் அமைக்கப்படும் விகாரைகளுக்கு எதிரானவர்கள் அல்லர். ஒரு பௌத்தன் கூட வாழாத எமது பிரதேசத்தை ஆக்கிரமித்து விகாரை அமைப்பதையே எதிர்க்கின்றோம். நாம் உங்களிடம் இது தொடர்பில் கூறினால், அதிகாரிகளிம் கூறக் சொல்கின்றீர்கள். அதிகாரிகளிடம் பேசினால் அவர்கள் உங்களைக் கைகாட்டுகின்றனர். இதுதான் நீண்ட நாள்களாக நடக்கின்றது.

நாம் இது தொடர்பில் தொடர்ந்தும் அமைதியாக இருக்க முடியாது. இவற்றை மக்கள் முன் பகிரங்கமாகக் கூற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமை தொடர்ந்தால் அது போராட்டங்களுக்கு இட்டுச் செல்லும் என்று அரச தலைவர் மைத்திரிபாலவிடம் சுட்டிக்காட்டினேன்.


அரதலைவர் மைத்திரிபால சிறிசேன தனது அமைச்சின் இராஜாங்க அமைச்சரை அழைத்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று கூறினார் - என்றார். (ற-105)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம். ஒக். 24
யாழ்ப்பாணம் தாச்சிச் சங்கம் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலிட்டி வானவில் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## போராடி வென்றது கலைமகள் அணி

யாழ்ப்பாணம். ஒக். 24
நாவற்குழி சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 57ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கச்சாய் கலைமகள் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கச்சாய் கலைமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து துர்க்கா விளையாட்டுக் கழக அணி மோதியது. 4:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கச்சாய் கலைமகள் அணி வெற்றி பெற்றது. (ம-23)



## றேஞ்சர்ஸ் அணி அரையிறுதிக்குள்

யாழ்ப்பாணம். ஒக். 24
கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் மணற்காடு சென். அன்ரனீஸ் அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி மோதியது. 5:3 என்ற கோல் கணக்கில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23)




# பற்றிசியன்ஸ் அணி அசத்தலான வெற்றி

யாழ்ப்பாணம். ஒக். 24
ஏபி விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பற்றிசியன்ஸ் அணி வெற்றிபெற்றது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றது. ஐவன் 38 ஓட்டங்களையும், கவாஸ்கர் 30 ஓட்டங்களையும், தனு 21 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாழினியன் 4 இலக்குகளையும் வினோத், கனிஸ்ரன் இருவரும் தலா இரு இலக்குகளையும் வீழ்த்தினர்.
144 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பரிஷ் அணி 17.2 பந்துப்பரிமாற்றங்களில் 111 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. இதையடுத்து 32 ஓட்டங்களால் வெற்றிபெற்றது பற்றிசியன்ஸ் அணி.
பந்துவீச்சில் நோபேட் 4 இலக்குகளையும், நிதர்சன், டனிசியஸ் இருவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர். சிறந்த வீரனாக பற்றிசியன்ஸ் அணியின் நோபேட் தெரிவானார். (ம-23)

## வென்றது கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகம்

யாழ்ப்பாணம். ஒக். 24
ஏபி விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அரியாலை மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை மத்திய விளையாட்டுக் கழக அணி 17.2 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கிருபாகரன் 38 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் அஜித் 4 இலக்குகளையும் மதுசன் 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.



86 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 14.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அஜித் 30 ஓட்டங்களையும், டிலோசன் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் சதீஸ் 4 இலக்குகளை வீழ்த்தினார். சிறந்த வீரனாக கிறாஸ்கொப்பர்ஸ் அணியின் அஜித் தெரிவானார். (ம-23)



## செந்தாரகை வி.கழகம் அரையிறுதிக்கு தகுதி

யாழ்ப்பாணம், ஒக். 24
கிராஞ்சி செந்தமிழ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் செந்தாரகை விளையாட்டுக் கழக அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
செந்தாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் செந்தாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொலி போய்ஸ் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் கோல்கள் எதுவும் பதிவுசெய்யப்படாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.
செந்தாரகை அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

## மெசியா அரையிறுதியில்

யாழ்ப்பாணம். ஒக். 24
கிராஞ்சி செந்தமிழ் விளையாட்டுக் கழகம் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் மெசியா விளையாட்டுக் கழக அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
செந்தாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் மெசியா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். பிலிப் விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:1 என்ற கோல் கணக்கில் மெசியா விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (ம-23)

# கோக்லியை கட்டுப்படுத்த முடியவில்லை

## ரூட் புலம்பல்

இந்திய அணியின் தலைவர் கோக்லிக்கு மிகவும் கட்டுக்கோப்பாகப் பந்து வீசுகிறோம். ஆனாலும் அவர் ஓட்டங்கள் எடுக்கும் வழியை அறிந்து விடுகிறார். அவரைக் கட்டுப்படுத்துவது சிரமமாகவுள்ளது என்று தெரிவித்தார் இங்கிலாந்து அணியின் தலைவர் ரூட்.

"கோக்லிக்கு இறுக்கமாகவும் கட்டுக்கோப்பாகவும் பந்துகளை வீசுகிறோம். ஆனால் அவர் ஓட்டங்களைக் குவிக்கும் வழியை, எம்மிடத்தில் உள்ள துவாரங்களை இலகுவில் கண்டுபிடித்து விடுகிறார். அடுத்தடுத்த ஆட்டங்களில் அவரைக் கட்டுப்படுத்த முயற்சிப்போம்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)




# பரிஸ்ரௌவுக்கு எலும்பு முறிவு

இங்கிலாந்து அணியின் இலக்குக் காப்பாளர் பரிஸ்ரௌவின் கையில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. இதனால் அவர் நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் களமிறங்குவாரா என்பது தொடர்பில் சந்தேகம் நிலவுகிறது.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்தது. இந்தியா வெற்றிபெற்றது. இந்த ஆட்டத்தில் பரிஸ்ரௌவின் கைவிரலில் காயம் ஏற்பட்டது. உடனடியாக அவர் வெளியேறினார். இதனால் இலக்குக் காப்பாளராக பட்லர் செயற்பட்டார். இந்த நிலையில் பரிஸ்ரௌவின் கையில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது என்று நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. இதனால் எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பமாகும் டெஸ்ட் ஆட்டத்தில் அவர் களமிறங்குவது சந்தேகமே. (ம)





# தொடரை வெல்வதில் கோக்லி உறுதிப்பாடு

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றும் நம்பிக்கை வெளிப்படுத்தினார் இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லி.

இந்திய அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்த மூன்றாவது ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெற்ற போதிலும் ஒட்டுமொத்தமாக 2:1 என்ற அடிப்படையில் இங்கிலாந்து அணி முன்னிலை வகிக்கிறது. தொடரில் இன்னும் இரண்டு ஆட்டங்கள் எஞ்சியுள்ளன. இரண்டிலும் வென்றாலேயே இந்திய அணியால் கிண்ணம் வெல்ல முடியும் என்கிற நிலைதான் உள்ளது. இவ்வாறிருக்க தொடரைக் கைப்பற்றும் நம்பிக்கையை வெளிப்படுத்தினார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.

"இந்த ஆட்டம் (மூன்றாவது ஆட்டம்) அனைத்து வகையிலும் சிறப்பாக அமைந்தது. லோட்ஸ் டெஸ்டில் மட்டுமே அனைத்து வகையிலும் நாம் வீழ்ந்தோம். எஞ்சியுள்ள இரண்டு ஆட்டங்களையும் கைப்பற்ற எத்தனிப்போம். தொடரை வெல்வதில் உறுதியாக உள்ளோம்" என்று கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

# குறிஞ்சிக்குமரன் அணி அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஓக. 24

கரவெட்டி உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

கரவெட்டி உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் குறிஞ்சிக் குமரன் அணியை எதிர்த்து கொலின்ஸ் அணி மோதியது. 3:1 என்ற கோல் கணக்கில் குறிஞ்சிகுமரன் அணி அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23)

# நான்காவது டெஸ்ட்டில் ஸ்ரோக்ஸ் சந்தேகம்

இந்தியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரரான பென் ஸ்ரோக்ஸ் விளையாடுவது சந்தேகம் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்திய அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்கள் முடிவடைந்துள்ள நிலையில் இங்கிலாந்து அணி 2:1 என்ற அடிப்படையில் முன்னிலையில் உள்ளது. நான்காவது டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்த ஆட்டம் இரண்டு தரப்புக்கும் மிகமிக முக்கியமான ஆட்டம். இந்நிலையில் பென் ஸ்ரோக்ஸ் முழக்காலில் காயமடைந்துள்ளார் என்றும் இந்தியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் அவர் விளையாடுவது சந்தேகம் என்றும் தகவல்கள் வந்துள்ளன. (ம)



# நீக்கப்பட்டார் முரளி விஜய்

இங்கிலாந்துக்கு எதிரான எஞ்சிய டெஸ்ட் ஆட்டங்களுக்கான இந்திய அணியில் இருந்து முரளி விஜய் நீக்கப்பட்டார்.

இங்கிலாந்துக்கு எதிரான முதல் மூன்று ஆட்டங்களுக்குமான இந்திய அணியே ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இறுதி இரண்டு டெஸ்ட் ஆட்டங்களுக்குமான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. இரண்டு மாற்றங்கள் செய்யப்பட்டன. இதன்படி துடுப்பாட்ட வீரர் முரளி விஜய், சுழல்பந்து வீச்சாளர் குல்தீப் யாதவ் ஆகியோர் நீக்கப்பட்டு பதில் வீரர்களாக பிரித்வி ஷா, ஹனுமா விகாரி ஆகியோர் அணிக்குள் உள்வாங்கப்பட்டனர்.

15 வீரர்கள் செய்யப்பட்ட பட்டியலில் மாற்றம் செய்யப்பட்டாலும் விளையாடும் பதினொருவர் கொண்ட பட்டியலில் எந்த மாற்றமும் செய்யாமல் மூன்றாவது டெஸ்ட்டுக்கான வெற்றிக்கூட்டணியை நான்காவது டெஸ்டிலும் அணித் தலைவர் கோக்லி கொண்டு வருவார் என்பது தான் பொதுவான கணிப்பாக உள்ளது. ஆனால் பந்துவீச்சு வரிசையில் சமி வெளியேற்றப்பட்டு உமேஸ் யாதவ் அணிக்குள் கொண்டு வரப்படலாம் என்றதொரு கருத்தும் நிலவுகிறது. (ம)

# ஆவரங்கால் மத்தி இறுதியில்

யாழ்ப்பாணம், ஓக். 24

மல்லாகம் சிறிமுருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ் மாவட்ட அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் மத்திய அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

சிறிமுருகன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி அணி மோதியது.

ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் இரு செற்களையும் 25:14, 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது வளர்மதி அணி. இதனால் எஞ்சிய மூன்று செற்களில் ஒன்றில் வெற்றிபெற்றாலும் வளர்மதி அணி இறுதிக்குச் செல்லும் என்ற நிலை இருந்தது. ஆனால் அடுத்த மூன்று செற்களையும் 25:16, 25:18, 25:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:2 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது ஆவரங்கால் மத்தி. (ம-422)



# மீண்டும் முதலிடம் பிடித்தார் கோக்லி

பன்னாட்டு கிரிக்கெட் சபை டெஸ்ட் ஆட்டங்களுக்கான தனது தரவரிசைப் பட்டியலைப் புதுப்பித்துள்ளது. இந்திய அணியின் தலைவர் கோக்லி துடுப்பாட்டத் தரப்படுத்தலில் முதலிடம் பிடித்தார்.

இங்கிலாந்து - இந்திய அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரின் மூன்றாவது ஆட்டம் முடிவடைந்ததுடன் இந்தத் தரப்படுத்தல் புதுப்பிக்கப்பட்டது. நொட்டிங்காமில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இந்திய அணி 200 ஓட்டங்களுக்கும் அதிகமான வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தியது. கோக்லி மிகச் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தினார். முதலாவது இன்னிங்ஸில் 97 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்ஸில் 103 ஓட்டங்களையும் அவர் பெற்றார். இந்த ஆட்டத்தின் நாயகனாகவும் கோக்லி தெரிவானார். இதனால் துடுப்பாட்டத் தரப்படுத்தலில் கோக்லியின் புள்ளிகள் உயரும் என்று கருதப்பட்டது. இதன்படி 937 புள்ளிகளுடன் அவர் முதலிடம் பிடித்தார். முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்திவந்த சிமித் 929 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்துக்குச் சரிந்தார்.

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டம் முடிந்த பின்னரும் கோக்லி முதலிடம் பிடித்தார். எனினும் இரண்டாவது ஆட்டத்தில் வெளிப்படுத்திய தடுமாற்றத்தை அடுத்து கோக்லி சரிவுகண்டார். மூன்றாவது ஆட்டத்தில் வெளிப்படுத்திய அபாரத் திறமையை அடுத்து மீண்டும் கோக்லிக்கு முதலிடம் கிட்டியது.

இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் இன்னும் 2 ஆட்டங்கள் எஞ்சியுள்ளன. அவற்றிலும் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தும் பட்சத்தில் டெஸ்டில் அதிக புள்ளிகளைப் பெற்றவர் என்ற புதிய உச்சத்தை கோக்லி பெறுவதற்கு வாய்ப்புள்ளது. பிரட்மன் பெற்ற 961 புள்ளிகள் என்ற புள்ளிகள்தான் டெஸ்ட் ஆட்டத்தில் அதியுச்ச தனிநபர் பெபேறாக உள்ளது. நியூசிலாந்து அணியின் தலைவர் வில்லியம்சன் 847 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், ஆஸ்திரேலிய வீரர் வோர்ணர் 820 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும் இங்கிலாந்தின் அணித் தலைவர் ரூட் 818 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும், உள்ளனர். ஆறு முதல் பத்துவரையிலான இடங்களில் புஜாரா, கருணாரத்ன, சந்திமல், எல்கர், மார்க்ரம் ஆகியோர் உள்ளனர்.



இதன்படி தரப்படுத்தலில் முதல் பத்து இடங்களுக்குள் உள்ள இலங்கை வீரர்களாக சந்திமல், கருணாரத்ன ஆகியோரே உள்ளனர். இவர்களைவிட குசல் மெண்டிஸ் 17ஆவது இடத்திலும், மத்தியூஸ் 23ஆவது இடத்திலும், டிக்வெல்ல 41ஆவது இடத்திலும், தனஞ்சய டி சில்வா 45ஆவது இடத்திலும், றோசன் சில்வா 70ஆவது இடத்திலும், தரங்க 73ஆவது இடத்திலும், குணதிலக 74ஆவது இடத்திலும், கௌசால் சில்வா 80ஆவது இடத்திலும், குசல் பெரேரா 89ஆவது இடத்திலும், டில்ருவான் பெரேரா 92ஆவது இடத்திலும், அசல குணரத்ன 99ஆவது இடத்திலும் உள்ளனர்.

(ம)

# கரவெட்டி ஞானம்ஸ்கிண்ணம் வென்றது



யாழ்ப்பாணம், ஓக். 24

அல்வாய் யுத் விளையாட்டுக் கழகம் நடத்திய 21 வயதுக்கு உட்பட்டோருக்கான துடுப்பாட்டத் தொடரில் கரவெட்டி ஞானம்ஸ் இளையோர் அணி சம்பியனானது.

யுத் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் இளையோர் அணியை எதிர்த்து சுப்பர் கிற் இளையோர் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சுப்பர் கிற் அணி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 51 ஓட்டங்களை பெற்றது. அதிகபட்சமாக வசி 24, அனோஜன் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் விதுசன் மற்றும் திவா ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் அணி 6.1 பந்துப் பரிமாற்றங்களில் ஓர் இலக்கை மாத்திரம் இழந்து 52 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. அதிகபட்சமாக வஜி 27, கௌசிகன் 20 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் அனோஜன் ஓர் இலக்கைக் கைப்பற்றினார். ஆட்ட நாயகனாகக் கரவெட்டி ஞானம்ஸ் அணியைச் சேர்ந்த வியாஸ்வரன், தொடராட்ட நாயகனாக கரவெட்டி ஞானம்ஸ் அணியின் விதுசன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

(ப-422)


விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900/=Kg
ஜேர்மனி-700/=Kg
நெதர்லாந்து-700/=Kg
0768226240
V2 TRAVELS

கருத்தரங்குகள்
இம்மாதமும் அடுத்தமாதமும் நடைபெறவுள்ள அனைத்து வேலைவாய்ப்பு போட்டிப்பரீட்சைகளுக்கான கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.
தொடர்பு - 076 688 3394

வாடகைக்கு
நல்ல நிலையில் உள்ள Hiace வாகனம் மாதாந்தம் / நாளாந்தம் வாடகைக்கு குறைந்த விலையில் விடப்படும்.
077 026 1966

தேவை
வவுனியாவில் தேனீர்ச்சாலையுடன் கூடிய வெதுப்பகம் ஒன்று நடத்துவதற்கு உகந்த இடம் தேவை.
தொடர்பு - 077 893 2908

றெண்டி மாபெரும் மலிவு விற்பனை
Trendy Mega Sale



கார்கில்ஸ் இல் அமைந்துள்ள Trendy காட்சியறையில் மாபெரும் மலிவு விற்பனை
ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான Trendy Disney ஆடைகள் மிக குறைந்த விலையில்
இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்
காலம் : ஆகஸ்ட் 23 தொடக்கம் 26 வரை
நேரம் : 8.30 தொடக்கம் மாலை 7.00 மணிவரை
அரிய சந்தர்ப்பம் தவற விடாதீர்கள்
அனைவரும் வருகை தந்து சலுகை விலையில் அள்ளிச் செல்லுங்கள்



Trendy Jaffna Outlet
கார்கில்ஸ் சதுக்கம் யாழ்ப்பாணம்.
021 221 7505


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
திருநாவுக்கரசு கணேசன்
(திருச்செந்தூரன் ரேடிங் கம்பனி - உரிமையாளர்)
தோற்றம் 06.08.1942
மறைவு 04.09.2017
திதி: திரியோதசி

ஆண்டு ஒன்று நகர்ந்து மறைந்திடினும்
ஆறுமோ வெந்துயர் அன்பு அப்பாவே!
மாண்டு விடவில்லை நீங்கள் எம்மனங்களில்
மறையாது என்றும் வாழ்கிறீர்கள் - எம்
உயர்வுக்கு உன்னத வழிகாட்டி வாழ்வை
அர்ப்பணித்த பாசத்தின் தீபமே
உங்கள் நினைவு எங்கள்
நெஞ்சங்களில் என்றும் நிலைத்து வாழும்.

334, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.


English Diploma
ஆங்கிலத்தினை அடிப்படையிலிருந்து முழுமையாக கற்க விரும்புவர்களுக்கும்
பல்கலைக்கு தெரிவாகியுள்ள மாணவர்களுக்கும்
ஆங்கில ஆசிரியராக வர விரும்புபவர்களுக்கும்
வெளிநாடு செல்ல உள்ளவர்களுக்கும்
H.N.D.E கற்கை நெறியினை பின் தொடர உள்ளவர்களுக்கும்

| | |
|---|---|
| Full Time - 6 Months, 4 Months, 3 Months, 2 Months | Reading, Listening, Writing, Speaking, Presentation Skills, Public Speaking |
| Part Time - 1 Year, 6 Months, 4 Months, 3 Months | |

New Batches 25 - 08 - 2018 (சனி) (Weekend) 9.00 am, 1.00 pm
Start on:- 27.08.2018 - (திங்கள்) 9.00 am, 1.00 pm, 3.00 pm
ELAS Sir Pon Ramanathan Road, Thirunelvely, Jaffna.(பல்கலை எதிரில்)
021 221 2410, 076 697 3040, 076 223 5676


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.